விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 23 செவ்வாய்க்கிழமை (06.06.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 169

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

## அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை

# எதிர்பார்ப்புக்களுடன் வடக்கு அமர்வு இன்று

## பலத்த விவாதத்துக்கும் வாய்ப்பு!

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு விசாரணையில், இரு அமைச்சர்கள் மீதான ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட்டு, அந்த அமைச்சர்கள் இருவரையும் பதவி விலக்குமாறு சுயாதீன விசாரணைக் குழு பரிந்துரை செய்துள்ள நிலையிலேயே வடக்கு மாகாண சபையின் இன்றைய அமர்வு பெரும் எதிர்பார்ப்புக்களுடன் ஆரம்பமாகின்றது. (23-ம் பக்கம்...)

## சந்தேக நபர் அடித்துக் கொலை

(பரந்தன்)

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரை சிறைக்காவலரும் கைதிகள் சிலருமே அடித்துக் கொன்றனர் என கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் சக சந்தேக நபர்களால் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது

கடந்த மாதம் குற்றச் செயலுடன் தொடர்புபட்டவர் எனும் சந்தேகத்தின் பெயரில் தர்மபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு நீதி 24

## கண்ணிவெடி அகற்றல்

(பச்சிலைப்பள்ளி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட 7.6 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்ற 23

## மூதூர் பாலியல் வன்முறை

## கைதான சந்தேக நபர்கள் அடையாளம் காணப்படவில்லை

(மூதூர்)

திருகோணமலை -மூதூர் பிரதேசத்தில் மூன்று பள்ளி மாணவிகள் பாலியல் வன்முறைக்குள்ளானதாக கூறப்படும் சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பில் பாதிக்கப்பட்ட மாணவிகளினால் சந்தேக நபர்கள் அடையாளம் காணப்படவில்லை.

கடந்த 29-ம் தேதி அந்த பிரதேசத்திலுள்ள அரச தமிழ் பாடசாலை ஒன்றில் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும் அறநெறி வகுப்புக்கு சென்றிருந்த 6 தொடக்கம் 8 வய்து 02

## இயற்கையை தவிர்த்தால் அனர்த்தம் அதிகரிக்கும்

### பிரதமர் ரணில் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

சுற்றுச்சூழலை பாதுகாத்தல் தொடர்பாக அரசாங்கத்துக்கு விசேட பொறுப்பு காணப்படுவதுடன் அதற்கு அனைத்து மக்களினதும் ஒத்துழைப்பும் அத்தியாவசியமானதாகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 23

## அனர்த்த உயிரிழப்புக்கு ரூ.10 இலட்சம் நட்டஈடு!

### மகிந்த அணி கோரிக்கை

(கொழும்பு)

அண்மையில் நாட்டின் தென் பகுதியில் இடம்பெற்ற வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களில் உயிரிழந்த ஒவ்வொருவருக்கும் குறைந்த பட்சம் பத்து இலட்சம் ரூபாயை நட்டஈடாக வழங்க வேண்டும் என்று மகிந்த அணியான பொது எதிரணி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இந்த வேண்டுகோள் தொடர்பில் பொது எதிரணி 23

## கத்திக்குத்தில் உயிரிழந்தவரின் சடலம் புதைப்பு

(கரணவாய்)

வடமராட்சி அல்வாய் பகுதியில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் உயிரிழந்த இளைஞனின் சடலத்தை புதைக்குமாறு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு நாவலர் தோட்டம் அல்வாய் வடக்கைச் சேர்ந்த கு.நிசாந்தன் (வயது-26) என்பவர் கத்திக்குத்து 23

## கர்ப்பிணி கொலை; மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறையில் கர்ப்பிணித் தாயொருவர் படுகொலை செய்யப்பட்ட சம்ப 23

## அனுர பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

முன்னாள் சிரேஷ்ட பிர 23

## துப்பாக்கி சூடு; ஒருவர் பலி

(கொழும்பு)

மட்டக்குளிய பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 24

## காணாமல் போனோர் அலுவலக சட்டமூலம் 22-ம் திகதி விவாதம்

(கொழும்பு)

யுத்தக்காலப்பகுதியிலும் அதன் பின்னரும் வலிந்து காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம் குறித்த சட்டமூலம் எதிர் வரும் 22-ம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற நாடாளுமன்றத்தை பிரதிநித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு இடையிலான சந்திப்பின் போது இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள் 23

## அரசியல் இலாபம் கருதியே மாவீரர்களுக்கு அஞ்சலி!

### த.தே.ம முன்னணி சாடல்



(யாழ்ப்பாணம்)

தாயக விடுதலைக்காக சாவினை தழுவிய 'மாவீரர்களின் கனவுகளை காற்றில் பறக்க விட்டு, அவர்களது உருவப்படங்களுக்கு அரசியல் இலாபம் கருதி மேற்கொள்ளப்படுகின்ற எந்த அஞ்சலிகளையும் அந்த ஆன்மாக்கள் ஏற்றுக்கொள்ளாது என தமிழ்த் 24

## அனர்த்த பாதிப்பு; ஜனாதிபதி கவனம்

(கொழும்பு)

வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் பாதிப்பிலிருந்து மீள்வதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனைக்கமைய தயாரிக்கப்படும் திட்டத்தை அமுல்படுத்துவதாக தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அடுத்த அமைச்சரவை கூட்டத்திலும், வார இறுதி தேசிய அனர்த்த முகாமைத்துவ பேரவை கூட்டத்திலும் அதுபற்றி 24

## இனவாத தூண்டிகள் கைது செய்யப்படுவர்

### அமைச்சர் எஸ்.பி எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் இனவாதத்தை தூண்டுவதற்கு யாராவது முயற்சி செய்தால் அவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என தெரிவித்த அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க,

இனவாதத்தை தூண்டுபவர்கள் மதத்தலைவர்களாக இருந்தாலும் சட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி ரிகில்ஸ் கஸ்கட பொரமடுல்ல மத்திய கல்லூரி 23

## மத வன்முறை செயற்பாடு

## ஐ.நா கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகிறது

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 35ஆவது கூட்டத் தொடர் இன்றைய தினம் ஆரம்பமாகவுள்ளது.


இந்த கூட்டத்தொடரில் இலங்கையில் தற்போது பேசப்படும் இடப்பெயர்வு. பெண்கள்-சிறுவர் உரிமைகள். சித்திரவதைகள் மற்றும் மத வன்முறை செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்படலாம் என 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி நித்தியானந்தன்

தோற்றம் : 10.10.1955 மறைவு : 28.05.2017



வடமராட்சி மேற்கு கரவெட்டி அத்துளு அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி பிராங்பேட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நித்தியானந்தன் அவர்கள் 28.05.2017 அன்று அம்மன் அடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மு.சின்னத்தம்பி சிவகாமி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் மகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் சுகிர்தராணியின் கணவரும் நிஷானி, நிரோசன், நிதர்சன், நிலக்சன் ஆகியோரின் அன்புத்தந்தையும் சி.இலட்சுமி (கனடா), சி.கிருஷ்ணபிள்ளை (கனடா), சி.கிருபானந்தன் (மன்னார்), ந.குணேஸ்வரி (அவுஸ்திரேலியா), சி.சர்வானந்தன் (அத்துளு அம்மன்கோவிலடி), கு.நற்குணராணி (அம்மன் கோவிலடி), ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 06.06.2017 செவ்வாய்க்கிழமை 3.00 மணியளவில் ஜேர்மனியில் நடைபெறும். அதேவேளை ஆத்ம சாந்தி பூசை அதே தினத்தன்று அவரது சகோதரன் சி.சர்வானந்தன் இல்லத்தில் (அம்மன் கோவிலடி) நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அத்துளு அம்மன் கோவிலடி,
கரவெட்டி கிழக்கு.

(C-8023)

தகவல் : குடும்பத்தினர்
077 076 2067

## அமரர் கந்தையா சந்திரசேகரம்

பிறப்பு 04 - 01 - 1936



இறப்பு 05 - 06 - 2017

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் இல.536, 7ஆம் யுனிற், இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சந்திரசேகரம் அவர்கள் நேற்று (05.06.2017) காலமானார்

அன்னார் பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும் சீதாஞ்சலியின் (ஆசிரியை - கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை) அன்புத் தந்தையும் தேசனின் (கிளி/முருகானந்தா ஆரம்ப வித்தியாலயம்) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2017) செவ்வாய்க்கிழமை மாலை 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் இராமநாதபுரம் பொது மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-8736)

## கைதான சந்தேக...

வரையான மூன்று மாணவியர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, அந்த பாடசாலை கட்டுமான தொழிலாளர்கள் உள்ளிட்ட அயல் பிரதேச நபர்கள் 5 பேரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்தனர்.

நேற்று திங்கட்கிழமை மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி ஐ..எம். ரிஸ்வான் முன்னிலையில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் ஐந்து சந்தேக நபர்களும் நிறுத்தப்பட்டிருந்தனர்.

அடையாள அணிவகுப்புக்கு வருகை தந்திருந்த பாதிக்கப்பட்ட மாணவிகளால் சந்தேக நபர்கள் எவரையும் அடையாளம் காட்ட முடியவில்லை.

அடையாள அணிவகுப்புக்கு பின்னர் பொலிஸாரால் மன்றில் ஆஜர்படுத்தப்பட்ட அந்த சந்தேக நபர்கள், நீதிமன்ற உத்தரவின்பேரில் எதிர்வரும் 12ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (செ-11)


## விற்பனையாளர் தேவை


எமது நிறுவனத்துக்கு புடைவை வியாபாரம் செய்வதற்கு ஆண்/பெண் விற்பனையாளர் தேவை. நேரில் வருகை தரவும்.

சிவகணேசன் ரெக்ஸ்

(9150) .41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.


## இதய அஞ்சலி

### அமரர் கதிரன் சின்னராசா



எமது பாடசாலை ஆசிரியர் **திருமதி அனுஷியா கமலக் கண்ணன்** அவர்களின் பாசமிகு தந்தை **அமரர் கதிரன் சின்னராசா** அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மலர்வு : 04.04.1945 உதிர்வு : 03.06.2017

கல்லூரிச் சமூகம்,
கிளி/முருகானந்தா கல்லூரி, முரசுமோட்டை

(C - 8731)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## மரண அறிவித்தல்

### நாகமணி அம்பலவாணர்

(உரிமையாளர் - கிருபா கிறைண்டிங் மில்)



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் புளியம் பொக்கணை சந்தி, பெரியகுளத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட நாகமணி அம்பலவாணர் (கிருபா கிறைண்டிங் மில் உரிமையாளர்) 04.06.2017 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி - நாகாத்தை தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் பொன்னம்மாவின் (கிளி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற காமாட்சியின் அன்புச் சகோதரனும் கலாராணி (பிரான்ஸ்), திருவாகரன் (கதிர்வேலான் - கிளிநொச்சி), சுசிலாதேவி (பெரியகுளம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்மசிவபாலன் (பிரான்ஸ்), சாந்தினி, தேவரூபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கமலாம்பிகை, இலட்சுமி வேலாயுதம், தியாகராசா, சண்முகரத்தினம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் மயூரன் - ரஜனி, சுதர்சன், அமரர் பாலசந்திரன் - நிலோஜினி, துசானி, லக்சாந், அபிவர்னா, பாலமுரளி - நிவிதா, நிசாந்தன், நிலோஜன், நிலுக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் சரினா, மானுசா, அனோஸ்கா, யஸ்னியா, பானுசன், நிலக்சி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2017) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பெரிய குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புளியம்பொக்கணை சந்தி,
பெரியகுளம்.

தொடர்புகளுக்கு:- 077 204 6803, 077 817 6351

தகவல்:
குடும்பத்தினர்

(C-8732)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரட்டைக் குழல் துப்பாக்கியாக சம்பந்தனும் விக்னேஸ்வரனும் மாற வேண்டும்

# இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இனியும் அரசை நம்பிப் பயனேதுமில்லை

## சிவாஜிலிங்கம் சுட்டிக்காட்டு




(யாழ்ப்பாணம்)

ஈழத் தமிழர்களுடைய இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இனிமேலும் இந்த அரசாங்கத்தை நம்பி பயனேதுமில்லை. எங்களுடைய விடுதலையை வென்றெடுக்க நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டிய முக்கியமான காலகட்டத்தில் இருக்கின்றோம் என தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம், தீர்வை வென்றெடுக்க தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் தமிழினத்தின் இரட்டைக் குழல் துப்பாக்கியாக மாற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலை போராட்டத்தில் ஆரம்பகால களச் செயற்பாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் சயனைட் அருந்தி வீரச்சாவை தழுவிக்கொண்ட தியாகி பொன்.சிவகுமாரனின் 43 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று உரும்பிராயில் அமைந்துள்ள அவரது உருவச்சிலையில் வடக்கு மாகாண எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா தலைமையில் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த நினைவு நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழினத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த மாணவர் சமுதாயத்திலிருந்து உருவாகிய தொரு விடுதலை உணர்வாளர்தான் பொன். சிவகுமாரன். அன்றைய பிரதமராக விருந்த சிறீமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரால் கொண்டு வரப்பட்ட தரப்படுத்தலுக்கெதிராக எழுச்சி கொண்ட மாணவர் சமுதாயத்தினால் உருவாக்கப்பட்ட தமிழ் மாணவர் பேரவையில் முக்கிய தலைவராக அவர் விளங்கினார். தியாகி சிவகுமாரன் தரப்படுத்தலுக்கெதிராக்ப் பாடசாலைகள் தோறும் பிரசாரம் மேற்கொண்ட காலத்தில் அந்தப் பிரசாரத்தினால் ஈர்க்கப்பட்டவர்களில் நானும் ஒருவன்.

1971 ஆம் ஆண்டு வல்வெட்டி சிதம்பராக் கல்லூரியில் அவர் நடத்திய பிரசாரத்தில் "இனிவரும் காலங்களில் இலங்கை அரசாங்கத்துடன் நாங்கள் அகிம்சை வழியில் போராட முடியாது. ஆயுத வழியில் தான் போராட முடியும்" என அவர் பிரசாரம் மேற்கொண்ட போது அந்தக் கல்லூரியில் நான் 9 ஆம் தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்தேன். அவரைப் பார்த்து ஆயுதங்கள் எங்கேயிருந்து வரும் எனக் கேட்டேன். அதற்கு அவர் கைக்கடிகாரங்கள், புடவைகள் என்பன வல்வெட்டித்துறைக்கு எவ்வாறு வருகிறது? அதே போன்று ஆயுதங்களையும் இங்கே கொண்டு வர முடியும் என்று கூறினார்.

தியாகி சிவகுமாரனும் காட்டிக் கொடுப்பினால் தான் உயிர் விட்டார். இந்தியாவிற்கு மயிலிட்டியூடாகப் படகில் பயணம் செய்வதற்குப் பணத்தை வாங்கியவர் ஏமாற்றி விட்டார். அதனால், அவர் மிகவும் துன்பப்பட்டார். அவர் இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாக அவரைச் சந்தித்து வல்வெட்டித் துறையூடாக உங்களை இந்தியாவிற்கு அழைத்துச் செல்கிறோம் என்று கூறிய போது தான் சில வேலைத்திட்டங்களைச் செய்ய வேண்டியுள்ளதாகவும், எங்களுடைய போராட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டும் எனவும் கூறினார்.

ஆனால் அவர் உயிர் துரதிஷ்டவசமாக பிரிந்து விட்டது. அவர் இறந்து மூன்றாம் நாளில் உரும்பிராய் வேம்பயன் மயானத்தில் தமிழ்த்தலைவர்களான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், வி. என். நவரத்தினம் உட்படப் பல்லாயிரக்கணக்கானோர் முன்னிலையில் அவரது பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்பட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதலாவதாகத் தனது இன்னுயிரை ஆகுதியாக்கி ஆரம்பித்து வைத்த அவரது தியாகம் பின்னர் ஆயுதப் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்தி ஆயிரக்கணக்கான மாவீரர்கள் தங்கள் இன்னுயிர்களைத் தியாகம் செய்வதற்கு வழி வகுத்தது.

அதன் பின்னர் தியாகி பொன்.சிவகுமாரனின் வழியில் ஆயுத விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திய விடுதலைப் போராட்ட முன்னோடிகளில் ஒருவரான தளபதி குட்டிமணி இராணுவத்தினரால் சித்திரவதை செய்யப்பட்ட போது "என்னைத் தூக்கிலிடுங்கள், ஆனால் என்னுடைய உடலை விடுதலைப்புலிகளிடம் கையளியுங்கள். ஒரு குட்டிமணி போனாலென்ன? இன்னும் நூற்றுக் கணக்கான, ஆயிரக்கணக்கான குட்டிமணிகள் உருவாகுவார்கள் என்று குறிப்பிட்டார். அதேபோன்று பின்னாளில் ஆயிரக்கணக்கான குட்டிமணிகள் எமது மண்ணில் உருவானார்கள்.

பொன். சிவகுமாரனின் முதலாவது ஆண்டு நினைவு நாளில் அவரது ஞாபகார்த்தமாக ஈழ விடுதலை இயக்கம் எனும் பெயரில் ஓய்வுநிலை நீதிபதி - தம்பித்துரையின் மகன் பொன். முத்துக்குமாரசாமியினால் அவரது உருவச்சிலை நிறுவப்பட்டது. இதன் பின்னர் இரு தடவைகள் அரச படைகள் அவரது உருவச்சிலையை இடித்துச் சேதமாக்கின.

ஆனால் தமிழ் மக்கள் விழ விழ எழுந்து நிற்பது போன்று சிவகுமாரனின் சிலையும் தற்போது கம்பீரமான முறையில் எழுந்து நிற்கிறது. ஆகவே, தமிழ் மக்களுடைய விடுதலைக்காகத் தன்னுயிரை ஆகுதியாக்கிய தியாகி சிவகுமாரன் ஆயிரக்கணக்கான மாவீரர்கள், இலட்சக்கணக்கான பொதுமக்கள் ஆகியோருக்கு நாங்கள் செய்யும் அஞ்சலி என்பது அவர்கள் விட்டுச் சென்ற விடுதலை உணர்வுகளை கனவுகளை வென்றெடுப்பதேயாகும். தமிழீழ தாயகத்தில் சுயாட்சியை நிறுவுவது தான் இதற்கான ஒரே 'வழி. தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்என அவர் வீர முழக்கமிட்டார். (இ-4)

## பலசேனா போராட்டம் கடைசித் தருணத்தில்

### ஞானசாரர் கூறுகிறார்

எமது போராட்டத்திற்கு இதுவே கடைசித்தருணமாக இருக்கும் எது வேண்டுமானாலும் நடக்கலாம் என ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளங்களில் வெளியான தேரரின் காணொலி ஒன்றின் மூலமாகவே இதனைக் கூறியுள்ளார். பௌத்தத்திற்காக குரல் எழுப்பிய எமது பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தி விட்டார்கள். இப்படியே செல்லுமாக இருந்தால் பௌத்தமே அழிந்துவிடும் நிலை ஏற்படும்.

இந்த போராட்டம் எமது கடைசி போராட்டமாக வேண்டுமானாலும் இருக்கக்கூடும். சிலவேளை மரணமும் ஏற்படக் கூடும். காரணம் அவர்களது அதிகாரம் மிகவும் பலம் மிக்கது. என்னை ஒன்றும் செய்ய முடியாது, நான் எவருக்கும் பயந்தவனும் அல்ல எத்தனை பொலிஸார் விஷேட பிரிவினையும் கூட வரச் சொல்லுங்கள் பார்த்துக் கொள்கின்றேன். இந்த நேரத்தில் அனைவரிடமும் நான்கேட்டுக் கொள்வது அவசிய மற்ற கலவரங்களில் குழப் பங்களில் ஈடுபடவேண்டாம் என்பதே. நான் அச்சமடைய மாட் டேன். பத்து பேர் இருந்தாலும் இந்த போராட்டத்தை கடைசி வரை முன்னெடுத்துக்கொண்டே செல்வோம்எனவும்ஞானசார தேரர் கூறியுள்ளார். (இ-3)

## பிரதமர் ரணிலுக்கு நல்லாசி வேண்டி ஜனாதிபதி தலைமையில் வழிபாடு



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு நல்லாசி வேண்டி கொழும்பு கங்காராம விகாரையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் வழிபாட்டு நிகழ்வொன்று நடைபெற்றது. சங்கைக்குரிய கலபொட ஞானேஸர தேரரின் வழிகாட்டலில் இந்த வழிபாடுகள் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ-3)

## பல்கலைக்கழகங்களில் நல்லிணக்க பாடத்திட்டம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள ஆறு பல்கலைக்கழகங்கள் மற்றும் பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம் என்பவற்றில் முரண்பாடு மாற்றம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான புதிய பாடத்திட்டத்தை அறிமுகம் செய்வதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமை தாங்கும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் (ONUR), பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் (UGC) இணைந்து உயர் கல்வி ஊடாக தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் எனும் திட்டத்தின் கீழ் 2018 முதல் பல்கலைக்கழகங்களில் நடைமுறைக்கு வரக்கூடிய வகையில் முரண்பாடு மாற்றம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான புதிய பாடத்திட்டத்தை அறிமுகம் செய்யவுள்ளது.

நாடு முழுவதுமிருந்து தெரிவு செய்யப்பட்ட 7 உயர் கல்வி நிலையங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மற்றும் நாட்டின் அனைத்து சமூக அறிவியல் பீடாதிபதிகள் உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகளின் பங்குபற்றலுடன் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் அண்மையில் கைச்சாத்திடப்பட்டது. (இ-3)

## நிவாரணப் பொருட்கள் திருட்டு கிராம சேவையாளர்கள் கைது

நிவாரணப் பொருட்களைத் திருடிய குற்றச்சாட்டின் பேரில் கிராம சேவகர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிப்பதற்காக வைத்திருந்த நிவாரணப் பொருட்களைத் திருடிய குற்றத்திற்காகவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனரென பொலிஸார் தெரிவித்தனர். (இ-3)

## வாழைப்பழ பொதியால் சர்ச்சை

### குற்றப் புலனாய்வுப் பிரிவில் அமைச்சர் கயந்த முறையீடு

வாழைப்பழ பொதி தொடர்பாக அமைச்சர் கயந்த கருணாதிலக குற்றப் புலனாய்வு பிரிவில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில், வாழைப்பழ பொதிகளில் தமது புகைப்படம் பொறிக்கப்பட்டவாறு பகிர்ந்தளிக்கப்பட்டதாக பேஸ்புக்கில் வெளியான புகைப்படம் தொடர்பாகவே அவர் இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை, அந்த வாழைப்பழ பொதியில், அமைச்சரின் கைத்தொலைபேசி இலக்கம் மற்றும் காலியிலுள்ள அவரின் இல்லத்தின் இலக்கம் என்பன பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்கள் இருவரும் பதவி விலக வேண்டும்!

## எதிர்க் கட்சித் தலைவர் - தவராசா வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

முறைகேடுகளில் ஈடுபட்டார்கள் என குற்றம் சாட்டப்பட்ட இரு அமைச்சர்களும் உடனடியாக பதவி விலக வேண்டும் என தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சி தலைவர் சி.தவராசா, விசாரணை குழுவின் அறிக்கைக்கு அமைய நடப்பேன் என முதலமைச்சர் ஏற்கனவே உறுதியளித்தது போன்று அதனை செயலில் காட்ட வேண்டும எனவும் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனால் ஓய்வு பெற்ற இரு நீதிபதிகள் மற்றும் ஓய்வு பெற்ற மாவட்ட அரச அதிபர் கொண்ட மூவர் குழு ஒன்று வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதெற்கென நியமிக்கப்பட்டிருந்தது.

இந்த குழுவின் அறிக்கை தற்போது ஊடகங்கள் வாயிலாக வெளியாகியுள்ள நிலையில், அதில் இரு அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட்டு, குற்றம் நிரூபிக்கப்பட இரு அமைச்சர்களும் பதவி விலக வேண்டும் எனவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண எதிர்க் கட்சி தலைவர் கருத்துக் கூறுகையில், மாகாண சபையின் ஆரம்ப காலம் தொடக்கம் என்னால் பல குற்றச்சாட்டுக்கள் அரசியல் ரீதியாக அமைச்சர்கள் மீது முன்வைக்கப்பட்டிருந்தன. தற்போது அந்த குற்றச்சாட்டுக்கள் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டு அவர்களுடைய பரிந்துரையிலே இரு அமைச்சர்கள் பதவி விலக வேண்டும் எனவும் கூறியுள்ளார்கள்.

இந்தியாவிலே ஒரு புகையிரதம் தடம் புரண்டால் தங்களுடைய அமைச்சு பதவிகளை அவற்றுக்கு பொறுப்பான அமைச்சர்கள் இராஜனாமா செய்வார்கள். தண்டவாளம் புரண்டதற்கு அந்த அமைச்சர்கள் பொறுப்பாக இல்லாவிட்டாலும், புகையிரதத்தை அமைச்சர்கள் செலுத்தாவிட்டாலும், ஒரு ஜனநாயக பண்பை அடிப்படையில், அமைச்சர்கள் பதவி விலகுகின்றனர்.

இதே போன்ற ஒரு ஜனநாயக பண்பை எங்களது வடக்கு மாகாண சபையின் குற்றம் நிரூபிக்கப்பட்ட இரு அமைச்சர்களும் வெளிப்படுத்த வேண்டும். ஆகவே உடனடியாக இருவரும் பதவி விலகி ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டும். அது தான் உண்மையான பண்பு.

இரு அமைச்சர்களில் ஒருவர் நிர்வாக ரீதியான துஷ்பிரயோகங்களும், இன்னொருவர் நிர்வாக ரீதியான துஷ்பிரயோகங்களுடன் நிதி துஷ்பிரயோகமும் நிரூபிக்கப்பட்டு இருப்பதனால் அவர்கள் கால தாமதம இன்றி உடனடியாக தமது பதவிகளில் இருந்து விலக வேண்டும். முதலமைச்சர் விசாரணை குழுவின் அறிக்கையின்படி நடப்பேன் என மாகாண சபையில் உறுதியளித்திருந்தார்.

அந்த உறுதிமொழியை காப்பாற்றுவார் என நான் நம்புகின்றேன். வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இந்த அமைச்சர்கள் மீதும், மாகாண சபையின் செயற்பாடுகள் மீதும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தேன். தற்போது அந்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் மாகாண சபையின் அங்கீகாரம் பெற்ற ஒரு விசாரணை குழுவால் ஆதாரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றார் தவராசா. (செ-4)

# பரிந்துரை குறித்து கருத்துரைக்க அமைச்சர்களுக்கு வாய்ப்பு தேவை

## சிறீதரன் எம்.பி கருத்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள இருவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அந்த அமைச்சர்கள் தமது கருத்துக்களையும் முன்வைப்பதற்கான ஜனநாயக உரிமைகளை வழங்க வேண்டும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறதரன் தெரிவத்துள்ளார். வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் ஓய்வு பெற்ற இரு நீதிபதிகள் மற்றும் ஓய்வு பெற்ற அரச அதிபர் கொண்ட மூவர் குழு ஒன்று வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் நால்வர் மீதான குற்றச்சாட்டுக்களையும் விசாரணை செய்வதெற்கென நியமிக்கப்பட்டிருந்தது.

இந்த சுயாதீன விசாரணைக் குழுவின் அறிக்கை தற்போது ஊடகங்கள் வாயிலாக வெளியாகியுள்ள நிலையில், அதில் இரு அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட்டு, குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் இரு அமைச்சர்களும் பதவி விலக வேண்டும் எனவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இது தொடர்பில் சிறீதரன் எம்.பி கருத்துக்கூறுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் வடக்கு மாகாண அமைச்சர்கள் மீது முன்வைக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு தமது பரிந்துரைகளை முன்வைத்துள்ளார்கள். குற்றச்சாட்டுக்களுக்கு அப்பால் பரிந்துரைகளை பரிந்துரை செய்ய வேண்டியதும்.



அந்த பரிந்துரைகள் தொடர்பில் தமது கருத்துக்களை முன்வைப்பதற்கான ஜனநாயக உரிமைகள் இந்த அமைச்சர்களுக்கு இருக்கின்றது. அந்த வகையிலே இந்த இரு அமைச்சர்களும் தமது நியாயபூர்வமான கருத்துக்களையும், தங்களுக்கு இருக்கின்ற தமது சாத்தியப்பாடுகளையும் வெளியிடும் போது அவை பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.

அதற்காக உடனடியாக அவர்கள் ராஜனாமா செய்ய வேண்டும் என்றோ அல்லது பதவிகளை துறக்க வேண்டும் என்பதோ கிடையாது தமிழர் தரப்பில் முதலாவதாக கிடைத்த வடக்கு மாகாண சபையின் ஆளுமையை இல்லாமல் செய்கின்ற வகையில் நாங்கள் கருத்துக்களை வெளியிட தேவையில்லை. காலம் அதற்குரிய பதிலை தரும் என்று நினைக்கின்றேன். இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உடனடியாகவே ஊடகங்களில் செய்தி வெளியிட முன்பாக அமைச்சர்களோடு கலந்துரையாடி இருந்தால் சில விடயங்களை தவிர்த்திருக்கலாம் என்று நான் நம்புகின்றேன். என அவர் மேலும் தெரிவித்தார். (செ-4)


உ

ஓம் சக்தி



# தீ மிதிப்பு

கந்தர்மடம் அரசடி வீதி

அருள்மிகு

செல்வநாகபூஷணி அம்பாள் திருக்கோவில்

**வைகாசி விசாக திருநாளில் 07.06.2017 புதன்கிழமை**
**ஏவிளம்பி வருடம் வைகாசி திங்கள் 24ம் நாள்**

அம்பிகை அடியார்களே!

அடியார்களின் துயர் துன்பங்கள், நோய் பிணி நீங்கவும், நாட்டில் அமைதி வேண்டியும் செல்வநாகபூஷணி அம்பாள் உபாசகரும் தொண்டரும் அவரின் ஆசியைப் பெற்ற தொண்டர்களும் வைகாசி விசாக திருநாளில் அம்பாளின் முன்னிலையில் தீ மிதிக்கவுள்ளார்கள். அடியார்களும் அதில் பங்குபற்றி அருளைப் பெற்றுய்யும்படி வேண்டுகின்றோம்.

**நிகழ்ச்சி**

- காலை 8.30 மணிக்கு பூசை, தொடர்ந்து பொங்கல் ஆரம்பம், தீ மூட்டுதல் நடைபெறும்.
- மாலை 4.00 மணிக்கு பூசை, தொடர்ந்து அம்பாள் வெளிவந்து தீ மிதித்தல் நடைபெறும். பின் அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெற்று பூசை நடைபெறும்.
- மறுநாள் 08.06.2017 வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு பொங்கல், 5.00 மணிக்கு பூசை நடைபெற்று அம்பாள் வீதி உலா வருதல் நடைபெறும்.

**குறிப்பு:**

**அடியார்கள் அம்பாளின் தீ மிதிப்புக்கு தங்களால் இயன்ற விறகு, பால், தயிர், இளநீர் முதலிய பொருளுதவியும் வழங்கி பங்குபற்றி அவள் [illegible] வேண்டுகின்றோம்.**

(9149)

**அம்பாள் அடியார்களும் ஆலய தர்மகர்த்தாவும்**



# முதலாம் ஆண்டு திவச ஆத்மசாந்தி அழைப்பு



ஓராண்டு கடந்ததடா உத்தமனே அஜந் – நீ
பார்போற்றப் பிறந்தனையோ என்றோ
நாமிருக்க – நீ
பலரும் பதை பதைக்க பாதியிலே பரலோகம்
சென்றதேனோ – மகனே
உத்தம நண்பர்களும் உறவுகளும்
இரத்தத்தை தானமாகியதேனோ
தரணியில் உன் நினைவிலே நாம் இருக்க
தங்கமே நீ தங்க சொர்க்கலோகம்
சென்றதேனோ அஜந்

அமரர்

## இராசநாயகம் அஜந் (தங்கம்)

தோற்றம் 01.05.1996 | மறைவு 19.05.2016

07.06.2017 புதன்கிழமை முதலாம் ஆண்டு ஆத்ம சாந்தி திவசக் கிரியைகள் 12.00 மணிக்கு நடைபெற்று அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வு நடைபெறும். அதில் கலந்து கொள்ளுமாறு பெரியோர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும் படி வேண்டிக் கொள்கிறோம்.

தில்லையம்பலப் பிள்ளையார் வீதி,
[illegible] கிழக்கு,
அல்வாய்

குடும்பத்தினர்

(C-8733)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்த பின்பும்கூட

# துர்ப்பாக்கிய சூழ்நிலைக்குள் தமிழ் சமூகம் தள்ளப்பட்டுள்ளது

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கவலை



(கொழும்பு)

**தமிழீழ விடுதலைக்காக தனது உயிரை ஆகுதியாக்கிய பொன்.சிவகுமாரனின் பாதையை நோக்கி தமிழ் தரப்பு தொடர்ந்து பயனிக்க வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆயிரக்கணக்கான போராளியையும் இலட்சக்கணக்கான மக்களையும் இழந்தும் கூட ஆரம்பப் புள்ளியிலேயே நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலைக்குள் தமிழ் சமூகம் தள்ளப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆரம்பகால களச் செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் சயனைட் அருந்தி வீரச்சாவை தழுவிக்கொண்ட தியாகி பொன்.சிவகுமாரனின் 43 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்றுக்காலை உரும்பிராயில் அமைந்துள்ள அவரது உருவச்சிலையில் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த நினைவு நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் தனது உயிரை ஆகுதியாக்கிய முதலாவது விடுதலைப் போராளி தனது 24 ஆவது வயதில் தன்னுயிரைத் துச்சமென மதித்து மக்களுடைய விடுதலைக்காக முன்னோடியாக இருந்து போராடிய ஒரு தியாகி. இவருக்கு பின் னர் ஆயிரக்கணக்கான போராளிகள் தமது உயிரை ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆகுதியாக்கியுள்ளனர்.

அவர்கள் எல்லோருக்கும் முன்னோடியாக இருந்ததோடு. ஈழ விடுதலைப் போராட்டத்தை ஆயுதப் போராட்டமாக மாற்ற வேண்டிய தேவையை உணர்ந்து செயற்பட்டவர் தான் பொன்.சிவகுமாரன்.

அநியாயங்களுக்கு எதிராக குரல் கொடுத்தது மாத்திரமல்ல. பொலிஸ் மற்றும் இராணுவத்தின் அடக்கு முறைகளுக்கு எதிராக் சினம் கொண்டு எழுந்து அதற்கு பதிலடி கொடுக்க வேண்டும் என புறப்பட்டவர் தியாகி பொன். சிவகுமாரன். 'அவர் இறந்து 43 வருடங்களின் பிற்பாடு' கூட இன்னும் நாங்கள் பழைய இடத்தில் இருக்கக் கூடிய சூழ்நிலையில் தான் இருக்கின்றோம்.

இந்த 43 வருட போராட்டத்தில் தமிழ் மக்களுக்கு இந்திய -இலங்கை ஒப்பந்தம் என்று ஒன்று வந் ததே தவிர அதுவும் ஒரு அரைகுறையான தீர்வாக உள்ள நிலையில். மாற்று சம்பவங்கள் வேறு எதுவும் நடைபெறாத நிலையில். பல ஆயிரக்கணக்கான போராளிகளையும். இலட்சக் கணக்கான மக்களையும் இழந்தும் கூட ஆரம்பப் புள்ளியிலேயே நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலைக்குள் தமிழ் சமூகம் தள்ளப்பட்டுள்ளது. ஆகவே இன்று தமிழ் மக்கள் எதிர் நோக்கக் கூடிய பல பிரச்சினைகள் பூதாகரமாக உருவெடுத்து நிற்கின்றன.

புதிய அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் வருமா? வராதா? என்ற கேள்விகள் ஒருபக்கம் இருக்க மக்கள் முழுமையாக மீள குடியேற்றப் படுவார்களா? காணிகள் விடுவிக்கப்படுமா? என்ற பல கேள்விகள் கேள்விகளாகவே இருக்கின்றன. ஆகவே இன்றைய சூழலில் அரசியல் ரீதியாகவும் சரி. ஏனைய விடயங்களிலும் சரி தமிழ் மக்கள் மேலும் மேலும் இழப்புக்கு உள்ளாகி வருகின்றனரே தவிர அவர்களுக்கான விமோசனம் இன்னமும் கிடைக்கவில்லை என்பது தான் உண்மை.

சிவகுமாரன் ஒரு போராட்டத்தின் உண்மையான வடிவமாக உள்ள நிலையில். அவருடைய நினைவு நாளில் எமது மக்களுடைய பிரச்சினைகள் எவ்வாறான நிலையில் உள்ளன என்பதனையும் நாங்கள் பார்க்க வேண்டும். எமது மக்களுக்கு முழுமையான தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டும். இவை அனைத்தும் எட்டப்பட்டால் தான் சிவகுமாரன் எதிர்பார்த்த சமத்துவமான. ஆரோக்கியமான சமூகத்தில் வாழக்கூடிய சூழ்நிலை ஏற்படும்.

நிச்சயமாக ஈழத்தமிழர்கள் இருக்கும் வரையில் தியாகி சிவகுமாரனின் நாமம் தொடர்ந்து கொண்டிருக்கும். அவர் தமிழர்களின் போராட்டத்திற்கு வழிகாட்டியாக் தொடர்ந்தும் இருப்பார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# கடவுச்சீட்டை இழந்தவர்கள் மீளப் பெற்றுக்கொள்ள முடியும்

## அமைச்சர் வஜிர அறிவிப்பு

(கொழும்பு)

அனர்த்தம் காரணமாக கடவுச் சீட்டுக்களை இழந்த பொதுமக்கள் மீண்டும் கடவு ச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ள முடியும் என உள் விவகார அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

பிறப்புச் சான்றிதழ். தேசிய அடையாள அட்டை. திரு மண பதிவுச் சான்றிதழ் ஆகிய வற்றை இழந்த போதும். அவசரமாக கடவுச்சீட்டு தேவைப் படுமாயின் பொது மக்கள் பிரதேச செயலகத்தின் உதவியுடன் கடவுச்சீட்டை பெற்றுக் கொள்ள முடியும் என அமைச்சர் கூறியுள்ளார்.

மேலும் அண்மையில் இடம்பெற்ற அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களே இவர்கள் என பிரதேச செயலகம் உறுதிப்படுத்தி கடிதம் ஒன்றை வழங்க வேண்டும்.

அதன் பின்னர். கடவுச்சீட்டு தேவைப்படுபவர்கள் கடவுச் சீட்டை பெற்றுக்கொள்ளலாம் என்றும் வஜிர அபேவர்தன தெரிவித் தார்.

சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந் துக் கொண்டு உரையாற்றும் போதே. அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (இ-3)

# ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வர வேண்டும்

சிறுவர்களுடைய ஆரம்ப கல்வி வளர்ச்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்து முன் பள்ளி ஆசிரியர்கள் அர்ப் பணிப்புடன் செயற்பட முன் வர வேண்டும் என வட மாகாண கல்வி அமைச் சின் ஆரம்பப் பிள்ளை பருவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் ஜெயா தம்பையா தெரிவித்துள்ளார்.

வடக்கில் உள்ள முன் பள்ளிகள் சில ஒழுங்கின்றி நடைபெற்று வருவதாகவும் சில முன்பள்ளிகள் இயங் காத நிலையில் காணப்படுவ தாகவும் அவை தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை என்ற பொதுவான குற்றச்சாட்டு தொடர்பில் அவரை தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

வடமாகாணத்தில் தற் போது ஆயிரத்து 702 முன் பள்ளிகள் இயங்கி வருகின்றன. அதில் மூவாயிரத்து 205 ஆசிரியர்கள் கடமை யாற்றி வருகின்றனர். முன் பள்ளிகள் காலை 8 மணி தொடக்கம் 11.30 மணி வரை நடைபெறுகிறது. பல முன்பள்ளிகள் வினைத்திறனான முறையில் இயங்கி வருகின்றன. ஆனால் சில முன்பள்ளிகள் தொடர்பில் எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவை தொடர்பில் நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம் இருப்பினும் வேறு சில முன்பள்ளிகள் தொடர்பில் முறைப்பாடுகள் எமக்கு கிடைப்பதில்லை அவ்வாறு கிடைக்கும் பட்சத்தில் அவை தொடர்பில் நடவடிக்கை எடுப் போம்.

எமது திணைக்களத்தினால் குறித்த ஆசிரியர்களுக்கு மாதாந்தம் தலா 4 ஆயிரம் ரூபாய் ஊதியமாக வழங்கப்படுகிறது. பெற்றோர்கள் நன்கொடையாக அளிக்கும் பணத்துடன் இணைத்து 10 ஆயிரம் ரூபாய் வரையில் அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும். ஆனால் சில முன் பள்ளிகளில் பெற்றோர்களால் நன்கொடைகள் வழங்கப்படுவதில்லை. பெற்றோரின் ஒத்துழைப்பும் கிடைப்பதில்லை. அதனால் சில ஆசிரியர்கள் கல்வி கற்பிப்பதற்கு பின் நிற்கும் நிலை ஏற்படுகிறது.

சில ஆசிரியர்கள் அர்ப் பணிப்புடன் நீண்டகாலம் சேவை யாற்றி வருகிறார்கள். அவ்வாறான ஆசிரியர்களே மாணவர்கள்நலனிலும்அக்கறைகொண்டு செயற்படுவார் கள். முன்பள்ளி சிறுவர்களின் கல்வி வளர்ச்சியில் முக்கியத்துவதை அறிந்தே ஆசிரியர்கள் கற்பிக்க முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## இராசி பலன்

06.06.2017
(வைகாசி 23, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
துவாதசி பிற்பகல் 1.39 மணிவரை
சுவாதி முன்னிரவு 10.13 மணிவரை
சுபநேரம் 10.22-11.52 மணிவரை
இராகுகாலம் 2.52-4.22 மணிவரை
பிரதோச விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சுக் | சூரி புத | செவ் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தராடம், ரேவதி | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மேடம்:** விருந்தினர் வருகையுண்டு, ஒரு கடனை அடைக்க மற்றுமொரு கடனை அடைக்கும் நிலை ஏற்படலாம், அதிர்ஷ்ட வாய்ப்புக்களை அமைத்துக் கொள்ள வேண்டிய நாள்.

**இடபம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், உடல் நலன் சீராகும், கடன் சுமை குறையும், வழிபாட்டால் சிறப்புக்கள் ஏற்படலாம்.

**மிதுனம்:** பிள்ளைகளின் வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வியாபார விருத்தியுண்டு.

**கடகம்:** விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும், தொழில் மேன்மையுண்டு.

**சிம்மம்:** அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், பகைவர்கள் விலகுவர், நண்பர்களினால் வளர்ச்சி கூடும்.

**கன்னி:** மக்கள் போற்றும் வாழ்வமைய வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்:** குடும்பத்தில் பெரியவர்களின் சொற்களைக் கேட்டு நடப்பீர்கள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரும்.

**விருச்சிகம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இம்பெறலாம், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், காரிய அலைச்சல்கள் இடம்பெறலாம்.

**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், உறவினர்களின் வருகையால் குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**மகரம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், செய் தொழில் மேன்மையுண்டு, கௌரவமான நாள்.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தொழிலில் உயரதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், இறைவழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்:** குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள் மனச் சோர்வுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகி சிவகுமாரனின் 43ம் ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிப்பு


(படங்கள் :உ.சாளின்)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆரம்பகாலகளச் செயற்பாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் சயனைட் அருந்தி வீரச் சாவை தழுவிக் கொண்ட முதற் தற்கொலைப் போராளியும் யாழ்.இந்து கல்லூரியின் மாணவனுமான தியாகி பொன். சிவகுமாரனின் 43 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று அவரது சொந்த ஊரான உரும்பி ராயில் அமைந்துள்ள உரு வச் சிலையில் அனுஷ்டிக்கப் பட்டது.

வடக்கு மாகாண எதிர்க் கட்சி தலைவர் சி.தவராசா தலைமையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகிய இந்த நினைவு நிகழ்வுகளில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், தருமலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன், பா.கஜதீபன், கே.என்.விந்தன், அ.பரஞ்சோதி ஆகியோரும் சிவகுமாரனின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வை அடுத்து முற்பகல் 11 மணியளவில் உரும்பிராய் வேம்பிராய் இந்து மயானத்தில் அமைந்துள்ள தியாகி பொன்.சிவகுமாரனின் நினைவுத்தூபியிலும் அஞ்சலிநிகழ்வுகள் நடைபெற்றிருந்தன. இந்த நிகழ்வுகளில் சிவகுமாரனின் சகோதரி மற்றும் சகோதரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)

## இராஜயோக நிலையம் புதிய கிளை திறப்பு

(வரணி)

பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தின் புதிய கிளை நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வரணி வடக்கு சிமிழ் கண்ணகி அம்மன் ஆலய வீதியில் திறக்கப்படவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலாளர் ந.ரஞ்சனா, சிறப்பு விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. ர.ரஞ்சினி, கௌரவவிருந்தினராகநெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர் கலாநிதி. எஸ்.சேதுராஜா ஆகியோர் கலந்துகொள்வர். (இ-5-103)

## பூட்டப்பட்ட நிலையில் மலசலகூடம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட வரணி பொது நூலகத்தின் மலசலகூடம் கடந்தவருடம்புதிதாக அமைக்கப்பட்ட போதும் பூட்டப்பட்ட நிலையிலுள்ளது.

இதனால் நூலகத்தை பயன்படுத்தும் மாணவர்கள், வாசகர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக தெரிவித்தனர்.

எனவே இது தொடர்பில் உரிய தரப்பினர் நடவடிக்கையெடுக்க வேண்டுமென சமூக ஆர்வலர்களும் வாசகர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-103)

## கும்பாபிஷேகம்

மாவை கலட்டி தெல்லிப்பழை கூட்டத்தார் ஸ்ரீ நாக பூஷணி அம்மன் ஆலய கும்பாபிஷேகம் நாளை 7 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறும்.

இதேவேளை நாளை ஆரம்பமாகும் அலங்கார உற்சவம் 11 நாட்கள் தொடர்ந்து நடைபெற்று 12 ஆவது நாள் ஸ்ரீ பிராங்கிளி பராசக்தி அம்மன் ஆலயத்திலிருந்தும் கதிர்காமக் கந்தன் ஆலயத்திலிருந்தும் பாற்குட பவனி காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (இ

## பாடசாலை மாணவர்களுக்கு சமய தீட்சை வழங்குதல்

பாடசாலை மாணவர்களுக்கு சமய தீட்சை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 30.06.2017வெள்ளிக்கிழமை 11 மணிக்கு நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் ஆலயத்தில் இடம் பெறவுள்ளது. இதில் 11, 13, 15 வயதுடைய மாணவர்களை பங்குபற்றுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா அறிவித்துள்ளார். (இ-3-136)

## வாக்குரிமை தொடர்பாக மக்களை விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டம்

## வரணியில் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வாக்காளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட தேர்தல் செயலகத்தினால் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்வு கடந்த 3 ஆம் திகதி சனிக்கிழமை வரணி பிரதேசத்தில் நடைபெற்றது.

இதன்போது ஒலிபெருக்கி மூலம் ஒவ்வொரு கிராமமாகச் சென்று வாக்குரிமை பற்றியும் வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டிருப்பதால் கிடைக்கும் நன்மைகள் தொடர்பாகவும் 18 வயது பூர்த்தியடைந்தவர்கள் கட்டாயமாக வாக்குரிமையைப் பெற வேண்டும் எனவும் அதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இதன் மூலம் வரணிப் பிரதேச மக்கள் பூரண விளக்கத்தை பெற்றதுடன் வாக்குரிமையின் முக்கியத்துவத்தையும் அறிந்து கொண்டனர். (இ-5-103)

## பாதசாரி கடவைகள் வெள்ளை நிறத்தில் மாற்றம்

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட வீதிகளிலுள்ள பாதசாரிகள் கடவைக்குரிய சமிக்ஞை கோடுகள் அனைத்தும் வெள்ளை நிறத்தில் மாற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் பாதசாரிக் கடவை சமிக்ஞை கோடுகள் அனைத்தும் மஞ்சள் நிறத்தில் அமைக்கப்பட்டிருந்தன. அண்மையில் பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கு அமைய மஞ்சள் கோடுகள் அனைத்தும் வெள்ளை நிறத்துக்கு மாற்றம் செய்யப்பட்டு வருகின்றன. இதன் மூலம் பாதசாரிகள் இலகுவில் அடையாளம் காணமுடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த வகையில் யாழ். மாநகர சபைக்குட்பட்ட வீதிகளில் கடந்த வாரத்திலிருந்து மஞ்சள் நிற கடவைகள் மாற்றப்பட்டு வெள்ளை நிறக் கோடுகளாக வடிவமைக்கப்பட்டு வருகின்றன. (இ-5-105)




## சைவநெறி ஆசிரியர்களுக்கான சைவநெறி பாட தர வட்டம்

(இருபாலை)

தரம் -11 மாணவர்களுக்கு சைவநெறி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சைவநெறி பாட தர வட்டம் நாளை புதன்கிழமை யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் பிற்பகல் 1.45 மணி முதல் மாலை 4 மணிவரை இடம்பெறும். இத் தர வட்டத்திற்கு வருகை தரும் போது முதலாம் தவணைப் பரீட்சையில் 59 புள்ளிகளுக்கு குறைவாகப் பெற்ற மாணவர்களின் பெயர்ப் பட்டியலையும் கொண்டு வருமாறு யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.எஸ். மாணிக்கராஜா அறிவித்துள்ளார். (இ-3-136)

## பாசையூர் கடற்கரைப் பகுதியில் கொட்டப்படும் கழிவுகளால் அவதி

யாழ். பாசையூர் கடற்கரையில் கொட்டப்படும் கழிவுப் பொருட்களால் கடற்கரைப் பிரதேசம் பாதிக்கப்பட்டு வருவதாக அப் பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பாசையூர் மீன்பிடித் துறையை அண்டிய பகுதியில் வீடுகள், கடைகளின் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுகின்றன. இதில் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்களும் தேங்குவதனால் கடற்கரைப் பகுதிகள் பாதிக்கப்படுவதுடன் குறித்த கடற்கரை பிரதேசத்தினூடாக பயணிக்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

எனவே இது தொடர்பில் உரியஅதிகாரிகள்நடவடிக்கை எடுத்து கழிவுப் பொருட்கள் கடற்கரைப் பிர தேசத்தில் கொட்டப்படுவதை முற்றாகத் தடுக்க வேண்டு மென அப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-105)

## கலந்துரையாடல்

ஊடக மறுசீரமைப்புக்களுக்கான செயலகம், ஊடாகக் கற்கைகள் - யாழ். பல்கலைக்கழகம், யாழ். ஊடக அமையம் இணைந்து நடத்தும் வடக்கு சமூகத்துடனான கலந்துரையாடல் நாளை மறுதினம் 8 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் இடம் பெறும்.

இதில் ஊடகங்கள் மற்றும் பெறுநர்களுக்கான உரிமைகள், செய்தி ஊடக தர நிர்ணயங்களுக்கான சுயாதீனப் பேரவைக்கான வரைபுச் சட்டம் என்பன பற்றி கலந்துரையாடப்படும். (இ



கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் தலைமைக் குரு பஸ்நாயக்க நிலமே டி.பி.குமாரகே உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தனர்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அவர்கள் முதலில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். கதிர்காம ஆலய நிர்வாகத்தினருக்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள சைவ முதல்வர்களுக்குமான கலந்துரையாடல் மிக நீண்ட காலத்துக்கு பின்னர் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்:- பொ.சோபிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனை அழைத்து வந்தவர் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர். எனினும் நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் முதலமைச்சராக வருவராயின் அது தமது அரசியல் எதிர்காலத்திற்கு ஆபத்தாக அமையும். விக்னேஸ்வரன் முதலமைச்சராகும்போது தமிழ்மக்கள் அவரையே ஏற்றுக்கொள்வர். இதனால் தமது செல்வாக்குச் சரிந்து போகும் என்பதை உணர்ந்துகொண்ட கூட்டமைப்பின் அரசியல்வாதிகள் சிலர், நீதியரசர் விக்னேஸ்வரனின் அரசியல் பிரவேசத்தை கடுமையாக எதிர்த்தனர்.

இதுபற்றிய சில முக்கிய விடயங்களை இத்தொடரின் ஆரம்பப் பகுதிகளில் பிரஸ்தாபித்திருந்தோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் விக்னேஸ்வரன் வருவது தமது இருப்பை விலத்துவதாகக் கூட இருக்கலாம் என்று கருதியவர்கள் விக்னேஸ்வரனைக் கடுமையாக எதிர்த்தாலும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் எடுத்த முடிவு என்பதால் தமது எதிர்ப்பை வெளிக்காட்டாமல் உள்ளறுப்புச் செய்வதிலேயே தீவிரம் காட்டினார்.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தரைப் பொறுத்தவரை தான் ஒரு முடிவை எடுத்தால் அதிலிருந்து பின்வாங்கும் இயல்பு அவரிடம் அறவே இல்லை என்பது அவருடன் கூட இருந்தவர்களுக்கு நன்கு தெரியும்.

அதேநேரம் தான் எடுத்த முடிவை தன்னோடு இருப்பவர்கள் எதிர்ப்பதையும் சம்பந்தர் விரும்பமாட்டார். ஆகையால் விக்னேஸ்வரன் அவர்களின் அரசியல் பிரவேசத்தை எதிர்த்தவர்கள் தமது எதிர்ப்பை சம்பந்தர் அறியாத வண்ணம்- சம்பந்தருக்குத் தெரியாத வகையில் செய்து கொண்டிருந்தனர்.



## வடக்கின் தீர்மானத்தால் கோபமுற்ற நல்லாட்சி

வடக்கு மாகாண சபைத் தேர்தல் முடிந்து நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று முதலமைச்சரான போது ஏற்கனவே அவரை எதிர்த்தவர்கள் தங்களுக்குள் ஒரு கூட்டை அமைத்துக் கொண்டு அவருக்கு எதிரான சதிவேலைகள் செய்யத் தயாராகினர்.

வடக்கின் முதலமைச்சருக்கு உதவி செய்து அவரைப் பலப்படுத்தி தமிழ் மக்களின் நலனைப் பாதுகாக்க வேண்டும் என்று நினைக்கவேண்டிய தமிழ் அரசியல்வாதிகள், முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு இடுக்கண் கொடுக்க முடிவு செய்ததுடன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலரை குழுவாக்கி அதன் மூலம் முதலமைச்சர் விக்னேஸ்வரன் வடக்கு மாகாண சபையை இயக்க முடியாத அளவில் இடையூறு செய்வதற்கான ஏற்பாடுகளும் முடுக்கிவிடப்பட்டன.

இந்தச் சதிவேலைகள் முதலமைச்சருக்கு நிறைந்த இடையூறுகளைக் கொடுத்தன என்பது மறுக்கமுடியாத உண்மை.

தவிர, நீதியரசர் விக்னேஸ்வரனை வடக்கு மாகாண சபைத் தேர்தலின் முதன்மை வேட்பாளராக அழைத்து வந்து, அவர் தேர்தலில் வெற்றி பெற்று முதலமைச்சரான போது அவரைக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை தனிமைப்படுத்திவிடும் வேலையைச் செய்தமை மிகப்பெரும் பாதகச் செயலாகும்.

முதலமைச்சரைத் தனிமைப்படுத்தும் சதி வேலையில் சம்பந்தர் அவர்களுக்கு உடன்பாடு இல்லையாயினும் பாண்டவர்களைக் காட்டுக்கு அனுப்பும் துரியோதனனின் துரோகத்தனத்திற்கு உடந்தையாக இருந்த திருதராட்டினன் போன்று கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் இவ்விடத்தில் இருந்தார் என்பதையும் சொல்லித்தானாக வேண்டும்.

வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்த பல சந்தர்ப்பங்களில் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை அவரைத் தனிமைப்படு த்தி விட்ட சம்பவங்கள் பலவற்றைக் கூறமுடியும்.

முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கருத்துடன் கூட்டமைப்பின் தலைமையும் சேர்ந்து இணைந்து குரல் கொடுத்திருக்குமாயின் அது தமிழ் மக்களுக்குச் சாதகமான முடிவுகளைத் தந்திருக்கும்.

எனினும் சுயநல அரசியல் ஆதாயத்திற்காக வடக்கின் முதலமைச்சரை வஞ்சித்தமையானது கூட்டமைப்பு தமிழ் மக்களுக்குச் செய்த மிகப்பெரும் கெடுதி எனலாம்.

வடக்கு மாகாணத்தில் தமிழர் அரசு மலர்ந்த போது வடக்கு மாகாண சபை கூடி ஈழத்தில் நடந்தது தமிழினப் படுகொலை எனத் தீர்மானம் நிறைவேற்றியது. இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதைத் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசு சொல்வதுதான் முறை. இங்கு நடந்தது இனப்படுகொலை என்பதை துணிந்து கூறுவதற்கு நாம் தயங்குவோமாக இருந்தால், இலங்கையில் தமிழினப் படுகொலை நடந்தது என்பதை வேறு யாராவது சொல்வார்கள் என எதிர்பார்ப்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

ஆக, வடக்கு மாகாண சபை கூடி ஈழத்தில் நடந்தது தமிழினப் படுகொலை எனத் தீர்மானம் நிறைவேற்றியது.

வடக்கு மாகாண சபை நிறைவேற்றிய இத்தீர்மானம் நல்லாட்சிக்கு உடன்பாடாக இருக்கவில்லை.

அவர்களைப் பொறுத்தவரை வடக்கு மாகாண சபை, இலங்கையில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டது எனத் தீர்மானம் நிறைவேற்றும் என எதிர்பார்த்திருந்தனரோ தெரியவில்லை.

தமிழர் அரசு என்றால் அவர்கள் தங்களுக்கு நடந்த அநீதியை, பேரிழப்பை , போர்க்கொடுமையை முன்வைத்தே தீர்மானத்தை நிறைவேற்ற முடியும்.

கூட்டமைப்பின் தலைவர்கள் சிலர் நல்லாட்சியோடு சேர்ந்து ஒத்து ஊதுகிறார்கள் என்பதற்காக நல்லாட்சிக்கு இசைந்த வண்ணம் தீர்மானம் எடுப்பதற்கு வடக்கு மாகாண முதலமைச்சரும் உறுப்பினர்களும் தமிழ்ப்பற்று இல்லாதவர்கள் அல்ல.

ஆக, ஈழத்தில் நடந்தது தமிழினப் படுகொலை என்ற தீர்மானத்தை வடக்கு மாகாண சபை ஏகமனதாக நிறைவேற்றிய போது நல்லாட்சி. குறிப்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடும் கோபமுற்றார்.

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத கசிப்பு விற்பனையாளர்களினால் வாழ்வாதாரம் பாதிப்பு; கள் விற்பனையில் வீழ்ச்சி

## கிளிநொச்சி பனை தென்னை வள தொழிலாளர்கள் கவலை



சட்டவிரோத கசிப்பு விற்பனையாளர்களினால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக கிளிநொச்சி பனை தென்னை வள தொழிலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்குட்பட்ட கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கிய பிரதேசங்களில் முப்பது கள் விற்பனை நிலையங்கள் சட்டரீதியான அனுமதிகளோடு இயங்கி வருகின்றன.

இதில், 650 இற்கும் மேற்பட்ட பனை தென்னை வள தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். குறித்த தொழிலாளர்கள் தாம் உற்பத்தி செய்யும் கள்ளை குறித்த நிலையங்களில் வழங்கியே பிள்ளைகளின் படிப்புச் செலவு தொடக்கம் அன்றாட வாழ்க்கைச் செலவு வரை அனைத்திற்கும் இந்த தொழிலையே நம்பி வாழ்கின்றனர். இவர்களின் உழைப்பை நம்பியே அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே, தாம் நாற்பது அல்லது ஐம்பது அடி உயரமான மரங்களில் ஏறி மிகவும் அபாயகரமான நிலையில் தொழிலில் ஈடுபட்டுவரும் நிலையில், சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் சட்டவிரோதமான கசிப்பு விற்பனையாளர்களினால் தமது குடும்பம் வாழ்வாதாரத்தினால். பாதிக்கப்பட்டு வறுமைக்கு தள்ளப்படும் அபாயம் காணப்படுவதாகவும் கூறியுள்ளனர்.

இந்த விடயம் சம்பந்தமாக கிளிநொச்சி பனை தென்னை வள அபிவித்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் எஸ்.துரைசிங்கத்திடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது அதிகரித்துக் காணப்படும் கசிப்பு மற்றும் கஞ்சா விற்பனையால் பனை தென்னை வள தொழிலாளர்கள் என்றுமில்லாதவாறு பாரிய நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். அதுமட்டுமல்ல கள் விற்பனையில் வீழ்ச்சி நிலையும் காணப்படுகிறது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி தொழிலாளர்கள் பாதிக்கப்படாத வகையில் செயற்றிட்டங்களை முன்னெடுத்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (2-312)

# தென்பகுதி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி



(பனிக்கன்குளம்)

தென்னிலங்கையில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முல்லைத்தீவு மாவட்ட முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம சகவாழ்வு சங்கத்தின் இளம் உறுப்பினர்கள் சேகரித்த ஒரு தொகைப் பணம் நேற்று முன்தினம் கொழும்பில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் இளம் உறுப்பினர்கள் வீடு வீடாகச் சென்று சேகரித்த 80 ஆயிரம் ரூபா நிதியை தேசிய சகவாழ்வு அமைச்சர் மனோகணேசனை நேரில் சென்று சந்தித்து கையளித்தனர்.

குறித்த நிதியை தென்பகுதி சிங்கள கிராமமொன்றின் அனாத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளுக்காக பயன்படுத்துமாறு அவர்கள் அமைச்சிடம் கோரினர்.(2-28)




# 13 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் 13 நீர்ப்பாசனக் குளங்கள் ஆழப்படுத்தி மண் அகற்றப்படும்

## கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு



(மல்லாவி )

மத்திய விவசாய அமைச்சின் 13 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட எட்டு கமநல சேவைகள் நிலையங்களின் கீழுள்ள 13 நீர்ப்பாசன குளங்கள் மண் வாரி ஆழப்படுத்தப்பட உள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் வே. ஆயகுலன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய விவசாய அமைச்சினால் நடப்பாண்டுக்குரிய நிதியொதுக்கீட்டின் மூலம் 13 மில்லியன் ரூபா நிதியில் தலா ஒரு குளத்திற்கு ஒரு மில்லியன் ரூபா வீதம்13 நீர்ப்பாசன குளங்களை ஆழப்படுத்தி மண்ணை அகற்றுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஆணைவிழுந்தான் குளம், நவனவெளிக்குளம், கொள்ளிச்சிக் குளம், வரகுக் காட்டுக் குளம், கல்விளான் குளம், மணல் குளம், நூணூவில் குளம், பறையன் குளம், கரந்தாய் 04 ஆம் துண்டுக் குளம், சிற்றூண்டிக் குளம், தாரிக் குளம், மருவிளாங் குளம், சின்ன அங்குவில் குளம் ஆகிய 13 குளங்களே மண் வாரிப் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# காட்டு யானைகள் தொல்லை; பயன்தரும் மரங்கள் அழிப்பு

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப்பிரதேசத்தின் மூன்று முறிப்பு கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து வருவதோடு தமது பயிர்ச்செய்கைகளையும் அவை அழித்து வருவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மூன்றுமுறிப்பு கிராமத்திற்குள் நேற்று முன்தினம் நுழைந்த காட்டுயானைகள் பெருமளவான தென்னை மரங்களை அழித்துள்ளன.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு, மூன்று முறிப்பு, வீரப்பிராயன் குளம், இளமருதன் குளம், மருதன் குளம் ஆகிய பகுதிகளில் காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் ஊருக்குள் புகும் காட்டு யானைகள் பெருமளவான பயன்தரு மரங்களையும் பயிர்ச்செய்கைகளையும் அழித்து வருவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (2)

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிளிநொச்சியிலிருந்து நிவாரணப் பொருட்கள்



(பரந்தன்)

நாட்டில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்களுக்கு உதவும் பொருட்டு கிளிநொச்சி மாவட்ட செயலகமும் பிரதேச செயலகங்களும் இணைந்து கிளிநொச்சி வாழ் மக்கள் மற்றும் வர்த்தகர்கள் வழங்கிய உணவுப்பொருட்களை அண்மையில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் சென்ற உத்தியோகத்தர்கள் காலி மாவட்ட செயலகத்தில் ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

உலர் உணவு, மருத்துவ பொதிகள் மற்றும் ஆடைகள் உட்பட்ட 15 இலட்சம் ரூபா பெறுமதிக்கு மேற்பட்ட நிவாரணப்பொருட்கள் மூன்று பார ஊர்திகளில் எடுத்துச் செல்லப்பட்டன.

இப்பெருந்தொகையான நிவாரணப்பொருட்களை வழங்கிய மாவட்ட மக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் இது ஒரு நல்லெண்ண செயற்பாடாக அமையும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார். (2-312)

# 18 வயதைக் கடந்தவர்களை வாக்காளராக பதிய வலியுறுத்தி முள்ளியவளையில் விழிப்புணர்வு



18 வயதுக்கு மேற்பட்டவர்களை வாக்காளர்களாகப் பதிய வலியுறுத்தி நேற்று முன்தினம் முள்ளியவளையில் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது.

"வாக்கு எங்கள் பலம், வாக்கு எங்கள் உரிமை" என்னும் தொனிப்பொருளில் 18 வயதைக் கடந்த தகுதியுடைய அனைவரையும் வாக்காளர்களாகப் பதியுமாறு வலியுறுத்தியே இப்பேரணி நடைபெற்றது .

வாக்காளர் தினத்தை முன்னிட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட கவனயீர்ப்பு ஊர்வலத்தில் வாக்காளர்களாகப் பதிவு செய்வதன் முக்கியத்துவத்தையும், வாக்களிப்பின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் திணைக்களத்தால் துண்டுப் பிரசுரங்களும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன. (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 90 ஆவது நாளைக் கடந்தும் தீர்வில்லை



(மல்லாவி )

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நேற்று திங்கட்கிழமை 90 ஆவது நாளாகவும் தீர்வு எதுவும் கிடைக்காத நிலையில் தொடர்ந்து முன்னெக்கப்பட்டது.

இந்த சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவுகள், மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இப்போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

தமக்கு சாதகமான பதில் கிடைக்கும் வரையில் தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (2-15)




# காலநடை மருத்துவ நடமாடும் சேவை வீடுகளுக்கு சென்று சிகிச்சை வழங்கல்



கால்நடை மருத்துவ நடமாடும் சேவை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை எழுதுமட்டுவாழில் நடைபெற்றது.

எழுதுமட்டுவாழ்ஸ்ரீ கணேச வித்தியாசாலையில் இடம் பெற்ற இச்சேவையை வடக்கு கால்நடைத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

யாழ். மாவட்டத்தில் வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் 16 வைத்திய நிலையங்கள் மட்டுமே இயங்கி வருகின்றன. கால்நடை வளர்ப்பாளர்கள் இம்மருத்துவ நிலையங்களுக்குக் கால்நடைகளைக் கொண்டுச் செல்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனைக்கருத்திற்கொண்டு வடக்கு மாகாண கால்நடை அமைச்சு கடந்தாண்டில் இருந்து கால்நடை மருத்துவ நடமாடும் சேவையை நடத்தி வருகிறது.

இதன் ஒரு கட்டமாகவே நேற்று முன்தினம் மீள்குடியேற்றப்பட்ட எழுதுமட்டுவாழில் கால்நடை மருத்துவ நடமாடும்சேவை நடைபெற்றது.

இதன்போது கால்நடைகளுக்கான மருந்துகள், கனியுப்புக்கலவைகள் பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதிக எண்ணிக்கையில் நாய்களுக்கான, கருத்தடை சிகிச்சைகளும் இடம்பெற்றுள்ளன. கால்நடை வளர்ப்பாளர்களின் முறைப்பாடுகளின் அடிப்படையில் வீடுகளுக்குச் சென்று சிகிச்சைகள் வழங்கப்பட்டதோடு, எழுதுமட்டுவாழில் இயங்கிவரும் பெரியளவிலான பாற்பண்ணையையும் மருத்துவ அதிகாரிகள் குழு சென்று பார்வையிட்டுள்ளது.

இந்நடமாடும் சேவையின் தொடக்க நிகழ்ச்சியில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் கேசவன் சயந்தன், விவசாய அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் சி.வசீகரன், உதவிப்பணிப்பாளர் வக்சலா அமிர்தலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (2-111)

## உலக சுற்றாடல் தினம்

# வடக்கு மாகாண நிகழ்வு எருமைதீவில் நடைபெற்றது

## மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன







(மல்லாவி)

உலக சுற்றுச்சூழல் தின வடக்கு மாகாண நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது. கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள எருமைதீவு எனும் பிரதேசத்தில் குறித்த நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, விவசாயஅமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, விவசாய அமைச்சின் செயலாளர், பூநகரி பிரதேச செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதன்போது நேற்றையதினம் மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன.

இந் நிகழ்வில் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், உரையாற்றுகையில்,

வடக்கு மாகாண அமைச்சின் கீழ் சுற்றுச்சூழல் அமைச்சு என்று பெயரளவில் மட்டுமே உள்ளது. ஆனால் அதற்கான எந்த ஒரு அதிகாரமும் கிடையாது. ஆளணி இல்லை. பொறுப்புக்கள் இல்லை. இவ்வாறு ஒரு வெறுமையான பெயரளவிலான அமைச்சாகவும் இன்று உள்ளது.

குறிப்பாக கிளிநொச்சியில் நிலத்தின் கீழ் உள்ள சுண்ணாம்பு பாறையை எடுப்பதற்கான முயற்சி முன்னெடுக்கப்பட்டது. அதை நாம் எதிர்த்தோம், மன்னாரில் பெரிய அளவிலான தோள் பதனிடும் தொழிற்சாலை நிறுவப்பட முயற்சி எடுக்கப்பட்டது. அதனையும் நாம் எதிர்த்தோம்.

நாங்கள் ஆரம்பத்தில் வடக்கு மாகாண சபையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் வடக்கு மாகாண சபையை ஏற்றுக்கொண்டு அதிகாரங்களை பெற்றுக் கொள்ள முடியும் என்ற எதிர்பார்ப்பிலேயே வடக்கு மாகாண சபையை ஏற்றுக்கொண்டோம். அதற்காக அரசு சொல்லும் அனைத்திற்கும் தலையசைக்க வேண்டியதில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து கல்வி அமைச்சர் த.குருகுலராஜா உரையாற்றுகையில்,

அண்மையில் மன்னார் பகுதியில் விளையாட்டு நிகழ்வொன்றிற்கு சென்றிருந்தேன். அங்கு விளையாட்டுக்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் வெடிச் சத்தங்கள் பாரிய அளவில் கேட்டன.

இராணுவத்தினரின் பயிற்சி [illegible] ஊடாக கேட்டறிந்து கொண்டோம். அங்கு பெரிய அளவிலான வெடிச் சத்தங்களும் அடிக்கடி கேட்பதாகவும் அறிந்ததாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறான பயிற்சி முகாம்களை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இதனை அடுத்து வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை உரையாற்றுகையில்,

எருமைதீவில் யானைகளும் உள்ளன. நீலப் பூனைகளும் உள்ளதாக கடற்படையினரை குறிப்பிட்டார். சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் ஊடாக முன்பள்ளி ஆசிரியர்கள் கல்வி கற்பிப்பது தொடர்பிலும் அவர் கருத்து தெரிவித்தார். இங்கு முப்படையினர் [illegible] அவர்கள் [illegible] வேண்டும்எனவும் அவர் தெரிவித்தார். (2-15)

# வாக்காளர் விழிப்புணர்வு ஊர்வலம்

பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட ரீதியான வாக்காளர் தினம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பூநகரி பிரதேச செயலக பிரிவு மாநாட்டு மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வு முன்னதாக பூநகரி வாடியடி நகர் சந்தியில் இருந்து வாக்காளர் விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெறும்.

இந்த ஊர்வலத்தில் பிரதேச செயலக அலுவலர்கள், பிரதேச செயலக சபை அலுவலர்கள், மாணவர்கள், பொது மக்கள் என பல தரப்பினரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் பாடசாலை ரீதியாக நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் பேச்சுக்கள், விநாடி வினா போட்டி, "வாக்கு உங்கள் எதிர்காலம்" எனும் தலைப்பில் கவியரங்கு ஆகியன நடைபெறும். (2-84)

# வற்றாப்பளை பொங்கல் தினத்தன்று முல்லை.பாடசாலைகளுக்கு விடுமுறை

(மல்லாவி )

வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் திருவிழாவை முன்னிட்டு முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகப் பிரிவிற்குட்பட்ட அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படுவதாக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உ.புவனராஜா அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் திருவிழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள் ஆகியோர் ஆலய வழிபாட்டினை மேற்கொள்வதற்கு ஏதுவாக எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படுகின்றது.

இந்த விடுமுறைக்கு பதில் பாடசாலையை எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை நடத்துவதற்கு ஏற்ற ஒழுங்கமைப்புக்களைச் செய்யுமாறு அவர் முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார். (2-15)

# 'நீந்திக் கடந்த நெருப்பாறு' ஆவணப்பதிவு நூல் வெளியீடு

தமிழர் தேசத்தின் மூத்த படைப்பாளி நா.யோகேந்திரநாதன் எழுதிய "பூநகரியில் இருந்து புதுமாத்தளன் வரை" என்ற "நீந்திக் கடந்த நெருப்பாறு" எனும் ஆவணப்பதிவு நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 10 சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சர் த.குருகுலராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாண விவசாய கூட்டுறவுத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ள உள்ளனர்.

"விடுதலை என்ற உன்னத இலட்சியத்தை அடைய நெருப்பாற்றை நீந்திய எமது மக்களின் வீரமும் தியாகமும் ஒளிவிடும் இலக்கியப் படைப்பு" ஆக இந்நூல் வெளி வருகின்றது.

இவ் வெளியீட்டு விழாவில் படைப்பாளிகள், தமிழ்த் தேசிய உணர்வாளர்கள், முன்னாள் போராளிகள் பல் துறைசார்ந்த அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (2-312)

# வவுனியா விபுலானந்தா கல்லூரியில் உலக சுற்றாடல் தினம் அனுஷ்டிப்பு

(குருமன்காடு)

வவுனியா விபுலானந்தா கல்லூரியில் உலக சுற்றாடல் தினம் பாடசாலை அதிபர் சு.அமிர்தலிங்கம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

பிரதம விருந்தினர்களாக மாவட்ட சுற்றாடல் ஆலோசகர் இ.மாதவன், தெற்கு கல்வி வலய சுற்றாடல் ஆலோசகர் ஏ.ஜெய்கீஸன், கோட்டக் கல்வி வலய சுற்றாடல் ஆலோசகர் ஸ்ரீரஞ்சன் மற்றும் மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

பாடசாலை பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் மாணவர்களின் விழிப்புணர்வு தொடர்பான பேச்சுக்கள், நாட்டியம், நாடகம் என்பன நடைபெற்றன.

இந்நிகழ்வில் பாடசாலை கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளுக்கென லண்டன் வீ-3 அமைப்பினர் கழிவகற்றும் வாளிகளை அன்பளிப்புச் செய்தனர்.


இதனை மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் வழங்க ஆசிரியர் குரூஸ் பெற்றுக்கொண்டார். அதிபர், விருந்தினர்கள் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெற்றன.

சூழல் தொடர்பான விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் எடுத்துச் செல்வதற்கு இந்த நிகழ்வு சிறந்த முறையில் அமைந்தது.

இதேவேளை, ஓவியம், கட்டுரை, கண்காட்சிப் போட்டிகள் ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன. (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழுத்து வலியும் அதற்கான தீர்வும்




கழுத்து வலியை சாதாரண வலி என்று நினைத்து விட்டாலோ அல்லது வெறும் வலி நிவாரண்ரிகள் எடுத்தாலோ நிச்சயம் கழுத்து வலி தொடர் கதையாகிவிடும்.

மனித உடலானது பல கோடி நரம்புகளாலும் தசைகளாலும் எலும்புகளாலும் பின்னப்பட்டிருக்கும். இயற்கையோடு ஒன்றிய இந்த மனித வாழ்வு இயற்கை சிகிச்சை முறைகளையே நாடுதல் நன்மை தரும். பொதுவாக அனைத்து வலிகளிலும் மிகவும் தொல்லை தருவது கழுத்து வலி தான்.

இதயத்தில் இருந்து மூளைக்கும் மூளையில் இருந்து உடம்போடு மற்ற இடங்களுக்கும் இரத்தத்தை கொண்டு செல்கின்ற நரம்புகள் கழுத்து பகுதியில் தான் உள்ளது. அந்த நரம்புகள் பாதிப்புக்குள்ளாகும்போது தான் கழுத்து வலி ஏற்படுகிறது.

அதனை சாதாரண வலி என்று நினைத்து விட்டாலோ அல்லது வெறும் வலி நிவாரணிகள் எடுத்தாலோ நிச்சயம் கழுத்து வலி தொடர் கதையாகிவிடும்.

சுளுக்கு என்று நினைத்து அடிக்கடி எண்ணெய் வைத்து தேய்த்து கொண்டிருந்தாலும் தலை சுற்றலில் கொண்டு போய்விடும். பெரும்பாலான கழுத்துவலிகள் கழுத்து எலும்பு தேய்மானம் என்றே எடுத்துக் கொள்ளப்படுகிறது.

ஆனால் உண்மை என்னவென்றால் கழுத்து தேய்மானம் மிகவும் வயதானவர்களுக்கே வரும். மற்றப்படி கழுத்து எலும்புகள், கழுத்து நரம்புகள் ஆகியவை சந்திப்புகளில் வரக்கூடிய பாதிப்புகளால் தான் வலி அநேக பேருக்கு வருகிறது.



சிலருக்கு கழுத்து தோள் பட்டை மற்றும் கைகள் வரை நீண்டவலி தென்படும். மேலும், மரத்துப் போகும். நடுக்கமும் ஏற்படலாம்.

பொருட்களை பிடிக்க வலுவில்லாமலும் போகக் கூடும். சிலருக்கு கடுமையான வலி ஏற்படலாம்.

## கழுத்துவலி இருப்பவர்கள்

கழுத்தை தவறாக பயன்படுத்தக்கூடாது. படுத்துக் கொண்டே ரி.வி. பார்க்கக் கூடாது. கடுமையான வேலைகளை தொடர்ந்து செய்யக் கூடாது. தலைக்கு சுமை தரும் வேலைகளை செய்தல் கூடாது. வண்டி செலுத்துதல், வீட்டு வேலை தொடர்ந்து மணிக்கணக்கில் செய்தல், கழுத்து வலியினை அதிகப் படுத்தும்.



பித்த உணவுகளை அதிகம் உண்பவர்கள், எண்ணெய் பதார்த்தங்களை உட்கொள்பவர்கள், நினைத்தவுடன் அதிகமாக மருந்து மாத்திரைகளை உட்கொள்பவர்களுக்குக் கூட அதிகமாக கழுத்துவலி ஏற்படும்.

உணவு முறைகளில் கவனம் இருத்தல் வேண்டும். மன அழுத்தம் கழுத்து வலியினை அதிகப்படுத்தும்.

## கழுத்து வலியை தவிர்க்க

கழுத்து தசைகளை பலப்படுத்தும் அதேநேரம் இறுக்கமான தசைகளை தளர்த்தும் பயிற்சிகளையும் தகுந்த ஆலோசனைப்படி செய்தல் வேண்டும். தூங்கும்போது மெலிதான தலையணை வைத்து தூங்க வேண்டும். தலையணை இல்லாமல் படுத்தாலும் கூட நரம்புகளில் அழுத்தம் தரலாம்.

கணனி பார்க்கும் போது, கண்களை விட 20 டிகிரி தாழ்வாகவும், கண்களில் இருந்து 20 இன்ச் இடைவெளி விட்டும் இருத்தல் வேண்டும்.

நேரம் கடந்து உணவினை எடுத்தல் கூடாது. அது ஜீரணமாகாமல் வயிற்றில் ஏற்படும் வாயுவினால் கழுத்தில் அழுத்தம் தரும். அதனால் எளிதில் ஜீரணமாகின்ற உணவினை எடுக்க வேண்டும். தசை நீட்டல் பயிற்சி செய்தல் வேண்டும். இது வயிற்றிலுள்ள வாயுவை போக்கி கழுத்து தசைகளை மென்மையாக்க உதவும்.

## இதற்கான சிகிச்சை முறைகளாக

தாய் உருவ சிகிச்சை, குத்தூசி சிகிச்சை, மாக்ஸா எனும் சூடு சிகிச்சை மற்றும் இதமாக அழுத்துதல் மூலமும் கழுத்து வலிக்கு மிக நல்ல நிவாரணம் தரும். அதிலும் "சிக், சாக்" எனப்படும் சிறப்பு உருவ சிகிச்சை மூலம் எலும்புகள், தசைகள் மற்றும் நரம்புகள் சந்திப்பில் உள்ள வலிகளைப் போக்கி இறுக்கத்தை குறைத்துவிடும்.

இரத்த ஓட்டம் சீரடைந்து வலிக்கு தீர்வு தரும். வெப்ப சிகிச்சை அளிக்கும் போது அழுத்தம் நீக்கப்பட்டு தசைகள் பலம் பெறும்.

மேலும், எங்களது சுசான்லி வைத்தியசாலையில் ஓரியண்டல் சிகிச்சையின் மூலம் 10 நாட்கள் சிகிச்சையில் பெரும் பலனை எதிர்பார்க்கலாம்.

யோகா முறைகளும் எளிய கழுத்து பயிற்சிகளும் உணவு முறைகளும் கற்றுத் தரப்படும். தசை நீட்டு பயிற்சியும் எளிமையாக கற்றுத் தரப்படும். இதனால் எவ்வித விளைவும் இன்றி சிகிச்சை நல்ல பலனை தரும்.




# வயிற்றுப் புற்றுநோயை தடுக்கும் சக்தி தக்காளிக்கு

வயிற்று புற்று நோயை தடுக்கும் சக்தி தக்காளிக்கு உண்டு என சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புற்று நோயை தடுக்கும் தக்காளி அன்றாட உணவில் முக்கிய பங்கு வகிக்கிறது. பெரும்பாலான உணவு வகைகளில் அது சேர்க்கப்பட்டு அதீத சுவை அளிக்கிறது.

இத்தகைய தக்காளியில் மருத்துவ குணம் உள்ளது. அதாவது வயிற்றுப் புற்று நோய் வராமல் தடுக்கும் சக்தி இருக்கிறது. இது சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இத்தாலியில் உள்ள ஆன்கோலஜி ஆய்வு மைய நிபுணர் டேனியலா பரோன் தக்காளி குறித்து ஆராய்ச்சி நடத்தினார்.

வயிற்றுப் புற்று நோயை 'மாலிக்னன்ட் செல்' எனப்படும் திசுக்களால் புற்று நோய் ஏற்படுகிறது.

அது பல திசுக்களுக்கும் மிதந்து சென்று அதில் பரவுகிறது. இதன் மூலம் புற்று நோய் வெகுவாக பரவுகிறது.

ஆனால் தக்காளிச் சாறுக்கு புற்று நோயை உருவாக்கும் திசுக்களை மேலும் வளரவிடாமலும், அவை பரவாமலும் தடுக்கும் சக்தி உள்ளது.





இதன் மூலம் வயிற்றுப் புற்று நோய் வராமல் தடுக்கப்படுகிறது. எனவே, உணவில் அதிக அளவு தக்காளி சேர்த்துக் கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிரங்க ஏல விற்பனை - 2017
## பருத்தித்துறை பிரதேச சபை - புலோலி.

பருத்தித்துறை பிரதேச சபை புலோலியிலும் குடத்தனை உப அலுவலகத்திலும் உள்ள பழைய கட்டுமானப் பொருட்களும் அலுவலக தளபாடங்கள், உபகரணங்களும் பகிரங்க ஏலத்தில் பின்வரும் திகதி, விபரப்படி விற்பனை செய்யப்படவுள்ளன. ஏல விற்பனையில் பொருட்களை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் மேற்குறித்த அலுவலகங்களில் ஏல விற்பனை நடைபெறும் நாளுக்கு முதல் நாள் காலை 9.00 மணி முதல் பி.ப 1.00 மணி வரை பொருட்களைப் பார்வையிடலாம். ஏல் விற்பனைப் பொருட்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப் பணத்தினையும் செலுத்தி பற்றுச் சீட்டினை பெற்று அன்றைய் தினம் மாலை 4.00 மணிக்கு முன்னர் பொருட்களை அவ் விடத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்

**ஏல விற்பனைத் திகதி 22.06.2017**
**வியாழக்கிழமை மு.ப 10.00 மணி**
**இடம் :- குடத்தனை உப அலுவலகம்,**
**பருத்தித்துறை பிரதேச சபை.**

| தொ .இல | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | நிலை | 07 |
| 02 | யன்னல் | 10 |
| 03 | கதவு | 14 |
| 04 | நிலை கதவு | 04 |
| 05 | யன்னல் நிலை | 33 |
| 06 | பனை மரம் - கைமரம் | 295 |
| 07 | பனை மரம் - வளைமரம் | 71 |
| 08 | முட்டுத் தடிகள் | 500 |
| 09 | முட்டு பலகை | 500 |
| 10 | ஓடு | 1800 |
| 11 | முகட்டு ஓடு | 63 |
| 12 | சீற் - 8', 10' | 55 |
| 13 | இரும்பு கேடர் (Truss) | 12 |
| 14 | தீராந்தி | 113 |
| 15 | தூண் (மரம்) | 12 |

**ஏல விற்பனைத் திகதி 23.06.2017**
**வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணி**
**இடம் :- வாகன தரிப்பிடம், ஆனைவிழுந்தான்.**
**பருத்தித்துறை பிரதேச சபை.**

| தொ. இல | விபரம் | அளவு. |
|---|---|---|
| 01 | ஆற்று மணல் | 7.64 கியூப் |
| 02 | சல்லி கல் ( கருங்கல்) ¾" | 10.01 கியூப் |
| 03 | பழைய இரும்பு | |
| 04 | அலுவலக தளபாடங்கள் | |
| 05 | அலுவலக உபகரணங்கள் | |
| 06 | பழைய ரயர்கள் | 15 |
| 07 | பழைய பற்றரிகள் | 09 |
| 08 | கணனிகள் | |

செயலாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி

(C-8727)


# நிவாரணப் பொருட்களுடன் வந்த சீனக் கப்பல்கள் நாடு திரும்பின

(யாழ்ப்பாணம்)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளுக்கு உதவியளிக்கும் வகையில் நிவாரணப் பொருட்களுடன் இலங்கைக்கு வருகை தந்த சீனக்கப்பல்கள் நாடு திரும்பின.

கடந்த மாதம் 31 ஆம் திகதி வருகை தந்த சீன இராணுவ கடற்படைக்குச் சொந்தமான "Chang Chun", "Jing Zhou" மற்றும் "Chao Hu" ஆகிய கப்பல்கள் நாடு திரும்பின.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்குவதற்காக 10 சிறிய படகுகள் மற்றும் ஐந்து மருத்துவ குழுக்களுடன் குறித்த கப்பல்களில் வருகை தந்த சீன கடற்படையினர் இலங்கை கடற்படையினருடன் இணைந்து நிவாரணம் மற்றும் மருத்துவ நடவடிக்கைகளில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.(இ-3)


டிஸ் dish ANTENNA SYSTEMS
அன்டெனா சிஸ்டம்



தங்கு தடையின்றி உங்கள் அபிமான டிவி சனல்களைக் கண்டுகளிக்கக்கூடிய டிஸ் அண்டெனா சிஸ்டம் குறைந்த விலையில் துல்லியமான ஓடியோ வீடியோ குவாலிட்டி மற்றும் SD/ HD தொழில்நுட்பத்துடன் கிடைக்கும்

Full System
4500 தொடக்கம்

Rs 350 தொடக்கம்
மாதாந்த செலவில்
(சி8730)

SATSTECH ENGINEERS
NO.300 K.K.S ROAD JAFFNA
PHONE 0212228812
Mob 071 0986224



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம் : அவிட்டம்
சூரிசெவ் 11 ல்
உயரம் : 5'2"
தகைமை/தொழில்: O/L/
சொந்ததொழில்
தொ.இ: B/6418

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்:பூராடம் செவ் 12 ல்
உயரம் : 5'3"
தகைமை/தொழில்: Diploma/
தனியார் தொழில்
தொ.இ: B/6419

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம் : அனுசம்
உயரம் : 5'4"
தகைமை/தொழில்: A/L/
அரசதொழில்
தொ.இ: B/6420

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்:மூலம்
கி.பா : 14 செவ் 2 ல்
உயரம் : 5'8"
தகைமை/தொழில்: O/L/
சொந்ததொழில்
தொ.இ: B/6421

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு : 1989 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா : 51 சூரிசெவ் 3 ல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: மிருகவைத்தியர்
தொ.இ: G/6463

பிறப்பு : 1991 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா : 14
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Accounting/
அவுஸ்ரேலியா
தொ.இ: G/6474

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம் : ரேவதி
உயரம் : 5'1"
தகைமை/தொழில்: A/L/
அரசதொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
விரும்பத்தக்கது
தொ.இ: G/6476

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
சூரிசெவ் 7 ல்
உயரம் : 5'6"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/6479

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.





வன்னிவிளாங்குளம்
# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய
# வருடாந்த பொங்கல் விழா

**09.06.2017 - வெள்ளிக்கிழமை**

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே

**அம்பிகை அடியார்களே!**

வன்னிவிளாங்குளம் பகுதியில் பன்னெடுங்காலமாக கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்மனின் வருடாந்த பொங்கல் விழா நிகழும் ஏவிளம்பி வருஷம் வைகாசித் திங்கள் 26ஆம் நாள் (09.06.2017) வெள்ளிக்கிழமை வழமைபோல் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

அன்று நண்பகல் அம்பாளுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் விசேட அபிஷேகமும் அலங்கார பூசைகளும் நடைபெறும். இரவு 9 மணியளவில் மடைப்பண்டம் எடுக்கும் நிகழ்வும் தொடர்ந்து பொங்கல் விழா நிகழ்வுகளும் நடைபெறும். அடியார்கள் பூசைக்குரிய அபிஷேகப் பொருட்கள், பூக்கள், பூமாலைகள் போன்றவற்றை தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:-

1. பொங்கல் தினத்தன்று விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது.
2. பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.
3. பொங்கல் தினத்தன்று வியாபார நிலையங்கள் அமைக்க விரும்புவோர் 07.06.2017 நண்பகல் 12.00 மணி தொடக்கம் தங்கள் பதிவுகளை பெயர்களை பதிவு செய்து உரிய பணத்தினை செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ள வேண்டும்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"

தொடர்புகட்கு:
077 595 6909 (தீபன்)

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய திருப்பணிச் சபை
வன்னிவிளாங்குளம், மாங்குளம்.

(C-8725)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெ - சசி நிறுவனங்களின் பின்னல் வலை

**(நேற்றைய தொடர்ச்சி)**

இந்நிறுவனங்கள் எல்லாவற்றுக்கும் தணிக்கையாளர் கே. சௌந்தர்வேலன். அவரது பதிவு அலுவலகம் கதவு எண் 16இல் இருக்கிறது. இந்த அடுக்ககத்தில் குடியிருப்பவர்கள் எதையும் பேச மறுத்துவிட்டனர். அக்கம் பக்கத்து வீடுகளில் இருப்பவர்கள், இந்தப் பெயரில் அங்கு யாருமே இல்லை என்று அடித்துக் கூறுகிறார்கள்.

மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் 'கியான்' அடுக்கக முகவரியிலிருந்து செயற்படலாம் என்று 'இதயம் ஹோம்ஸ் அண்ட் பில்டர்ஸ்' என்ற மர்ம நிறுவனம் எழுத்துபூர்வமாக ஒப்புதல் கடிதம் கொடுத்திருக்கிறது.

1996-க்குப் பிறகு இந்நிறுவனங்கள் உருவாகின. பெரும்பாலானவை தமிழக முதலமைச்சராக ஜெயலலிதா 2001இல் இரண்டாவது முறை பதவியேற்ற பிறகு ஏற்பட்டவை. வருவாய்க்குப் பொருத்தமில்லாத வகையில் சொத்துகளைக் குவித்ததாக ஜெயலலிதா, சசிகலாவுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது 1991-1996 காலத்துக்கானது. அந்த வழக்கில் தொடர்புள்ள நிறுவனங்கள் நமது எம்.ஜி.ஆர், ஜெயா பப்ளிகேஷன்ஸ், சசி என்டர்பிரைசஸ், ஆஞ்சநேயா பிரிண்டர்ஸ், ராமராஜ் அக்ரோ மில்ஸ், லெக்ஸ் பிராப்பர்டி டெவலப்மெண்ட் அண்ட் அதர்ஸ் ஆகியவை.

அன்றிலிருந்து சசிகலாவும் அவரது குடும்பத்தினரும் அடுத்தடுத்து சில நிறுவனங்களைத் தொடங்கினர். அவற்றில் பெரும் பாலானவை மர்மமானவை. அவற்றில் முதலீடுகள் செய்யப்பட்டதும் எடுக்கப்பட்டதும் ஏன் என்று வெளிப்பார்வைக்குத் தெரியவில்லை. இந்த வலைப்பின்னல் நிறுவனங்களைப் பற்றி மேலும் நமக்குத் தெரிவது.

மிடாஸ், ஜாஸ் தெரிந்ததே. மிடாஸ் கோல்டன் டிஸ்டில்லரீஸ் என்ற நிறுவனத்திடமிருந்து இந்த மர்ம வலைப் பின்னலைப் புரிந்துகொள்ள முடியுமா என்று பார்ப்போம். 14 ஆண்டுகளுக்கு முன்னால் தொடங்கப்பட்ட மிடாஸ் நிறுவனம் சசிகலா, இளவரசியுடன் அதன் இயக்குநர்கள் கே.எஸ்.சிவகுமார், கார்த்திகேயன் கலியபெருமாள் மூலம் தொடர்புள்ளது. இவ்விருவரும் இளவரசியின் மாப்பிள்ளைகள்.

ஜெயலலிதா முதலமைச்சராக இரண்டாவது முறை பதவியேற்ற ஓராண்டுக்குப் பிறகு 2002 ஒக்டோபரில் மிடாஸ் தொடங்கப்பட்டது. ஸ்ரீபெரும்புதூரில் அதன் பதிவு அலுவலகம் இருக்கிறது. 2009-10 முதல் இந்நிறுவனத்தின் பங்குகளை அதிகம் வைத்திருக்கும் இரு நிறுவனங்கள் ஹாட் வீல்ஸ் இன்ஜினீயரிங் (2005இல் தொடங்கப்பட்டது, 2013-14இல் ஜாஸ் சினிமாஸ் என்று பெயர் மாற்றப்பட்டது), சிக்னெட் எக்ஸ்போர்ட்ஸ், தலா 48.4% பங்குகளுடன். சிக்னெட் ஏற்றுமதி 2003 இல் தொடங்கியது.

நிறுவனங்களின் தொடக்கம், அமைப்பு, நடவடிக்கைகள், பங்கு முதலீடு, கடன் பெறுதல், கடன் தருதல் போன்ற எல்லா அம்சங்களும் ஒரே மாதிரியானவை! பெரும்பாலான நிறுவனங்கள் உண்மையில் எந்தவித களச் செயற்பாட்டையும் கொண்டவை அல்ல. மாருதி டிரான்ஸ்போர்ட்ஸ், பான்சி டிரான்ஸ்போர்ட்ஸ் விதிவிலக்கானவை. இவற்றில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.ஒரு இலட்சம் முதல் ரூ.5 இலட்சம் வரை. ஆனால் இதர முதலீடுகளும் கடன்களும் கோடிக்கணக்கில். இதன் பரிவர்த்தனைகள் விளங்கிக்கொள்ள முடியாதவை.

இந்த வலைப்பின்னலில் இடம்பெற்றுள்ள பல நிறுவ



னங்கள் வங்கியல்லாத அமைப்புகளிடமிருந்து அதிக கடனைப் பெற்றுள்ளன. அதே ஆண்டில் வெளி யாருக்குக் கடனும் முற்பணமும் கூட அதிகம் தரப்பட்டுள்ளன. வங்கியல்லாத நிறுவனங்களைப் பொறுத்தவரை இவை அசாதாரணமான நடவடிக்கைகள். மூலதனத்தை அதிகப்படுத்தினால் அதை அந்த நிறுவனத்திலேயே முதலீடு செய்வதுதான் வழக்கம். இந்த வலைப்பின்னலில் நான்கு நிறுவனங்களின் செயல்களை மட்டும் கவனமாக ஆராய்ந்தோம். அவற்றின் பரிமாற்றங்கள், விளக்கங்களுக்கு அப்பாற்பட்டவை.

### சிக்னெட் எக்ஸ்போர்ட்ஸ்

சிக்னெட் எக்ஸ்போர்ட்ஸ் என்ற நிறுவனத்தில் சசிகலாவும் ஸ்ரீஜெயா பைனான்ஸ் அண்ட் இன்வெஸ்ட்மென்ட்ல் நிறுவனமும் சம கூட்டாளிகள். அதன் நடப்பு இயக்குநர்கள் கலியபெருமாள், கே.எஸ். சிவகுமார். இந்நிறுவனம் எந்தத் தொழிலையும் செய்யவில்லை. ஆனால், வருமானத்தில் பெரும்பகுதி வங்கிகளில் போடப்பட்டிருக்கும் நிரந்தர வைப்புகளிலிருந்து கிடைக்கும் வட்டியாக இருக்கிறது. 2008-09 வரை இது செயலற்றுக் கிடந்தது. 2011-12 முதல் 2014-15 வரையில் இதனை விற்றுமுதல் ஏதுமில்லை. நிறுவனம் இழப்பையே சந்தித்தது (நிறுவனங்களின் பதிவாளர் அலுவலகத்திலிருந்து இந்தக் காலத்துக்கு மட்டும்தான் தரவுகள் கிடைத்தன).

அதே சமயம், ஸ்ரீஹரி சந்தனா எஸ்டேட்ஸ் போன்ற சசிகலா குடும்ப இதர நிறுவனங்களிடமிருந்து இதற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிறுவனமும் மாவிஸ் சாட் காம் (இது ஜெயா டி.வி. நிறுவனத்தை நடத்துகிறது) ஜாஸ் சினிமாஸ் ஆகிய நிறுவனங்களில் முதலீடு செய்திருக்கிறது. சென்னை வேளச்சேரியில் பீனிக்ஸ் மாலில் உள்ள லக்ஸி சினிமாஸ் என்ற பல்திரை அரங்கு ஜாஸ் சினிமாஸ் நிறுவனத்துடையது. லக்ஸியை சத்யம் சினிமாஸ் நிறுவனத்திடமிருந்து 2015இல் ஜாஸ் வாங்கியது. உரிமையாளரைக் கட்டாயப்படுத்தி வாங்கினார்கள் என்ற பேச்சுக்கூட அடிபட்டது. ஜாஸ் நிறுவனத்துக்கு இளவரசியின் மாப்பிள்ளைகள் இருவரும்தான் இயக்குநர்கள், இளவரசியின் 29வயது மகன் விவேக் ஜெயராமன் நிர்வாக இயக்குநர்.

2010-11இல் சசிகலாவும் ஸ்ரீஜயா பைனான்ஸ் அண்ட் இன்வெஸ்ட்மென்ட்ல் நிறுவனமும் தலா ரூ.1.1 கோடி, ரூ.1.2 கோடி கொடுத்து சிக்னெட் நிறுவனத்தின் 11 இலட்சம், 12 இலட்சம் பங்குகளை வாங்கினர். ஆனால் அந்தப் பங்குகள் அவர்களுக்கு மாற்றப்படவில்லை. 'பங்குகள் ஒதுக்கப்படுவதற்காக முற்பணமாகப் பெறப்பட்டது' என்று அத்தொகை குறிப்பிடப்பட்டிருக்கிறது. அடுத்த நிதியாண்டில் இப்படி ஒதுக்கப்படாமல், முன்பணமாகப் பெறப்பட்ட தொகை ரூ.5.72 கோடியாக இரட்டிப்பாகியிருக்கிறது. நமது எம்.ஜி.ஆர், ஜெயா பிரிண்டர்ஸ் மற்றும் இதர நிறுவனங்கள் ரூ.3.41 கோடியை வழங்கியுள்ளன.

2012-13 இல் பங்குகள் வழங்கப்படுவதற்காகத் தரப்பட்ட முற்பணம் ரூ.2.3 கோடிக்குக் குறைந்துவிட்டது. ரூ.3.41 கோடி நீண்ட காலக் கடன் தொகையாக மாற்றப்பட்டுவிட்டது. 2013-14இல் ரூ.5.72 கோடியான மொத்தத் தொகையுமே நீண்டகாலக் கடனாக மாற்றப்பட்டுவிட்டது. இதில் ரூ.5.23 கோடி மாவிஸ்சாட்காம் மற்றும் மிடாஸ் கோல்டன் டிஸ்டில்லரீஸ் நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டது. சசிகலா விடமிருந்தும் வேறு நிறுவனங்களிடமிருந்தும், பங்குகளை வாங்கும் சாக்கில் பணம் சிக்னெட் நிறுவனத்துக்குச் சென்று மீண்டும் மிடாஸ், ஜெயா டி.வி.க்கே திரும்பிவிட்டன.

### ஸ்ரீஜெயா பைனான்ஸ் அண்ட் இன்வெஸ்ட்மென்ட்ஸ்

ஸ்ரீஜெயா பைனான்ஸ் அண்ட் இன்வெஸ்ட்மென்ட்ஸ் நிறுவனம் சிக்னெட் எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் பெரும்பகுதி பங்குகளை வைத்திருக்கிறது அதன் மூலம் ஜாஸ் சினிமா விலும் பங்குகள் இருக்கின்றன. இந் நிறுவனத்தின் 90% பங்குகளை வைத்திருக்கும் இளவரசி இதன் உரிமையாளர். ஸ்ரீஜெயா பைனான்ஸ் அண்ட் இன்வெஸ்ட்மென்ட்ஸ் நிறுவனம் சசிகலாவின் வலையமைப்பில் உள்ள எல்லா நிறுவனங்களுடன் தொடர்புள்ளது. சசிகலா, இளவரசி, வி.என்.சுதாகரன் ஆகியோரை நிறுவனர் இயக்குநர்களாகக் கொண்டு இந்நிறுவனம் 1994 செப்டெம்பர் 6இல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. வி.எஸ். சிவகுமார், எஸ்.அனந்தராமன் என்ற இருவரும் செலுத்தப்பட்ட ரூ.1,000 முதலீட்டில் சம பங்கைச் செலுத்தியவர்கள்.

2003-04 முதல் 2012-13 வரையில் இந்த நிறுவனம் பங்குகள் கேட்டு பல்வேறு நிறுவனங்கள் அளித்த பணத்தைத் தொடர்ந்து பெற்று வந்துள்ளது. ஆனால், யாருக்கும் பங்குகளை வழங்கவில்லை. பங்குகளுக்கான விண்ணப்பத்தொகை என்றே பற்று-வரவு அறிக்கையில் அது தொடர்ந்து வரவு வைக்கப்பட்டிருக்கிறது. 2004 மார்ச் 31இல் ரூ.7.11 கோடியாக இருந்த விண்ணப்பத் தொகை 2013 மார்ச் 31இல் ரூ.11.43 கோடியாக உயர்ந்தது. 2013-14இல் இத்தொகை கடனாக மாற்றப்பட்டது. பங்குகளை வழங்குமாறு கேட்டு, பிறகு கடன் தந்தவர்களாக மாறிய நிறுவனங்கள் நமது எம்.ஜி.ஆர், ஜெயா பிரிண்டர்ஸ், ஸ்ரீஜெயா பப்ளிகேஷன்ஸ், ஜே ஃபார்ம் அவுஸ். இந்தக் கடனை வழங்கியவர்களுக்கு வட்டியே தரப்படவில்லை.

2005இல் இந்நிறுவனத்தின் பெயர் ஸ்ரீஜெயா பைனான்ஸ் அண்ட் இன்வெஸ்ட்மென்ட்ஸ் என்று மாற்றப்பட்டு, செலுத்தப்பட்ட மூலதனத் தொகை ரூ.ஒரு இலட்சமாக உயர்த்தப்பட்டது. வி.எஸ்.சிவகுமார், எஸ். அனந்தராமன் ஆகியோருக்கு இந்த மூலதனத்தில் 60.5%, 39.5% பங்கு. சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் விலகிய பிறகு இவ்விருவரும் நிறுவனத்தின் இயக்குநர்களாயினர்.

ஜெயலலிதா மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்ற பிறகு 2011-12இல் இந்த நிறுவனம் கடன்களை வாங்குவது, கொடுப்பது, சசிகலாவுக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் தொடர்புள்ள நிறுவனங்களில் முதலீடு செய்வது ஆகியவற்றில் ஈடுபட்டது. இந்த ஆண்டில்தான் ஜெயலலிதா ஸ்ரீஜெயாபைனான்ஸ் அண்ட் இன்வெஸ்ட்மென்ட்ஸ் நிறுவனத்துக்கு ரூ.1.92 கோடியையும் சசிகலாவுக்கு ரூ.10.5 இலட்சத்தையும் கடனாக அளித்தார்.

ராயல் வேலி ப்ளோரிடெக் எக்ஸ்போர்ட்ஸ் என்ற நிறுவனம் ரூ.45 இலட்சம் கடனை இந்நிறுவனத்துக்கு வழங்கியது. ராயல் வேலப் ளோரிடெக் எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் பங்குதாரர் என்று ஜெயலலிதா 2011இல் தேர்தல் ஆணையத்திடம் அளித்த பிரமாண வாக்கு மூலத்தில் தெரிவித்திருக்கிறார். ஸ்ரீஜெயா பைனான்ஸ் அண்ட் இன்வெஸ்ட்மென்ட்ஸ் நிறுவனம் இந்த நிதியாண்டில் செய்த முதலீடுகள் அனைத்தும் இதே குழுமத்தின் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த நிறுவனங்களில் தான். ஆவிரி பிராப்பர்டீஸ் (வி.எஸ். சிவகுமார், வி.ஆர். குலோத்துங்கன் இருவரும் சமபங்கு கூட்டாளிகள்) நிறுவனத்துக்கு ரூ. 3 கோடியும் ரிசார்ட்ஸ் நிறுவனத்துக்கு ரூ.1.39 கோடியும் ஹாட் வீல்ஸ் இன்ஜினீயரிங்குக்கு ரூ.1.36 கோடியும் கிடைத்தன. 2010-11இல் ஸ்ரீஜெயா மொத்தமாக ரூ.8.57 கோடியை குழுமத்தின் வெவ்வேறு நிறுவனங்களுக்கு வழங்கியது. இப்படிக் கடன் வாங்குவது, கொடுப்பதைத் தவிர வேறு எந்தச் செயலிலும் நிறுவனம் ஈடுபடவில்லை.

2013-14இல் வங்கிகளில் போட்டிருந்த டெபாசிட்டுகள் மூலமும் விவசாய நிலத்திலிருந்து குடிவாரத் தொகையாகவும் ஸ்ரீஜெயா நிறுவனம் ரூ.12.14 .லட்சம் ஈட்டியது. தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் இந்நிலம் வாங்கப்பட்டிருந்தது. 2014 மார்ச் 31இன் படி நிறுவனத்துக்கு ரூ.18.37 கோடி சொத்து இருந்தது. இது கடன்களும் முற்பணமும் அடங்கியது. ஹாட் வீல்ஸ், சிக்னெட் எக்ஸ்போர்ட்ஸ், மாருதி டிரான்ஸ்போர்ட்ஸ், ஆவிரி பிராப்பர்டீஸ் ஆகிய நிறுவனங்களுக்கு ரூ.10.81 கோடி வழங்கப்பட்டது. 2015 மார்ச் 31இன் படி இந்நிறுவனம் ரூ.15.97 கோடியைத் திரட்டியது. இதைப் பிற நிறுவனங்களுக்குக் கடனாகக் கொடுத்தது அல்லது பங்குகளில் முதலீடு செய்தது. ரூ.1 ஒரு இலட்சம் பங்கு மூலதனத் துடன் தொடங்கப்பட்ட ஸ்ரீஜெயா என்ற நிறுவனம் நிதியை ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு மாற்ற முகமூடி நிறுவனமாகச் செயற்பட்டது.

### பான்சி ஸ்டீல்ஸ்

குறுகிய காலக் கடன்கள், நீண்ட காலக் கடன்கள், முன் தொகை, ரியல் எஸ்டேட் முதலீடு, இதர பரிமாற்றங்கள் என்று ஒன்றுக்கொன்று தொடர்புள்ள நிறுவனங்களில் இப்படி பணம் வருவதும் போவதுமாக இருக்கும் நிலையில் ஒரு நிறுவனம் மட்டும் தனித்து நிற்கிறது. 2008 மே மாதம் தொடங்கப்பட்ட அபோஜி டெவலப்பர்ஸ் என்ற நிறுவனம் 2011இல் பான்சி ஸ்டீல்ஸ் என்று பெயர் மாற்றப்படும் வரையில் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. இந்த ஆண்டில்தான் பெரும்பான்மை வலுவுடன் ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வந்தார். 2011 நவம்பரில் நிறுவனத்தின் பெயர் மாற்றப்பட்டதோடல்லாமல் இரும்புக் கழிவு போன்ற பொருட்களை வாங்கி விற்கும் தொழிலில் ஈடுபடுவது என்றும் தீர்மானித்தது. அதே ஆண்டில் ஜெயலலிதாவின் தனி உதவியாளர் எஸ்எஸ் பூங்குன்றன் இந்நிறுவனத்தின் இயக்குநராக்கப்பட்டார்.

அதன் பிறகு அந்நிறுவனம் ஹுண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்திடமிருந்தும் வேறு இரு நிறுவனங்களிடமிருந்தும் பழைய இரும்பை வாங்கி விற்று ரூ.80.9 கோடி என்ற உயர் அளவை எட்டியது. (அவ்விரு நிறுவனங்களும் ஹுண்டாய் நிறுவனத்துக்கு உதிரிப்பாகங்களை விற்பவை.) அடுத்த ஆண்டிலேயே வியாபாரம் படுத்து நிறுவனத்துக்கு ரூ.2.5 கோடி இழப்பு ஏற்பட்டது. நிறுவனத்தின் விற்றுமுதல் வெறும் ரூ.1.17 கோடி.

பங்கு வாங்குவதற்கான பணமாகவும் கடனாகவும் வழக்கமாகப் பிற நிறுவனங்களுக்கு வருவதைப் போல இதற்கும் வந்து, அது பிற நிறுவனங்களுக்குக் கடனாகவும் சென்றது. வட்டியில்லாக் கடனாக, எந்த ஈடும் இல்லாமல் எவரிடமிருந்தோ ரூ.8 கோடியை இது கடன் வாங்கியது.

அதில் ரூ.3 கோடி எவருக்கோ கடனாகத் தரப்பட்டது. 2012-13இல் நிறுவனத்தின் வியாபாரம் சரிந்த பிறகும் இந்நிறுவனத்துக்குப் புதிதாக பங்கு முதலீட்டுத் தொகை கிடைத்தது.

அதன் செலுத் தப்பட்ட பங்கு முதலீடு ரூ. ஒரு இலட்சத்திலிருந்து ரூ.50. 51 கோடியாக உயர்ந்தது. முந்தைய நிதியாண்டு கடனாக வாங்கியிருந்த ரூ.8 கோடி திருப்பிச் செலுத்தப்பட்டு விட்டது அல்லது பங்குத் தொகையாக மாற்றப்பட்டது.

முதலிலிருந்த பங்குதாரர்களே கூடுதல் தொகையைக் கொண்டு வந்தார்களா, புதிய முதலீட்டாளர்கள் கிடைத்தார்களா என்று தெரியவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்சீனக் கடலில் செயற்கைத்தீவு சீனாவின் ஆக்கிரமிப்பை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது

## அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் காட்டம்

(சிங்கப்பூர்)

**தென்சீனக் கடலில் செயற்கைத்தீவுகளை உருவாக்கி இராணுவத்தளங்களை அமைத்து வரும் சீனாவின் செயற்கைகளை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாதென அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜிம் மேட்டிஸ் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.**

தென்சீனக் கடல் பகுதியில் உள்ள சில தீவுகளை சொந்தம் கொண்டாடுவதில் பிலிப்பைன்ஸ், வியட்நாம், சீனா ஆகிய நாடுகளுக்கிடையே பிரச்சினைகள் தொடர்ந்து வருகின்றன. இப்பிரச்சினை தொடர்பாக சர்வதேச தீர்ப்பாயத்தில் சில வழக்குகளும் நிலுவையில் உள்ளன.

இந்தக் கடல் பரப்பில் அவ்வப்போது இராணுவப் பயிற்சிகளை சீன அரசானது மேற்கொள்ளும். இதனால், சர்வதேச நாடுகளின் கண்டனத்திற்கு சீன அரசு ஆளாகும். மேலும், சர்வதேச நாடுகளின் கண்டனங்களை புறம் தள்ளிவிட்டு சீன அரசானது, கடல் பகுதிகளில் செயற்கைத் தீவுகளை அமைத்து, அத்தீவின் மீது இராணுவத் தளங்களை உருவாக்கி வருகின்றது.



இந்நிலையில், சிங்கப்பூரில் நேற்று முன்தினம் நடந்த ஷாங்ரி லா பாதுகாப்பு மாநாட்டில் பேசிய அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ஜிம் மேட்டிஸ், தென்சீனக் கடலில் இராணுவத் தளங்களை அமைத்துள்ள சீனாவுக்கு எச்சரிக்கை விடுத்தார். அதே நேரத்தில் வடகொரிய விவகாரத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக சீனாவை அவர் பாராட்டினார். ஈராக், சிரியா போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் மட்டுமன்றி, ஆசிய நாடுகளிலும் பயங்கரவாதிகள் ஒழிக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். (இ-3)

## லண்டன் தாக்குதலுக்கு ஐ.எஸ்.பொறுப்பேற்றது



(லண்டன்)

7 பேரை பலிகொண்ட லண்டன் தாக்குதலுக்கு ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளதாக, அந்த அமைப்புடன் தொடர் புடைய இணைய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

லண்டனில் உள்ள உலகப் புகழ்பெற்ற லண்டன் பாலத்தில் சென்று கொண்டிருந்த வான் ஒன்று பாலத்தில் நடந்து சென்று கொண்டிருந்தவர்கள் மீது மோதியது.

இதனையடுத்து மூன்று பேர் லண்டன் பாலத்திலிருந்து அருகிலுள்ள பரோ மார்க்கெட் என்ற பகுதிக்குள் கத்திகளுடன் ஓடினர். கண்ணில் தென்பட்டவர்கள் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 7 பேர் பலியாகினர். 48 பேர் காயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தாக்குதல்தாரிகள் மூன்று பேரையும் லண்டன் பொலிஸ் சுட்டுக் கொன்றது. தாக்குதல் பயங்கரவாத தாக்குதலாகவே கருதப்படுவதாக லண்டன் பொலிஸ் தெரிவித்தது.

இந்நிலையில், இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இந்த தகவலை ஐ.எஸ் அமைப்பின் ஆதரவு பெற்ற இணைய ஊடகம் செய்தியாக வெளியிட்டுள்ளது. எனினும், இந்த தாக்குதலில் ஈடுபட்டவர்கள் ஐ.எஸ் அமைப்பினர்தான் என்பதை லண்டன் பொலிஸார் உறுதியாக தெரிவிக்கவில்லை.

கடந்த மாதம் நடைபெற்ற மான்செஸ்டர் குண்டு வெடிப்புக்கும் ஐ.எஸ் அமைப்பு பொறுப்பேற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-3)




## லண்டன் தாக்குதல் குறித்து இதுவரை 12 பேர் கைது



(லண்டன்)

லண்டன் நகரில் நடந்த தாக்குதலில் 7 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதல் தொடர்பாக 12 பேரை லண்டன் நகர பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தாக்குதல்தாரிகள் மூன்று பேரையும் லண்டன் பொலிஸ் சுட்டுக் கொன்றது. தாக்குதல் பயங்கரவாத தாக்குதலாகவே கருதப்படுவதாக லண்டன் பொலிஸ் தெரிவித்தது.

இந்நிலையில், இந்த தாக்குதல் தொடர்பாக 12 பேரை கைது செய்துள்ளதாக லண்டன் நகர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-3)

## லண்டன் தாக்குதல்; நகர மேயரை சாடிய அமெரிக்க ஜனாதிபதி

(லண்டன்)

லண்டன் தாக்குதலையடுத்து மற்ற இடங்களை பாதுகாப்பதில் அலட்சியமாக இருப்பதாக லண்டன் மேயரை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சாடியுள்ளார்.

லண்டனில் உள்ள உலகப் புகழ்பெற்ற லண்டன் பாலத்தில் சென்று கொண்டிருந்த வான் ஒன்று பாலத்தில் நடந்து சென்று கொண்டிருந்தவர்கள் மீது மோதியது.

இதனையடுத்து மூன்று பேர்லண்டன் பாலத்திலிருந்து அருகிலுள்ள பரோ மார்க்கெட் என்ற பகுதிக்குள் கத்திகளுடன் ஓடினர்.

கண்ணில் தென்பட்டவர்கள் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 7 பேர் பலியாகினர். 48 பேர் காயம் அடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தாக்குதல்தாரிகள் மூன்று பேரையும் லண்டன் பொலிஸ் சுட்டுக் கொன்றது. தாக்குதல் பயங்கரவாத தாக்குதலாகவே கருதப்படுவதாக லண்டன் பொலிஸ் தெரிவித்தது.

இதனையடுத்து, லண்டன் நகர மேயர் சாதிக் கான், "மற்ற இடங்களுக்கு எச்சரிக்கை விட வேண்டிய அவசியமில்லை" என தெரிவித்திருந்தார்.

இதற்கு பதில் தெரிவிக்கும் விதமாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், "7 பேர் உயிரிழந்துள்ளனர். 48 பேர் காயமடந்துள்ளனர். ஆனால், லண்டன் மேயர் எச்சரிக்கை விடவேண்டிய அவசியமில்லை என்று சொல்கிறார்" என டுவிட் செய்திருந்தார். (இ-3)

## மலையில் மோதி விமானம் விபத்து 4 பேர் மரணம்

(டோக்கியோ)

ஜப்பான் நாட்டில் பனியால் மூடப்பட்டுள்ள வடக்கு ஆல்ப்ஸ் மலைப்பகுதியில் நேற்று முன்தினம் சிறிய ரக விமானம் ஒன்று மோதி விப்த்துக்குள்ளானது. இந்த விபத்தில் 4 பேர் பலியாகினர்.

இந்த விமானம் விபத்துக்குள்ளானது பற்றி தகவல் அறிந்து 14 மணி நேரத்திற்குப் பின்னர்தான் மீட்புப் படையினர் அங்கு சென்றடைய முடிந்தது. ஏனெனில் சம்பவம் நடந்த இடம் 2 ஆயிரத்து 300 மீற்றர் உயரம் உள்ள மலைப்பகுதி. அதுவும் பனி மூடி இருந்தது.

இடிபாடுகளில் நசுங்கிக் கிடந்த 4 பேரை அங்கிருந்து மீட்புப்படையினர் மீட்டு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். ஆனால் அவர்களை பரிசோதித்த வைத்தியர்கள், அவர்களது உயிர் ஏற்கனவே பிரிந்து விட்டதாகத் தெரிவித்தனர். (இ-3)

## கட்டார் நாட்டுடன் தூதரக உறவு ரத்து

### சவுதி, பக்ரைன், எகிப்து அறிவிப்பு



(ரியாத்)

கட்டார் நாட்டுடனான தூதரக உறவை துண்டிப்பதாக சவுதி அரேபியா, பக்ரைன், எகிப்து மற்றும் ஐக்கிய அரபு நாடுகள் நேற்று அறிவித்துள்ளன.

தீவிரவாதத்துக்கு ஆதரவாக செயற்படுவதாக கூறி கட்டார் நாட்டுடனான தூதரக உறவை துண்டிப்பதாக அந்நாடுகள் அறிவித்துள்ளன.

அதை தொடர்ந்து கட்டார் நாட்டின் விமானங்கள், கப்பல்கள் மேற்கண்ட நாடுகளுக்கு வரத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பக்ரைன் நாட்டில் இருந்து கட்டார் நாட்டின் கப்பல்கள், விமானங்கள் 2 வாரங்களில் வெளியேறவும் உத்தர விடப்பட்டுள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகுமாரனின் இலக்கை அடைய அனைவரும் ஒன்றுசேர்ந்து பணியாற்ற வேண்டும் -மாவை



(யாழ்ப்பாணம்)

தியாகிபொன்.சிவகுமாரனின் இலக்கை அடைவதற்கு நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பணியாற்றுவதாக அவரது நினைவு தினத்தில் உறுதி எடுத்து கொள்வோம் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலை போராட்டத்தில் ஆரம்பகால களச் செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் சயனைட் அருந்தி வீரச்சாவை தழுவிக்கொண்ட முதற் தற்கொலையாளரும் யாழ்.இந்து கல்லூரியின் மாணவனுமான தியாகி பொன்.சிவகுமாரனின் 43 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று அவரது சொந்த ஊரான உரும்பிராயில் அமைந்துள்ள உருவச்சிலைக்கு முன்பாக வடக்கு மாகாண எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா தலைமையில் முற்பகல் 10 மணியளவில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. இந்த நினைவு நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழர்களின் போராட்ட வரலாற்றில் இன்றைய தினம் ஜூன் -5 மிக முக்கியத்துவம் வாய்ந்த தினமாகும். தனிச் சிங்கள சட்டத்திற்கு எதிராக தந்தை செல்வா ஆரம்பித்த சத்தியாக்கிரக நாளை நினைத்து அதற்கான நினைவு அஞ்சலியை செலுத்தினார்கள். இப்போது தம்பி சிவகுமாரன் நினைவு தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போது அன்றைய அரசாங்கத்தின் பொலிஸார் துப்பாக்கி வேட்டுக்களை மின்சார கம்பிகள் மீது தீர்த்தனர்.

இதனால் இந்தியாவிலிருந்தும்வெளிநாடுகளில் இருந்தும் வந்த பேராசிரியர்கள் மற்றும் ஆர் வலர்கள் உட்பட பத்துப் பேர் கொல்லப்பட்டார்கள் என்பதை நாங்கள் மறந்து விடவில்லை. அதற்கு பின்னர் தம்பி சிவகுமாரன் மிகவும் ஆவேசப்பட்டவராக, துடிப்புள்ளவராக எங்கள் மத்தியில் பேசிக்கொண்டு இருப்பார். தம்பி சிவகுமாரன் தன்னை ஆகுதியாக்கிய இத் தினத்தில் மலர் அஞ்சலி செலுத்தி வணங்கி நிற்கின்றோம். இந்த நாளை ஒருபோதும் எங்கள் நெஞ்சங்களில் இருந்து நீக்கிவிட முடியாது.

இந்த ஜூன் ஐந்தாம் திகதியில் அப்போது பிரதமராக இருந்த பண்டாரநாயக்க தனி சிங்களச் சட்டத்தினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். அந்த தனி சிங்கள சட்டத்திற்கு எதிராகவும் தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்கக் கோரியும் தந்தை செல்வாவின் தலைமையிலே காலிமுகத்திடலிலே பாராளுமன்றத்திற்கு முன்னாள் மக்கள் அணி திரண்டு சத்தியாக்கிரக போரட்டத்தில் ஈடுபட்டதையும் நாங்கள் நினைவு கூர வேண்டும்.

சத்தியாக்கிரக போராட்டம் நடைபெற்ற பின்னர், தமிழாராய்ச்சி மாநாடு படுகொலையினால், அரசின் நடவடிக்கைகளினால் ஆயுத போராட்டத்திற்குள் ஈடுபட்ட சிவகுமாரன் தமிழீழ விடுதலை போராட்டத்தின் போது இலங்கை பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில், தனது உயிரைத்தானே மாய்த்துக் கொண்டார். இவ்வாறு இன விடுதலைக்காக போராடிய அவரது நினைவு நிகழ்வில், அவரது இலக்கை அடைவதற்கு நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும் என இந்த சந்தர்ப்பத்தில் உறுதிபூண்டு, அவ்பாதையை நாம்பின்பற்றுவோம் நடந்து செல்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)




## சக்தி விழா

பொலநறுவை முத்துக்கல் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு உற்சவ சக்தி விழா எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3 மணிமுதல் 4.22 மணி வரையுள்ள சுப வேளையில் ஸ்ரீ வீரபக்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து மடப்பெட்டி எழுந்தருளுதலுடன் அம்பாளின் திருக்கதவு திறக்கப்படும்.

மறுநாள் முற்பகல் 10 மணியளவில் அபிஷேகப் பூசை இடம் பெற்று மதிய, இரவுப் பூசையும் இடம்பெறவுள்ளது. (இ







யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணர்களால் உலக சுற்றுச் சூழல் தினம் நேற்று திங்கட்கிழமை பாடசாலை கணனி விரிவுரை மண்டபத்தில் இடம்பெற்றது. “இயற்கையோடு இசைவுற இணைவோம்” எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக விவசாய உயிரியல் துறைத் தலைவர் கலாநிதி கு.திருக்குமரன் கலந்து கொண்டார்.

# ஞானசாரரை கைது செய்வோம்

# தவறிழைத்தது எவராக இருந்தாலும் தகுதி, தராதரம் இன்றி நடவடிக்கை

## பொலிஸ்மா அதிபர் பூஜித தெரிவிப்பு



தவறிழைத்தது எவராக இருந்தாலும் அவர்களது தகுதி, தராதரம் பாராது சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். சட்டத்தின் முன் அனைவரும் சமம்.

பொதுபலசேனா அமைப்பின்பொதுச் செயலாளர் ஞானசார தேரரைக் கைது செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்தார்.

சட்டம் அனைவருக்கும் சமமானது. சட்டம் மீறப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

எந்த வேளையிலும் எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம்.

உரிய நீதிமன்ற உத்தரவுக்கமைவாக, சட்டமா அதிபரின் ஆலோசனைக்கேற்ப எமது விசாரணையின் விளைவாக கைது செய்யும் நடவடிக்கையை நாம் மேற்கொண்டுள்ளோம்.

நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லையென்றும் பக்கச் சார்பாக நடந்து கொள்வதாகவும்பல்வேறு இடங்களில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த இடத்தில் நான் தெளிவாக ஒரு விடயத்தைச் சொல்லவேண்டும்.நாங்கள் ஒரு தரப்புக்கு, ஓர் இனம், மதம் அல்லது அரசியல் தேவைப்பாடுகளுக்காக நடவடிக்கை எடுப்பதில்லை.

எவராகிலும் தவறு செய்தால் தவறு தான். அந்தத் தவறு இழைத்தவர் யார்? அவரின் தராதரம் என்ன? என்பது எமக்கு அவசியம் இல்லை.

அந்தத்தவறுக்கேற்றவாறு நாம் நீதிமன்ற நடவடிக்கையை கடந்த காலங்களிலும் எடுத்துள்ளோம். முடிந்தவரை விரைவாகக் கைது செய்யும் நடவடிக்கையை மேற்கொள்வோம்.

ஞானசார தேரரின் நடவடிக்கைகளை விசாரிக்க 4 சிறப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அந்த நடவடிக்கைகளை ஒன்றிணைக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## பிரதி அமைச்சர் ஹர்ஷ வாக்குமூலம்



தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா,ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகியுள்ளார்.

மத்திய வங்கியின் முறிமோசடி தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா, திறைசேரி முறிகளை வழங்குதல் தொடர்பில் பரீட்சித்து பார்க்கும் ஜனாதிபதி புலனாய்வு பிரிவில் முன்னிலையாகியுள்ளார்.

இதேவேளை, ஹர்ஷ டி சில்வாவிடம் கடந்த 25 ஆம் திகதி வாக்கு மூலம் பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதி புலனாய்வு ஆணைக்குழுவால் அழைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் இரண்டு வாரங்களுக்கு பின்னர் அவ் ஆணைக் குழு நேற்று ஒன்று கூடியது. இந்த நிலையில், பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தவிர மத்திய வங்கியின் மேலதிக பணிப்பாளர் வசந்த அல்விஸ்ஸும் வாக்குமூலம் வழங்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதத்துக்கு அரசே பொறுப்பு

# மனிதவுரிமை ஆணைக்குழு ஜனாதிபதிக்குக் கடிதம்



(கொழும்பு)

**இலங்கையில் முஸ்லிம்கள் மற்றும் ஏனைய சிறுபான்மை மதப் பிரிவினருக்கு எதிராக நடத்தப்படும் இனவாதத் தாக்குதல்கள் மற்றும் வன்முறைச் செயற்பாடுகள் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கவலை வெளியிட்டுள்ளது. அதேவேளை இத்தகைய சம்பவங்களுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டுமெனவும் இது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளது.**

முஸ்லிம்களையும்ஏனைய சிறுபான்மை மதங்களை சேர்ந்தவர்களையும் இலக்கு வைத்து, அவர்களுக்கு எதிரான வன்முறைகளை தூண்டுவோர் மற்றும் வன்முறைகள் சார்ந்த செயல்களில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

"இது தொடர்பான விசாரனை நடத்த சட்டம், ஒழுங்கு அமைச்சர் மற்றும்பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு கட்டளை பிறப்பிக்கப்பட வேண்டும்" என்றும் இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

"அண்மைக்காலங்களில் முஸ்லிம்களை இலக்காக கொண்டு மேற்கொள்ளப்படும் வன்முறைகள் மற்றும் ஆக்கிரமிப்பு செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அக்கறை கொள்கின்றது எனவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

இது போன்ற செயற்பாடுகள் காரணமாக 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அளுத்கமையில் வன்முறைகள் இடம்பெற்றன. இதனால் உயிரிழப்புகளும் சொத்து இழப்புகளும் ஏற்பட்டன. வன்முறைகளை தூண்டியவர்கள், இதற்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன்னிறுத்த இதுவரையில் ஆக்கப்பூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பது புலனாகின்றது.

முஸ்லிம் மக்கள் மற்றும் அவர்களின் வழிபாட்டு தலங்கள், வர்த்தக நிறுவனங்களுக்கு எதிரான வன்முறைகளை தூண்டிவிடும் வகையில் மக்களை ஊக்கப்படுத்தும் செயற்பாடுகள் சமூக வலைத்தளங்கள் மற்றும் பிரதான ஊடகங்கள் வாயிலாக செய்யப்படும் பிரசாரங்கள், முஸ்லிம் சமூகத்தையும் இஸ்லாம் மதத்தையும் இலக்காக கொண்டு வெறுக்கத்தக்க பேச்சுக்கள் அவதானிக்கப்பட்டுள்ளதால்ஆணைக்குழு கலக்கமடைகின்றது.

மேலும், கண்டிக்கப்படாமல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் பிற மதங்களுக்கு எதிரான சகிப்பற்ற தன்மை மற்றும் அண்மைக் காலத்தில் கிறிஸ்தவ வழிபாட்டு தலங்கள்மீதான தொடர் தாக்குதல்கள்குறித்து ஆணைக்குழுவானது ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றது.

குறிப்பிட்ட ஒரு இனத்தை இலக்காக கொண்டு மேற்கொள்ளப்படும் வெறுப்பை வழங்கும்மற்றும்வன்முறைகள் போன்ற செயற்பாடுகள் 2007ஆம் ஆண்டு 56ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசன சட்டத்திலும் இலங்கை தண்டனை கோவை சட்டத்திலும் குற்றமாகும். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இந்நிலையில் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்வது அத்தியாவசியமானது.

சட்ட புத்தகங்களில் காணப்படும்சட்டத்தை நடைமுறைப்படுத்தாவிட்டால் அத்தகைய செயற்பாடு சட்டத்தின் ஆட்சியின்மீதுபாதகமானவிளைவை ஏற்படுத்தும். எனவே நாட்டின் நலன் கருதி அந்த சட்டங்களை நடைமுறைப்படுத்துவது அத்தியாவசியமாகும்.

எனவே முஸ்லிம் மக்கள் மற்றும் ஏனைய சிறுபான்மை மக்களை இலக்காக கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் பகைமை மற்றும் வன்முறைகளை தூண்டும் பேச்சுக்களை பிரசாரம் செய்வோர், வன்முறைகளில் ஈடுபடுவோர் மற்றும் அதனை ஊக்குவிக்கும் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொள்ளுமாறு சட்டம் ஒழுங்கு அமைச்சருக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் ஆணை பிறப்பிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கேட்டுக் கொள்கின்றது" என இலங்கை மனித உரிமை கள் ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி என்.டி உடேகமவினால் ஒப்பமிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்த கடிதத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மைக் காலங்களில் இலங்கையில் குறிப்பாக இஸ்லாமிய வழிபாட்டு தலங்கள், முஸ்லிம்களுக்கு சொந்தமான கடைகள் மற்றும் வாழ்விடங்களை இலக்கு வைத்து 30 இற்கும் மேற்பட்ட தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக முஸ்லிம் சிவில் அமைப்புகள் கூறுகின்றன.

இது தொடர்பாக, முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஜனாதிபதி, பிரதமர், சட்டம் ஒழுங்கு அமைச்சர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரின் கவனத்திற்கும் ஏற்கனவே கொண்டுவரப்பட்டுள்ளன. பௌத்த கடும்போக்கு அமைப்பான பொதுபல சேனா மீதே அவர்களால் குற்றம்சுமத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# துறைமுக நகரத்தை கொழும்புடன் இணைக்க நெடுஞ்சாலை, சுரங்க, தொடரூந்துப்பாதை

(கொழும்பு)

1.5 பில்லியன் டொலர் செலவில் சீன நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டு வரும் கொழும்பு துறைமுக நகரத்தை, கொழும்புடன் இணைப்பதற்கான நெடுஞ்சாலை, சுரங்கப்பாதைகள், மற்றும் தொடரூந்துப் பாதை என்பன அமைக்கப்படவுள்ளன.

துறைமுக நகரை, கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் செல்லும் அதிவேக நெடுஞ்சாலையுடன் இணைக்கும் வகையில் நெடுஞ்சாலை அமைக்கப்படவுள்ளது.

அத்துடன், துறைமுக நகரில் இருந்து கொழும்புக்குள் நுழைவதற்கான இரண்டு சுரங்கப்பாதைகளை அமைப்பது குறித்து, சீன நிறுவனம் அரசாங்கத்துடன் பேச்சு நடத்தி வருகிறது.

மேலும், ஒரு இலகு தொடரூந்து போக்குவரத்து முறை கொழும்பு துறைமுக நகர் வரை நீடிக்கப்படவுள்ளது.

அதேவேளை, கடந்த மாதம் வரையில், துறைமுக நகரத்தை உருவாக்குவதற்கான 40 வீத பணிகள் முடிவடைந்துள்ளன என்று சீன நிறுவன அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

25, 30 ஆண்டுகளில் துறை முக நகரின் பகல் நேர சனத்தொகை 2.5 இலட்சமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதில், 75 ஆயிரம் பேர் வதிவிட சனத்தொகையாக இருக்கும்.

இங்கு 21 ஆயிரம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கப்படவுள்ளன. (இ-3)

# 6 கிலோ கேரளக் கஞ்சா இராணுவத்தால் மீட்பு

(கொழும்பு)

கேரளக் கஞ்சாவை வைத்திருந்த ஐந்து பேர் சந்தேகத்தின் பேரில் மஹவெவ, தொடுவாவ பிரதேசத்தில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கேரளக் கஞ்சா 6 கிலோ கிராமை இரு ஆட்டோக்களில் எடுத்துச் சென்று கொண்டிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கொழும்பிலிருந்து, சிலாபம் பிரதேசத்துக்கு கஞ்சாவை எடுத்துச் சென்று கொண்டிருக்கும் போதே இராணுவத்தினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து கேரளக் கஞ்சா, கையடக்கத் தொலைபேசிகள், ஆட்டோக்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (இ-3)



## இன்று ஒரு தகவல்

### பிள்ளைகள் ஒற்றுமையில் பெற்றோர் பங்கு

தங்கள் பிள்ளைகள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று எல்லாப் பெற்றோர்களும் விரும்புகின்றனர். ஆனால் செயலிலோ நேர் முரண்பாடாக நடந்து கொள்கின்றனர். வியப்பாக இருக்கின்றதா? விளக்கங்கள் காத்து நிற்கின்றன. பெரும்பாலான பெற்றோர், ஒரு கண்ணில் வெண்ணெய் மறு கண்ணில் சுண்ணாம்பு என்கின்ற கொள்கையைத் தான் பின்பற்றுகின்றனர். பெற்றோர்களுக்கு எல்லாப்பிள்ளைகளும் ஒரே மாதிரி தான். ஆனால் பலர் ஒவ்வொருவர் மீதும் விதவிதமான விகிதத்தில் பாசம் காட்டுகின்றனர். சொன்னது கேட்கும் மூத்த பிள்ளையைதான் எனக்கு பிடிக்கும் என்றும் கடைசி மகளைத்தான் எனக்கு பிடிக்கும் என்றும் கையில் மைக் வைத்துக் கொண்டு அறிவிக்காத குறையாய் பேசிக் கொண்டு இருப்பார்கள். இப்படி மாறுபாடாக காட்டப்படும் பிரியம் பிள்ளைகளிடம் மன வேறுபாடுகளை உருவாக்குகிறது. இது அவர்களிடையே கருத்து வேறுபாடுகளை அதிகப்படுத்தி ஜென்ம விரோதிகளாகவோ, நிரந்தர பகையாளிகளாகவே நீறு பூத்த நெருப்பாகவோ இடை வெளிகளை ஏற்படுத்தி விடுகிறது.

மகன்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை. மகள்களுக்கு தான் எல்லாம் என்று அள்ளி அள்ளிக் கொடுக்கும் பெற்றோர் மகன்கள் எல்லாம் ஓர் அணியிலும் மகள்கள் எல்லாம் எதிர் அணியிலும் திரண்டு விட காரணமாக அமைந்து விடுகிறார்கள்.

இரண்டு மூன்று மகள்கள் இருக்க ஒரு மகளுக்கு ஒரு மாதிரியும் மற்றவளுக்கு வேறு மாதிரியும் அடுத்தவர்களுக்கு இன்னொரு மாதிரியும் சீர் செய்து அல்லது உதவி வகையறாக்களை வேறுபடுத்திச் செய்யும் தாயால் மகள்களுக்குள் கருத்து வேறுபாடு வந்து விடுகிறது. இவைதவிர ஒரு புதுக் காரணத்தாலும் பெற்றோரோ பிள்ளைகளுக்கு சண்டையை இழுத்து விட்டு விடுகிறார்கள். அதாவது மூத்தவன் சொன்னதை இளையவனிடம் சொல்லி, அக்கா சொன்னதை தங்கையிடம் சொல்லி இப்படி! இதை வேண்டும் என்றோ இதைக் குடும்பத்தை சிதைக்கும் நோக்கத்துடனோ எந்தப் பெற்றோரும் செய்வதில்லை. மாறாக எதை எப்படிச் சொல்ல வேண்டும் என்கிற பக்குவம் தெரியாமல் ஒரு பிள்ளை வீட்டில் பதிவு செய்து மறுபிள்ளை வீட்டில் அதை ஒலிபரப்பி விடுகின்றனர்.

இத் தவறைப் பெற்றோர் செய்யவே கூடாது. மாறாக உங்கிட்ட அவ்வளவு பாசமா இருக்காம்மா உன் அண்ணன் என்றும் உன்னைப் பத்தி ஓகோன்னு சொல்றாம்மா என்று வடிகட்டி விடயங்களை மட்டும் சொல்ல வேண்டும்.

பிள்ளைகளிடையே சிறு மனத்தாங்கல் எனும் விரிசல் ஏற்பட்டாலும் உடனே அதைச் சரி செய்து உறவுப்பாலத்தைப் புதுப்பிக்க வேண்டும்.

நாம் ஒற்றுமையாக இருப்பது தான் நம் பெற்றோருக்குத் தலையாய மகிழ்ச்சியைத் தரும் என்று பிள்ளைகள் தீர்மானமாக நம்பும்படி நடந்து கொள்ள வேண்டும்.

ஒற்றுமையாய் இருக்கும் பல குடும்பங்கள் வந்து சேரும் மருமகள்களாலும் மாப்பிள்ளைகளாலும் சிதறிச் சின்னாபின்னமாகி விடுவது உண்டு. இவர்கள் விடயத்திலும் பெற்றோர் கவனம் செலுத்தி மேற்கூறிய பாணங்கள் சிலவற்றை அவ்வப்போது பிரயோகிக்க வேண்டும்.

இவற்றையெல்லாம் செய்யாமல் நமக்குப் பிறந்த நாலும் நாலு திசையைப் பார்த்துக் கொண்டு நிற்கிறார்களே! எனப் புலம்புவதில் பொருளில்லை.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காஷ்மீர் எல்லைப் பகுதியில் இந்திய முகாம்கள் மீது பாக்.இராணுவம் தாக்குதல்



(ஸ்ரீநகர்)

ஜம்மு -காஷ்மீர் மாநிலத்தின் சம்பா மாவட்டத்தில் உள்ள சர்வதேச எல்லைக் கோட்டுப் பகுதியில் நேற்று பாகிஸ்தான் படைகள் மீண்டும் அத்துமீறி துப்பாக்கிச் சூட்டில் ஈடபட்டன.

சம்பா மாவட்டத்தில் ராம்கர் எல்லைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இந்திய முகாம்களில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த இந்திய வீரர்கள் மீது நேற்றுக் காலை சுமார் 6.30 மணியளவில் பாகிஸ்தான் படையினர் துப்பாக்கிகளால் சுட்டு ஆவேச தாக்குதலில் ஈடுபட்டனர்.


இந்திய எல்லை பாதுகாப்பு படையைச் சேர்ந்த வீரர்களும் எதிர்த்தாக்குதல் நடத்தினர். இந்நிலையில், சம்பா மாவட்டத்தில் உள்ள பஸந்தர் ஆற்றங்கரையோரத்தில் இருந்து வெடிக்காத மோர்ட்டார் ரக குண்டு ஒன்றினை பாதுகாப்பு படையினர் கண்டெடுத்துள்ளனர். (இ-3)

## உ.பியில் பேருந்து - லொறி நேருக்கு நேர் மோதி விபத்து

### 17 பேர் உயிரிழப்பு!

(பரேலி)

டில்லியில் இருந்து உத்தரப் பிரதேச் மாநிலம் கோன்டா நோக்கி சென்று கொண்டிருந்த பயணிகள் பேருந்து - லொறி மீது மோதி விபத்திற்குள்ளானதில் 17 பேர் பலியாகினர். மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர்.





தலைநகர் டில்லியில் இருந்து உத்தரப் பிரதேச மாநிலத்தின் கோன்டா மாவட்டத்திற்கு பயணிகள் பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது. உத்தரப்பிரதேச மாநில தேசிய நெடுஞ்சாலையில் பரேலி அருகே நேற்று அதிகாலை ஒரு மணியளவில் சென்று கொண்டிருந்த போது, கட்டுப்பாட்டை இழந்த பேருந்து எதிரே வந்த லொறியுடன் மோதி விபத்திற்குள்ளானது.

மோதிய உடனே பேருந்தும், லொறியும் தீப்பிடித்து எரிய துவங்கியது. இந்த விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 17 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் படுகாயமடைந்த 20இற்கும் மேற்பட்டோர் அருகாமையிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உயிரிழப்பு மேலும் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாகவும் அஞ்சப்படுகிறது.

விபத்தினை தொடர்ந்து. சம்பவ இடத்திற்கு விரைந்த உத்தரப் பிரதேச பொலிஸார், விபத்து குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மீட்புப் பணியும் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்த விபத்தால் உத்தரப் பிரதேசம் - டில்லி தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. (இ-3)

# பிரிட்டன் பாராளுமன்ற தேர்தல் திட்டமிட்டபடி 8ம் திகதி நடக்கும்

## பிரதமர் தெரேசா மே அறிவிப்பு

## லண்டன் தாக்குதலுக்கு கண்டனம்

(லண்டன்)

**லண்டனில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள பிரதமர் தெரேசா மே, திட்டமிட்டபடி நாளை மறுதினம் 8 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும் என அறிவித்துள்ளார்**

பிரிட்டனில் கடந்த 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெற்றது. தற்போதைய பாராளுமன்றத்தின் பதவிக் காலம் 2020இல் முடிவடைகிறது. ஆனால், பதவிக் காலம் முடியும் முன்னரே தேர்தலை நடத்த திட்டமிட்டார் பிரதமர் தெரேசா மே. அதன்படி, நாளை மறுதினம் 8 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடத்தப்படுகிறது.

நாட்டில் ஸ்திரத்தன்மையைக் கொண்டு வருவதற்கு முன்கூட்டியே தேர்தல் நடத்துவதுதான் ஒரே வழி என்பதால் இந்த முடிவுக்கு வந்ததாக கூறிய அவர், பொதுத் தேர்தலை நாளை மறுதினம் 8ஆம் திகதி நடத்த அனுமதிக்கக் கோரி பாராளுமன்றத்தில் தீர்மானத்தையும் நிறைவேற்றினார். இதையடுத்து தேர்தல் பணிகளில் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில். லண்டனில் நடந்த பயங்கரவாத தாக்குதலில் 7 பேர் கொல்லப்பட்டனர். 48 பேர் காயமடைந்தனர்.

இதனால், தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள தலைவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். ஆளுங்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சி, எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி மற்றும் ஸ்காட்டிஷ் தேசிய கட்சியின் தேர்தல் பிரசாரங்கள் நிறுத்தப்பட்டன.

தீவிரவாத தாக்குதலுக்கு பிரதமர் தெரேசா மே கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். அத்துடன், பாதுகாப்புத்துறையின் உயர் அதிகாரிகளை அழைத்து அவசர ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், தேர்தலை எந்த வித இடையூறும் இன்றி பாதுகாப்பாக நடத்த வேண்டும் என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர், "ஜனநாயக நடைமுறைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வன்முறைகளை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. இனி பயங்கரவாத தாக்குதல்களை சகித்துக் கொள்ள முடியாது. சமீபத்தில் பிரிட்டனில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதல்களுக்கு நேரடி தொடர்பு இல்லாத போதும், இஸ்லாமிய பயங்கரவாதம் என்ற தீமையான ஒற்றை சித்தாந்தத்தால் பிணைக்கப்பட்டுள்ளது.



பிரிட்டனின் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை மறுசீரமைப்பு செய்ய திட்டமிட்டுள்ளேன். திட்டமிட்டபடி நாளை மறுதினம் 8 ஆம் திகதி தேர்தல் நடைபெறும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பயங்கரவாதத் தாக்குதல் பீதியால் கூட்ட நெரிசலில் சிக்கி 1500 பேர் காயம்








இத்தாலியில் சம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டியை காண்பதற்காக கால்பந்து இரசிகர்கள் திரண்டிருந்த சதுக்கத்தில் திடீரென கூட்ட நெரிசல் ஏற்பட்டதில் 1500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் இறுதிப் போட்டி கார்டிப் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், ரியல் மெட்ரிட், ஜுவென்டஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இப்போட்டியைக் காண்பதற்காக மைதானத்தில் ஏராளமான இரசிகர்கள் திரண்டிருந்தனர். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த போட்டி என்பதால், மக்கள் கூடும் இடங்களில் மிகப் பெரிய தொலைக்காட்சி திரைகள் அமைக்கப்பட்டு போட்டி நேரலையில் ஒளிபரப்பப்பட்டது.

அவ்வகையில் இத்தாலியின் துரின் நகரில் உள்ள பியாசோ சான் கார்லோ சதுக்கத்தில் இப்போட்டியைக் காண மிகப்பெரிய தொலைக் [illegible] இரசிகர்கள் மற்றும் ஆதரவாளர்கள் என ஆயிரக் கணக்கானோர் திரண்டு போட்டியை கண்டு களித்தனர்.

அப்போது கூட்டத்தில் இருந்து [illegible] பயங்கர [illegible] கேட்டது. தீவிரவாதிகள் தாக்குதல் நடந்திருப்பதாக யாரோ ஒருவர் கூற, ரசிகர்கள் பீதியடைந்து அந்த இடத்தில் இருந்து தப்பிச் செல்ல முயற்சித்தனர்.

முண்டியடித்துக்கொண்டு வெளியேறியதால் ஒருவர் மீது ஒருவர் விழுந்தனர். இதனால் கடும் நெரிசல் ஏற்பட்டது. இதில் 1500இற்கும்மேற்பட்டோர் காயமடைந்தனர். இவர்களில் ஒரு சிறுவன் உள்ளிட்ட 3 பேரின் நிலைகவலைக்கிடமாக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 68ஐ அமுல்படுத்தியிருந்தால் வெள்ளமே ஏற்பட்டிருக்காது

நில்வள, ஜின் மற்றும் களு ஆகிய கங்கைகளிலும் நீர்வழியும் இடங்களிலும் முன்னெடுக்கப்படுவதற்காக, 1968ஆம் ஆண்டு முன்மொழியப்பட்ட யோசனையை நடைமுறைப்படுத்தியிருந்தால் பாரிய வெள்ள அனர்த்தம் ஏற்பட்டிருக்காது என்று பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில், நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பூமியில் விழும் ஒவ்வொரு நீர்த்துளியையும் வீண்போகாமல் விவசாயத்துக்கு பயன்படுத்த வேண்டும் என்று மகா பராக்கிரமபாகு மன்னன் கூறியிருந்தார். அவரது கூற்றை கடைப்பிடித்திருந்தால் இப்படியான அழிவுகள் ஏற்பட்டிருக்காது.

எமது நாட்டில்கங்கைகளை சரியான முறையில் முகாமைத்துவம் செய்யவில்லை.

சரியான முகாமைத்துவம் இன்மையானால் தான், இயற்கை அனர்த்தத்தால் மக்கள் அனைவரும் வேதனைப்பட வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. இந்த விடயம் தொடர்பில் இலங்கையர் என்ற ரீதியில் நாம் அனைவரும் வருத்தப்பட வேண்டும்.

1960ஆம் ஆண்டு அமெரிக்கா, கொலறாடோவில் உள்ள ஈ.சீ.ஐ.பொறியியல் நிபுணர்கள் நிறுவனத்தில் இலங்கை தொடர்பில் ஆய்வறிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டு புத்தகம் ஒன்று கையளிக்கப்பட்டது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "நாட்டில் காணப்படும் நதிகளை உரிய நேரத்தில் ஒழுங்குபடுத்தாவிட்டால் இயற்கை அனர்த்தங்கள் இடம்பெறும்" என முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டுள்ளது.

2001இல் ஜின் கங்கையை பயன்படுத்தி மின்சார உற்பத்தி, நீர்ப்பாசன முறையை பயன்படுத்தல் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்களை சீனாவுடன் இணைந்து முன்னெடுக்க முற்பட்டபோது, வாருக்கந்தேனிய பிரதேச மக்கள் காணிகளை அபகரிப்பதாக எதிர்த்தனர். அந்த வேலை திட்டத்தினை அப்போது செய்யக்கிடைத்து இருந்தால், இத்தகைய பாரிய அழிவைச் சந்தித்திருக்க மாட்டோம்.

எதிர்காலத்தில் நாம் இவைகளை முறையாக கட்டுப்படுத்தாவிட்டால், சகலரும் தங்களது பிரதேசங்களை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

உண்மையில் இந்த வெள்ளம், மண்சரிவு ஆகியவற்றுக்கு முழுப்பொறுப்பும் இயற்கை மட்டும் அல்ல, இயற்கையால் வழங்கப்பட்ட கொடையை மனிதர்களாகிய நாம் சரியான முறையில் கட்டுப்படுத்த முடியாமல் போனதே இதற்குக் காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

1968ஆம் ஆய்வறிக்கையில், ஜின் கங்கையில் ஜஸ்மின் அணை நிர்மாணிக்கப்பட வேண்டுமெனவும் மிகத் தெளிவாக வெள்ளப் பாதுகாப்பு திட்டமொன்றுக்காக, களுகங்கை வெள்ளப் பெருக்கு திட்டமொன்றாக மகுர அணை, குருள் அணை மற்றும் இரத்தினபுரி அணை ஆகிய மூன்று அணைகளும் 60 வருடங்களுக்கு முன்பாக முன்மொழியப்பட்டுள்ளன.

அடுத்ததாக இதில் சொல்லப்படும் அணை கட்டப்படும் போது, இரத்தினபுரி மற்றும் காலி மாவட்டங்களுக்கு மின் நிலையங்களும் நிர்மாணிக்க முடியும் எனவும் கூறப்பட்டுள்ளது. (இ-3)

# இலங்கையில் பிளாஸ்ரிக் அரிசி! கைத்தொழில் அமைச்சு மறுப்பு

(கொழும்பு)

இலங்கையில் பிளாஸ்ரிக் அரிசி விற்பனை செய்யப்படுவதாக வெளியான செய்திகள் அனைத்தும் பொய்யானவை என்று வர்த்தக, கைத்தொழில் அமைச்சு மற்றும் சதொச நிறுவனம் என்பன தெரிவித்துள்ளன.

அண்மைக்காலமாக இலங்கையில் பிளாஸ்ரிக் அரிசி விற்பனை செய்யப்படுவதாகவும், பாகிஸ்தானிலிருந்து சதொச நிறுவனம் பிளாஸ்ரிக் கலந்த பாஸ்மதி அரிசியை இறக்குமதி செய்திருப்பதாகவும் சமூக வலைத்தளங்கள் மற்றும் இணைய செய்தித் தளங்களில் பரவலான செய்தி பரப்பப்பட்டிருந்தது.

எனினும் குறித்த செய்தியில் எதுவித உண்மையும் இல்லை என்று மறுக்கும் வர்த்தக, கைத்தொழில் அமைச்சு மற்றும் சதொச நிறுவனம் என்பன உரிய பரிசோதனைகளின் பின்னரே பாகிஸ்தானிலிருந்து பாஸ்மதி அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளன. அத்துடன் இவ்வாறான செய்திகள் பரவத் தொடங்கியதன் பின்னர் மீண்டுமொருமுறை குறித்த அரிசியை பரிசோதனைக் கூடமொன்றில் சமைத்து பரிசோதனைக்குட்படுத்திய போதிலும் எதுவித பிளாஸ்டிக் கலவைகளும் அடங்கியிருக்கவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

எனவே பொதுமக்களின் நன்மை கருதி குறைந்த விலையில் இறக்குமதி செய்து விற்கப்படும் பாகிஸ்தான் பாஸ்மதி அரிசியை பொதுமக்கள் எதுவித அச்சமும் இன்றி பயன்படுத்தலாம் என்றும் வர்த்தக, கைத்தொழில் அமைச்சு மற்றும் சதொச நிறுவனம் என்பன உறுதிப்படுத்தியுள்ளன. (இ-3)

# ஆட்சியைக் கவிழ்க்குமாறு மகிந்தவை உசுப்பேற்றும் ஜப்பானிலுள்ள இலங்கையர்கள்

(கொழும்பு)

இலங்கையில் ஆட்சியில் இருக்கும் தற்போதைய அரசாங்கத்தினால் ஜப்பானில் உள்ள இலங்கையர்கள் விரக்தி அடைந்துள்ளனர் என்றும், ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர் என்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


பத்து நாட்கள் பயணமாக ஜப்பான் சென்றுள்ள மகிந்த ராஜபக்ஷ, டோக்கியோவில் இருந்து கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியில் இவ்வாறு கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் அழிவுகரமான கொள்கைகளால் தம்மால் தப்பிப்பிழைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக, ஜப்பானில் வசிக்கும் இலங்கையர்கள், குறிப்பாக வாகன ஏற்றுமதியாளர்களான வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இந்த விவகாரத்தை அரசாங்கத்திடம் எடுத்துச் செல்லுமாறு அவர்கள் கூட்டு எதிரணியிடம் கேட்டுக் கொண்டனர் என்றும் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். (இ-3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1094


விபுலன்



நித்தியா





முருகன்




பாமினி




கம்சன்



குலம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாடு- ஒரு பார்வை

தமிழ்நாடு உடற்கல்வியும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் (TN Physical Education and Sports University) சைதாப்பேட்டை சென்னையில் அமைந்துள்ளது. இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்த கல்லூரிகள் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்கள் இருக்கின்றன. உடற்கல்வியிலும் விளையாட்டிலும் பட்டம் பெறுகிறவர்கள் இந்த பல்கலைக் கழகத்திலிருந்தே பெறமுடியும்.

அண்ணா பல்கலைக்கழகம் 1978 (Anna University of Tamil Nadu) இல் அமைக்கப்பட்டது. இது கிண்டியில் இரு ந்த பொறியியல் கல்லூரி, சென்னை தொழில்நுட்ப நிறுவ னம், அழகப்பா தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் சென்னை கட்டடக் கலையும் திட்டமிடல் கலைக்கூடம் ஆகிய வற்றை இணைத்து இப்பல்கலைக் கழ கம் உருவாக்கப்பட்டது.

இப்பல்கலைக்கழகம் பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் இவைகளுடன் இணைந்த விஞ்ஞானக் கற்கைகளை சிறப்புற முன்னெடுக்கும் பல்கலைக் கழகமாக வளர வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. இப் பல்கலைக் கழகம் சிறப்புற வளர்ச்சி பெற்றதுடன், இந்திய மானிய ஆணைக் குழுவின் ஐந்து நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றுள்ளதுடன் யுனெஸ்கோ நிறுவனத்தில் பொறியியல் கல்விக்கான கௌரவத்தையும் பெற்றுள்ளது. இப் பல்கலைக் கழகம் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அரச தனியார் பொறியியல்கல்லூரிகள்யாவும்அண்ணா பல்கலைக் கழகத்தின் கட்டமைப்புக்குள் வருகின்றன. பாடவிதானம், பரீட்சைகள், பட்டம் வழங்குதல், மாணவர் அனுமதி போன்ற விடயங்களை அண்ணா பல்கலைக்கழகமே செய்கின்றது. இன்று தமிழ் நாட்டில் அண்ணா பல்கலைக்கழகத்திற்கு கீழ் 580 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன். இவற்றுள் அரச பொறியியற் கல்லூரிகள் சிறு எண்ணிக்கையானவை. மிகப் பெரும்பாலான பொறியியற் கல்லூரிகள் தனியார் துறைக்கு உரியன. முன்னாள் முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரன் தூர நோக்கும்; துணிவுமே தனியார் துறையில் பெரும்எண்ணிக்கையான பொறியியற் கல்லூரிகள் அமைவு பெற வாய்ப்பு ஏற்பட்டது. அன்று உயர்கல்வியில் தனியார் பங்களிப்பிற்கு எதிர்ப்பு இருந்தது. ஆனால்இவ்எதிர்ப்புமக்கள்திலகம் எம். ஜி. ஆர் இன் ஆளுமை, செல்வர்க்கு முன் எடுபட முடியாது போயிற்று. தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் தகவல் தொழில்நுட்பவளர்ச்சிக்கும்தேவையான ஆளணி இக் கல்லூரிகள் மூலம் கிடைக்கப் பெற்றன. இன்று தமிழ் நாட்டுப் பொறியியற் கல்லூரிகளில் 200000 இற்கு மேற்பட்ட இடங்கள் இருக்கின்ற பொழுது போதியளவு மாணவர்கள் விண்ணப்பிக்காததால் 30% இற்கு மேற்பட்ட இடங்கள் நிரப்பப்படாது போகின்றன. இதனால் பல பொறியியற் கல்லூரிகள் சிறப்பாக இயங்க முடியாது இருப்பதுடன், மாற்று ஒழுங்குகளைச் செய்ய வேண்டிய நிலைக்கு வந்துள்ளன. தகவல தொழில நுட்ப கல்விக்கு முன்பிருந்த கேள்வி தற்பொழுது குறைந்தது இதற்கு முக்கிய காரணம். தமிழ் நாட்டு தனியார் பொறியியல் கல்லூரிகள் குறிப்பாக வட மாநிலத்து மாணவர்களை கவர் வதில் கூடிய கவனம் செலுத்துகின்றன. இதில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளன. சில தனியார் பொறியியல் கல்லூரிகள் வளர்ச்சி பெற்று இன்று தனிப் பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெற்றுள்ளன. சிலதனியார்பொறியியல் கல்லூரிகள் வளர்ச்சி பெற்று இன்று தனிப் பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெற்றுள்ளன. தமிழ் நாட்டின் சிறந்த முதல் 10 பொறியியற் கல்லூரிகள்கீழ்த்தரப்பட்டுள்ளன.

Tamil Nadu District and District Capitals




Anna university Guindy

P.S.G College of Technology, Coimbatore.

Thiagarajar College of Engineering, Madurai.

Sri Sivasubramaniya Nadar College of Engineering (SSN), Chennai

Sona College of Technology, Salem.

K.S.Rangasamy College of Technology, Tiruchengodė.

Sri Venkateswara College ofEngineering Sriperumbudur

Arunai Engineering College, Tiruvannamalai.

Mepco Schlenk Engg. College, Virudhunagar.

St. Jospeh's College of Engineering, Chennai.

டாக்டர் எம். ஜி ராமச்சந்திரன் (Dr. M.G.R. Medical University of Tamil Nadu) மருத்துவப் பல்கலைக்கழகத்தின் கீழ் தமிழ் நாடு அரசின் சகல அலோபதி மருத்துவக் கல்லூரிகளும் பல சித்த வைத்திய கல்லூரிகளும் இணைந்த மருத்துவக் கற்கைநெறி பாடங்களுக்குமான கல்லூரிகளும் வருகின்றன. இவற்றைத் தவிர தனியார் மருத்துவக் கல்லூரிகள் சிலவும் இப் பல்கலைக்கழகத்தின் கீழ் வருகின்றன. சென்னையில் இருக்கும் மூன்று அரச மருத்துவக்கல்லூரியும்வேலூர், செங்கல்பட்டு, விழுப்புரம், திருவாரூர், தேனி, சேலம், திருச்சி, தர்மபுரி, தூத்துக்குடி, மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, சிவகங்கை, திருவண்ணாமலை, சென்னை - ஓமந்தூர், கோயம்புத்தூர் - சிங்கநல்லூரில் அரசு மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. மேலும் ஸ்ரீமுத்துக்குமார் மருத்துவக் கல்லூரியும் வைத்தியசாலையும் ஆராய்ச்சி நிலையமும் சென்னையில் இடஅமைப்புபெற்றுள்ளன. மேலும் தனியார் துறையைச் சேர்ந்த 16 மருத்துவக் கல்லூரிகள் எம். ஜி. ஆர். மருத்துவப்பல்கலைக்கழகத்து




டன் இணைந்த மருத்துவக் கல்லூரிகளாக இருக்கின்றன. மேலும் மாநிலத்தினுள் சகல அரச பல் வைத்தியக் கல்லூரிகளும் சித்த வைத்தியக் கல்லூரிகளும் இப் பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ளன. தனியார் பல்கலைக் கழகங்களால் நடத்தப்படும் மருத்துவ பீடங்கள் அவ்வப் பல்கலைக் கழகங்களால் பட்டங்கள் வழங்கப் பட்டாலும் தமிழ் நாட்டு மருத்துவக் கல்லூரியின் முக்கிய பொறுப்பு எம்.ஜி. ஆர். மருத்துவ பல்கலைக் கழகத்திலேயே இருக்கின்றது.

தமிழ் நாடு விவசாய பல்கலைக் கழகம் (Tamil Nadu Agricultural University) தமிழ் நாட்டிலிலுள்ள விவசாய கல்லூரிகள் யாவற்றுக்கும் பொறுப்பாக இருக்கின்றது. தமிழ் நாட்டு விவசாய பல்கலைக் கழகத் தின் பிரிவுகள் பல கோயம்புத் தூரில் இயங்குகின்றன. இப் பல்கலைக்கழகத்தின் இணைந்த பிரிவுகள் மதுரை, திருச்சி, கிள்ளிக் குளம், பெரியகுளம், மேட்டுப் பாளையம், ஈச்சங்கொள்ளை, குடுமியாள்மலை, திருவண்ணாமலைப் பகுதியிலுள்ள வாசவசானூர் ஆகிய இடங்களில் இயங்குகின்றன.

1989இல் ஆரம்பிக்கப்பட்ட மிருக வைத்தியம், மிருக விஞ்ஞானப் பல்கலைக்கழகம் சென்னையில் (Tamil Nadu Veteniary and Animal Science University) அமைந்துள்ளது. இதனது நிர்வாக பரப்பு தமிழ்நாடு முழுவதுமாக இருக்கின்றது. பல்கலைக் கழகத்தின் கற்பித்தல், ஆய்வு நிகழ்வுகள் சென்னை, திருநெல் வேலி, நாமக்கல், கொடுவள்ளி, காட்டுப் பாக்கம், ஓசூர் ஆகிய இடங் களில் இடம்பெறுகின்றன.

1996 தமிழ் நாடு, டாக்டர் அம்பேத்கராக சட்டப் பல்கலைக் கழகமும் (Tamil Nadu Dr. Ambedkar Law University) அமைக்கப்பட்டது. இப் பல்க லைக்கழகமே தமிழ் நாட்டில் சட்டக் கல்விக்கு பொறுப்பாக இருக்கின்றது. சென்னையில் இருக்கும் இப் பல்கலைக் கழகத்திற்கு மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, செங்கல்பட்டு, வேலூர், திருநெல்வேலி போன்ற பிரதான நகர்களில் இணைந்த சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் இருக்கும் சட்டக் கல்லூரிகள் யாவும் அரச துறையிலேயே இருக்கின்றன. மதுரையில் நடந்த சர்வதேச தமிழாராய்ச்சி மாநாட்டை தொடர் ந்து முதல் எம்.ஜி. ஆர் இன் பணி ப்புரைக்கு அமைய தஞ்சாவூரில் தமிழாராய்ச்சி பல்கலைக்கழகம் அமைப் பெற்றது. இப் பல்கலைக்கழகம் உலகளாவிய ரீதியில் தமிழ் ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பது நிறுவனத்தின் இலட்சியமாக இருந்தது. தமிழ் ஆராய்ச்சிக்கும் தமிழ் மொழிப் பண்பாடு, கலை இலக்கிய வளர்ச்சிக்கு பல்கலை செய்யும் நிலையாகவும் சர்வதேச தமிழ் ஆய்வாளர்கள், நிபுணர்கள் கூடும் இடமாக இருக்க வேண்டும் என்பது இலக்காக இருந்தது. ஆய்வு செய்யக்கூடிய வசதிகள் இருந்தாலும் ஆரம்பத்தில் பட்டம் பெற முடியாது இருந்தன. தற்போது தமிழ் பல்கலைக்கழகமும் உயர் பட்டங்கள் வழங்கும் தகைமையைப் பெற்றுள்ளது.

1984இல் கொடைக்கானலில் மதர் திரேசா பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு இப் பல்கலைக் கழகம் மகளிர் விடயங்களைக் கற்கும் சிறப்புப் பல்கலைக்கழகமாகத் திகழ்கின்றது. இங்கு பெண்கள் மாத்திரம் தான் கற்க முடியும். இப் பல்கலைக்கழகத்தின் கிளை கொடைக்கானல், திண்டுக்கல், நீலக்கோட்டை ஆகிய இடங்களில் இணைந்த கல்லூரிகள் இயங்குகின்றன. இப்பல்கலைக் கழகம் இளம் பெண்களின் உயர்கல்வி குறித்த விடயத்தில் முழுமையான அக்கறை கொண்டுள்ளது. இப் பல்கலைக்கழகத்தில் ஆள்புலப் பரப்பு தமிழ் நாடு முழுவதையும் அடக்கியுள்ளது.

தமிழ்நாடு மீன்பிடிப் பல்கலைக்கழகம் Tamil Nadu Fisheries University) நாகபட்டினத்தில் இருக்கின்றது. இதன் கிளை நிலையங்கள் தூத்துக்குடி, பொன்னேரி போன்ற இடங்களில் உள்ளன. மீன்பிடி உயர்கல்வியிலும் ஆராய்ச்சியிலும் இப்பல்கலைக்கழகத்தின் ஆள்புலப்பரப்பு தமிழ் நாடு முழுவதையும் தழுவியதாகும்.

தமிழ்நாடு தோட்டக்கலை (Horticulture University of Tamil Nadu) பல்கலைக்கழகம் கோயம்புத்தூரில் அமைந்துள்ளது. இதன் ஆராய்ச்சிக்கிளைகள் ஊட்டியில் அமைந்துள்ளது. இப்பல்கலைக்கழகம் காய், கனி, மலர் உற்பத்தி கல்வியில் சிறப்புப் பயிற்சியைக் கொடுக்கின்றது. இந்தியாவின் பழச் செய்கையிலும் மலர்ச் செய்கையிலும் தமிழ் நாட்டில் முக்கிய இடத்தை வகிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இப்பல்கலைக்கழகத்தின் செயற்பாடு கோயம்புத்தூர், ஊட்டி போன்ற இடங்களில் முக்கியம் பெற்று இருப்பினும் தமிழ்நாடு முழுவதும் இதன் நிர்வாகப் பரப்பாக இருக்கின்றது.

20. தமிழ்நாடு திறந்த பல்கலைக்கழகம் வழமையான மாணவர்களை தவிர இளமையில் கல்வியைத் தவறவிட்டவர்கள் மற்றும் வேலை செய்து கொண்டு பட்டப் படிப்பை மேற்கொள்பவர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக இருக்கின்றது. சென்னையில் இதன் தலைமையகம் இருப்பினும் தமிழ்நாடு முழுவதும் கற்கை வழிகாட்டி நிலையங்கள் பரவலாக இருக்கின்றன. திறந்த பல்கலைக்கழகம் தகவல் தொழில்நுட்ப வசதியை பயன்படுத்தி பல புதிய வழிகளில் திறந்த பல்கலைக்கழகக் கல்வியை முன்னெடுத்து வருகின்றது. இப்பல் கலைக்கழகத்தில் இலட்சக்கணக்கான மாணவர்கள் கல்வி பயில்



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்


கின்றனர்.

21. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தற்பொழுது அரச நிர்வாகத்துக்குள் வந்துள்ளதுடன் இது தொடர்ந்தும் (Unitary Status) பலபீடங்களைக்கொண்ட தனித்த பல்கலைக்கழகமாகவும் மாணவர்கள் விடுதியில் வாழும் பண்பைத் தொடர்ந்து பேணும் நிறுவனமாக இருந்து வருகின்றது. தனியார் முகாமைத்துவத்தில் ஏற்பட்ட குறைபாடுகளாலும் நிதி நெருக்கடியாலும் அரச உதவி பெறவேண் டியதாயிற்று. அரசும் நிலைமையைசீசெய்ய அதனைஅரசு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டியதாயிற்று.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாடுக்குள் இருந்த தமிழ் நாட்டின் உயர்கல்வி படிப் படியாக வளர்ச்சி பெற்று இன்று தமிழ்நாட்டு அரசின் கீழ் 21 பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன. மேலும் ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியான (Thematic University) அமைக்கப் பெற்று இருப்பது சிறப்பம்சம். மருத்துவம், பொறியியல், சட்டம், விவசாயம், தோட்டக்கலை, மீன்பிடி, பெண்கள் விவகாரம், கலை/ விஞ்ஞானம், கல்வி, தமிழ்மொழி/ தமிழ் பண்பாடு, உடற் கல்வியும்/ விளையாட்டும், மிருக வைத்தியமும் மிருக விஞ்ஞானம் போன்ற ஒவ்வொரு துறை க்கு தமிழ்நாடு பல்கலைக்கழகங்களை அமைத்ததுடன் இந்த துறைசார்பல்கலைக்கழகங்கள் இணைந்த கல்லூரிகளையும் கொண்டுள்ளன. இக் கல்லூரிகளில் வளர்ச்சிய டைந்தவை தன்னாதிக்கம் கொண்ட (Autonomous College) ஆக மற்றக் கல்லூரிகள் பல்கலைக் கழகங் களின் கூடிய கட்டுப்பாடுகளின் கீழ் இயங்குகின்றன. கல்லூரி களின் எண்ணிக்கையில் பெரியளவில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள தால் குறிப்பாக கலை/விஞ்ஞான கல்லூரிகள் ஒவ்வொரு தாலுக்காவிலும் இருப்பதைக் காணலாம். மற்றைய துறைகளுக்கான கல்லூரிகள் மாவட்ட தலைநகரிலும் சிறப்பு மையங்களிலும் இருப்பதைக் காணலாம். தமிழ் நாட்டின் கல்வி ஆரம்ப பாடசாலை, உயர்தர இரண்டாம் நிலை பாடசாலை மட்டங்களிலும் மாத்திரமன்றி பட்டப்படிப்பு, பட்டப்படிப்புபின்படிப்பிலும் அரசின்பங்களிப்பு மிகவும் காத்திரமாக இருக்கின்றது. மேலும் தமிழ் நாட்டின் கல்வி வளர்ச்சியிலும் உயர்கல்வி வளர்ச்சியிலும் தனியான பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் தமிழ் நாட்டில் அமையப் பெற்றுள்ள மத்திய அரசு பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள், ஆராய்ச்சி நிலையங்களும் பெரும் பங்களிப்புச் செய்துள்ளன. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்சுழற்சி கழிவுப்பொருள் சேகரிப்பு நிலையங்கள் யாழ்.மாநகர எல்லைக்குள் திறந்து வைக்கப்பட்டன





(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் மாநகர திண்ம கழிவகற்றல் முகாமைத்துவ திட்டத்தின் கீழ் யாழ்.மாநகர எல்லைக்குள் மூன்று பகுதிகளில் மீள்சுழற்சி கழிவுப்பொருட்கள் சேகரிப்பு நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட செயலகத்தின் நிதியுதவியில் பாசையூர், குருநகர், நல்லூர் ஆகிய பகுதிகளில் இந்த நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையினரால் காக்கைதீவில் திறந்து வைக்கப்பட்டுள்ள மீள்சுழற்சியகத்தின் செயற்பாட்டை இலகுபடுத்தவும், மக்களின் நலன்கருதியும் மேற்படி சேகரிப்பு நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையங்களில் இலத்திரனியல்கழிவுப்பொருட்கள் சேகரிக்கப்படவுள்ளன.

நல்லூர் பகுதியில் அமைக்கப்பட்ட மீள்சுழற்சி கழிவுப் பொருட்கள் சேகரிப்பு நிலைய திறப்பு விழா நிகழ்வு யாழ். மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தலைமையில் நல்லூர் சங்கிலியன் வீதியில் அமையப் பெற்றுள்ள பிரட்டு அலுவலக வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழிவகற்றல் செயற்பாட்டை மேலும் வலுவூட்டும் வகையில் "எம். பொது மகன்" எனும் பெயரில் ஓர் மென்பொருள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இதனூடாக பொது மக்கள் மாநகர சபைக்கு இலகுவான வகையில் தகவல்களை வழங்க முடியும். இச் செயற்பாட்டை செயற்படுத்த பொதுமக்கள் யாழ். மாநகர சபையின் இணைய தளத்திலுள்ள Appsஐ தரவிறக்கம் செய்வதனூடாக பெறுக் கொள்ள முடியும்.

இந்த நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான அ.பரம்சோதி, விந்தன் கனகரத்தினம், இ.ஆனோல்ட் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி கோபிசங்கர்,யாழ். மாநகர சபை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அத்துடன் மீள்சேகரிப்பு வளாகத்தினுள் விருந்தினர்களால் மரக்கன்றும் நாட்டப்பட்டதுடன் இந்நிகழ் வுக்கு வருகை தந்த அனை வருக்கும் மாநகர சபையால் உற்பத்தி செய்யப்பட்ட சேதனப் பசளை பொதிகள் இலவசமாக வழங்கப்பட்டன. (இ-9)

# பைஸர் முஸ்தபாவிடமிருந்து பறிபோகிறது அமைச்சுப் பதவி

(கொழும்பு)

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபாவிடமிருந்து அவரது அமைச்சுப் பதவி பறிக்கப்படவுள்ளது.

அமைச்சரவை மாற்றங்களின் வரிசையில், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரையும் மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றிருப்பதால், இத்தகைய தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.



கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராகத் தற்பொழுது இருக்கும் மகிந்த அமரவீரவுக்கு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வழங்கப்படவுள்ளதாகவும், பைஸர் முஸ்தபாவுக்கு மகிந்த அமர வீரவின் அமைச்சு வழங்கப்படவுள்ளதாகவும் அறிய முடிகிறது.

இந்த அமைச்சர்களின் மாற்றம் இன்னும் சில நாட்களில் இடம்பெறவுள்ளதுடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பிலான முக்கிய அறிவிப்பு வெளியாகும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3)

# கிண்ணியா ஆயிலியடியில் மீள யானைகள் புகுந்து அட்டகாசம்

கிண்ணியா ஆயிலியடியில் யானையின் அட்டகாசம் மீண்டும் துவங்கியுள்ளது.

கடந்த 2 ஆம் திகதி ஆயிலியடியில் ஒருவரின் காணிக்குள் புகுந்து வீடு உட்படக் குடியிருப்புப் பகுதிகளையும், விவசாய பயிர்களையும் துவம்சம் செய்துள்ளதாகப் பாதிக்கப்பட்ட நபர் தெரிவித்துள்ளார். இப்பகுதியில் கடந்த காலங்களில் இருவர் யானையின் தாக்குதலினால் உயிரிழந்தனர்.





குறித்த பகுதியில் யானை வேலியமைத்தும் மீண்டும் யானையின் அட்டகாசம் தொடங்கியுள்ளதால் நிம்மதியாக தங்களால் வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்வதிலும் இப் புனித றம்ழான் மாதத்தில் தங்களது கடமைகளை நிறைவேற்றுவதிலும் பல சிக்கல்களும் அச்ச நிலையும் காணப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் மேலும் தெரிவித்தனர். எனவே முறையான யானை வேலி அமைப்புக்களை மேற்கொள்வதற்குச் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறும், தங்களது உயிருக்கு உத்தரவாதம் இல்லை எனவும் மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ)

# வெள்ள அனர்த்தங்களைக் குறைக்க குளங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டும்

## பேராசிரியர் அத்துல சேனாரத்ன அறிவுரை

(கொழும்பு)

நாட்டில் வெள்ள அனர்த்தம் மீண்டும் ஏற்படாதிருக்க குளங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அத்துல சேனாரத்ன அறிவுரை வழங்கியுள்ளார்.

விசேட நுட்பங்கள் மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

இந்த வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொள்ள நடவடிக்கைகளை எடுப்பதன் ஊடாக 2020ஆம் ஆண்டாகும் போது வெள்ள நிலைமைகள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதை தவிர்த்துக் கொள்ள முடியும் என்று பேராசிரியர் அத்துல சேனாரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஆயிரத்து 159 இடங்களில் மண்சரிவு ஏற்படக்கூடும்

எட்டு மாவட்டங்களில் 1,159 புதிய இடங்களில் மண்சரிவு ஏற்படக்கூடும் என்று இனங்காணப்பட்டு ள்ளதாக, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது.

பிரதேச செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் செய்திருந்த முறைப்பாட்டுக்கு அமையவே, மேற்குறிப்பிட்ட புதிய இடங்கள் இனங் காணப்பட்டுள்ளன.

அந்த இடங்களில் மேலதிக பரிசோதனைகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில், புவியியல் நிபுணர் குழுக்கள் ஈடுபட்டுள்ளன.

அந்தக் குழுக்களின் அறிக்கைகள் கிடைத்ததன் பின்னரே, அனர்த்தம் ஏற்படக்கூடிய பிரதேசங்களிலிருந்து மக்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் மண்சரிவு பிரிவின் தலைமை அதிகாரி ஆர்.எம். எஸ். பண்டார தெரிவித்தார்.

களுத்துறையில் 465 இடங்களும், இரத்தினபுரியில் 451 இடங்களும், காலியில் 68 இடங்களும் கொழும்பில் 42 இடங்களும் உள்ளன என்றும் பண்டார தெரிவித்தார்.

அதற்கு மேலதிகமாக அம்பாந்தோட்டை, கேகாலை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலும் இவ்வாறு புதிய இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இதேவேளை, நாட்டில் தற்போது நீடிக்கின்ற மோசமான வானிலை, இன்னும் சில நாட்களுக்கு இவ்வாறே தொடருமாயின் இரத்தினபுரி, கேகாலை, காலி, களுத்துறை, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் 34 பிரதேச செயலாளர் பிரிவுகளில் மண்சரிவு ஏற்படக்கூடும் என்றும் பண்டார தெரிவித்தார்.

அதனடிப்படையில், இரத்தினபுரி மாவட்டத்தில் 13 பிரதேச செயலாளர் பிரிவு களிலும், காலியில் -06 களுத்துறை, மாத்தறை மற்றும் கேகாலையில் தலா நான்கு, அம்பாந்தோட்டையில் -02 மற்றும் நுவரெலியாவில் ஒன்று என மொத்தமாக 34 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும மண்சரிவு ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக அவர் தெரிவித்தார். (இ-3)

# தெற்கில் பாதிப்புக்குள்ளான மக்களுக்காக கிழக்கிலிருந்து ரூ 10.6 மில். நிதி சேகரிப்பு

## முதலமைச்சர் நஷீர் தெரிவிப்பு

இலங்கையின் தென் பகுதியில் ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு கிழக்கு மாகாண சபை மூலம் 10.6 மில்லியன் ரூபாய் நிதியைத் திரட்டுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஷீர் அஹமட் தெரிவித்தார்.

இது தொடர்பாக முதலமைச்சரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இயற்கை அனர்த்தங்களின் போது கிழக்கு மாகாண மக்கள் என்றும் மனிதாபிமானத்தை மறந்ததில்லை. தெற்கில் இயற்கை இடரினால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணமளிக்கும் பிரேரணையைச் சமர்ப்பித்து அதற்குரிய தீர்மானங்களை எடுத்திருக்கின்றோம். இந்த இயற்கை இடரில் சிக்கிப் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இந்த தேசத்தின் சக சகோதரர்களாக நாமும் உதவிக்கரம் நீட்ட வேண்டிய தேவையுள்ளது.

கிழக்கு மாகாண மக்கள் சுனாமி மற்றும் வெள்ளம் போன்ற அனர்த்தங்களால் இதற்கு முன்னர் பாதிக்கப்பட்டிருந்த போது தென்னிலங்கையையும் நாட்டின் இதர பகுதிகளையும் சேர்ந்த சிங்கள, தமிழ், முஸ்லிம்



மக்கள் இன மத பேதம் பாராது கிழக்கு மாகாண மக்களுக்கு உதவிக்கரம் நீட்டியிருந்தார்கள்.

ஆகவே கிழக்கு மக்களும் தேசிய அனர்த்த நிலைமைகளின் போது மனிதாபிமானத்தை நிரூபித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன் வந்துள்ளோம் என முதலமைச்சர் நஷீர் அஹமட் மேலும் தெரிவித்தார்.(இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## சத்தியமே வெல்லும்

அக்பருடைய சபையில் இருந்தவர்கள் அனைவரிலும், பீர்பால் மட்டுமே அக்பரின் பிரியத்திற்குப் பாத்திரமானவராக இருந்தார். இதனால் பீர்பால் மீது சபையில் பலர் பொறாமை கொண்டிருந்தனர்.

ஒருநாள் பீர்பால் மீது பொறாமை கொண்டவர்கள் ஒன்று கூடி அவருக்கு எதிராக சதி ஆலோசனை செய்தனர். அவருக்கு எப்படியாவது கெட்ட பெயரை உண்டாக்கிவிட வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். ஒவ்வொருவரும் ஒரு யோசனை கூற தாவூத் என்பவர் பீர்பாலை அவமானப்படுத்த தன்னிடம் ஓர் அருமையான திட்டம் இருப்பதாகக் கூறினார்.

"பீர்பாலைப்பற்றி தவறாக எது சொன்னாலும் சக்கரவர்த்தி நம்பமாட்டாரே!" என்று மற்றவர்கள் சந்தேகம் எழுப்ப, "சொல்கிற விதத்தில் சொன்னால், சக்கரவர்த்தி கட்டாயம் நம்புவார்" என்று தாவூத் அடித்துக் கூறினார். உடனே மற்றவர்கள் தாவூதை உற்சாகப்படுத்தினர்.

"என் திட்டம் வெற்றி பெற வேணடுமானால், நீங்கள் எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டும்!" என்று தாவூத் கூற, "அது என்ன?" என்று மற்றவர்கள் கேட்டனர்.

"நாளைக்கு நீங்கள் அனைவரும் வழக்கப்படி குறித்த நேரத்தில் தர்பார் வந்து சேருங்கள்.

நான் மட்டும் தாமதமாக வருவேன். நான் ஏன் வரவில்லை என்று சக்கரவர்த்தி உங்களைக் கேட்பார். உடனே நீங்கள், "தாவூத் ஒரு பயங்கரமான குற்றத்தைத் தன் கண்களால் பார்த்து விட்டார். அது அவருடைய மனத்தை மிகவும் பாதித்து விட்டது. அதனால் அவர் தாமதமாக வருவார்" என்று சொல்லிவிடுங்கள். பிறகு நான் வந்து அது என்ன என்று அவரிடம் விளக்கிக் கூறுவேன்" என்று கூறினார் தாவூத்.

அனைவரும் அதற்கு சம்மதித்துப் பின் வீடு திரும்பினர். மறுநாள், தர்பார் கூடியது. பீர்பல் உட்பட அனைவரும் குறித்த நேரத்தில் தர்பாருக்கு வந்து விட்டனர். தாவூத் மட்டும் வரவில்லை. அக்பர் தர்பாரில் நுழைந்ததும் அனைவரும் எழுந்து சலாம் செய்தனர். அக்பரும் புன்னகைத்தபடி தன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு அனைவர் மீதும், தன் பார்வையை செலுத்தினர்.

அதற்குள் ஒருவன் எழுந்து, "பிரபு! தாவூத் இன்று தாமதமாக வருவதற்குத் தங்களிடம் அனுமதி கோரியுள்ளார்!" என்றார்.

"தாமதமாக வர என்ன காரணம்?" என்று அக்பர் கேட்டார். "ஒரு பயங்கரமான குற்றத்தை தன் கண் முன்னே நடக்கக் கண்டார். இதனால் அவருடைய உடல் சோர்ந்து விட்டது. ஆகையால் சிறிது தாமதமாக வருவதாகக் கூறியுள்ளார்!" என்றார் அவர்.

சற்றுநேரத்தில் தாவூதே வந்து சேர்ந்து விட்டார். உடனே அக்பர் அவரைப் பார்த்து, "ஒரு பயங்கரமான குற்றம் நிகழ்வதை நீ பார்த்தாயாமே!" என்று கேட்டார்.

"ஆம் பிரபு!" என்றார் தாவூத். "அது என்ன குற்றம்? உடனே சொல்! யார் அந்தக் குற்றவாளி?" என்று அக்பர் சீறினார்.

"அதை எப்படி என் வாயால் சொல்வேன் பிரபு? உங்களுடைய மிகுந்த நம்பிக்கைக்கும், அபிமானத்திற்கும் பாத்திரமான அவரைப் பற்றி என் வாயினால் எப்படிச் சொல்வேன் பிரபு? அதைக் கேட்டால், உங்கள் மனம் மிகவும் புண்படுமே!" என்று தாவூத் நாடகமாடினார்.

"சட்டத்தின் முன் அனைவரும் சமம்! அவன் யாராயிருந்தாலும் சரிதான்! அவன் யாரென்று உடனே சொல்!" என்று அக்பர் உறுமினார்.

"வேறு யாருமில்லை பிரபு! உங்களுடைய பீர்பல்தான் அது!" என்றதும் அக்பர் அதிர்ச்சியுற்றார். பீர்பலும் அதிர்ச்சியுற்றார். ஆனால் பீர்பல் உடனே விஷயத்தைப் புரிந்து கொண்டார். தன் மீது வீண் பழி சுமத்த தாவூத் திட்டமிட்டுள்ளார் என்று தெரிந்து விட்டது.

"என்ன பீர்பலா?" என்று மிகுந்த வியப்புடன் அக்பர் கேட்டார்.



"ஆம், பிரபு! நான் என் கண்களினால் கண்டதைச் சொல்கிறேன்! நேற்று மாலை நான் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில், எனக்கு சற்றுத் தொலைவில் பீர்பல் வந்து கொண்டு இருந்தார். திடீரென அவர் குனிந்து தரையில் கிடந்த ஒரு தங்க மாலையைப் எடுத்தார். பிறகு தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று சுற்று முற்றும் பார்த்தபின், மாலையைத் தன் பையில் போட்டுக் கொண்டு சென்று விட்டார். சிறிது நேரங்கழித்து அங்கு மிகுந்த பதற்றத்துடன் வந்த ஓர் இளைஞன் "என் தங்க மால்லை வழியில் இங்கே எங்கோ விழுந்து விட்டது. அதைப் பார்த்தீர்களா?" என்று எல்லாரையும் கேட்டுக் கொண்டிருந்தான். அவனிடம் உண்மையைச் சொல்ல நினைத்தேன். அதற்குள் அவன் அங்கிருந்து சென்று விட்டான்" என்று தாவூத் அழகாகத் தான் கற்பனை செய்து வந்த கதையைக் கூறினார்.

அக்பர் கோபமாக, "பீர்பல், இவர் உன்னைப் பற்றிக் கூறுவது உண்மையா?" என்று கத்தினார். "இல்லை பிரபு! நான் மாலை நேரத்தில் அங்கு வந்தது உண்மை! ஆனால் இவர் குறிப்பிட்டது போன்ற சம்பவம் எதுவும் அப்போது நிகழவில்லை" என்றார் பீர்பல்.

"பிரபு! பின் நான் என்ன பொய்யா சொல்கிறேன்? பீர்பல் மறைக்கிறார். நான் சொல்வது சத்தியம்!" என்றார் தாவூத்.

"பீர்பல் எடுத்ததை நிரூபிக்க வேறு சாட்சிகள் இல்லாதபோது, நீ கூறுவதை நான் எப்படி நம்ப முடியும்?" என்று அக்பர் தாவூதை கேட்டான்.

"அதற்கு ஒரு சோதனை செய்து பார்க்கலாம். பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியை நான் எடுத்து வருகிறேன். அதை தன் கையில் பீர்பல் பிடித்துக் கொள்ளட்டும். அவர் சத்தியவான் என்பது உண்மையானால், அந்தக் கம்பி அவரைச் சுடாது!" என்றார் தாவூத்.

அதைக் கேட்ட பிறகு பீர்பலின் பக்கம் திரும்பிய அக்பர், "பீர்பல், நீ இந்த சத்திய சோதனைக்கு உட்பட்டேயாக வேண்டும்! நீ ஒரு நிரபராதி என்பதை நிரூபித்துக் காட்டு! நீ சொல்வது சத்தியம் என்பதை அப்போதுதான் எல்லாரும் நம்புவார்கள்" என்றார்.

பீர்பலின் மூளை வெகு விரைவாக வேலை செய்தது. உடனே அவர், "பிரபு! அந்த சத்திய சோதனைக்கு நான் தயார்! ஆனால் என் மீது குற்றம் சாட்டும் தாவூத் அவர்களும் தான் சொல்வது சத்தியம் என்பதை நிரூபிக்க வேண்டும்" என்றார்.

"அது எப்படி? அவர் என்ன செய்ய வேண்டும்?" என்று அக்பர் கேட்டார். "பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியை தாவூத் முதலில் தன் கைகளில் பிடித்துக் கொள்ள வேண்டும். பிறகு என்னிடம் தர வேண்டும்!" என்றார் பீர்பல்.

அதுகேட்டு, அடிபட்ட நாயைப் போல் தாவூத் வீல் என்று கத்தினார். "ஐயோ! அது என்னால் முடியாது!" என்று அலறினார்.

"ஏன் முடியாது? நீ சொல்வதை நிரூபிக்க நீயும் அந்த சோதனைக்கு ஆளாக வேண்டும்" என்றார் பீர்பல்.

உடனே தாவூத் அக்பரை நோக்கி, "பிரபு! என்னை மன்னித்து விடுங்கள்! சங்கிலியை எடுத்தது பீர்பல் இல்லை. நான் தவறாகச் சொல்லி விட்டேன்" என்று கூறி அவர் கால்களில் விழுந்து புலம்பினார்.

"பீர்பல் மீது பொய்க்குற்றம் சாட்டிய இந்த அயோக்கியன் தாவூதை சிறையில் அடையுங்கள்" என்று காவலர்களுக்கு உத்தரவிட்ட அக்பர், பிறகு பீர்பல் பக்கம் திரும்பி, "என்னை மன்னித்து விடு பீர்பல்! நான் கூட உன்னை ஒருக்கணம் சந்தேகப் பட்டுவிட்டேன்" என்றார்.

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

06.2017
06

- 1508 - புனித ரோமப் பேரரசன் முதலாம் மாக்சிமிலியன் பிரியுல்லா என்ற இடத்தில் வெனிசியப் படைகளிடம் தோற்றான்.
- 1711 - யாழ்ப்பாணத்தில் இந்து மதச் சடங்குகளுக்கு ஒல்லாந்து அரசினால் தடை விதிக்கப்பட்டது.
- 1752 - மொஸ்கோவின் மூன்றில் ஒரு பங்கு தீயினால் அழிந்தது. 18.000 வீடுகள் சேதமடைந்தன.
- 1761 - சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் வீனஸ் கோளின் நகர்வு பூமியின் பல இடங்களிலும் அவதானிக்கப்பட்டது.
- 1808 - நெப்போலியனின் சகோதரன் ஜோசப் பொனபார்ட் ஸ்பெயின் மன்னன் ஆனான்.
- 1832 - பாரிசில் மாணவர் எழுச்சி முறியடிக்கப்பட்டது.
- 1844 - கிறிஸ்தவ இளையோர் அமைப்பு (YMCA) லண்டனில் அமைக்கப்பட்டது.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் டென்னசியில் மெம்ஃபிஸ் நகரை கூட்டமைப்புப் படைகளிடம் இருந்து கைப்பற்றினர்.
- 1882 - அரபிக் கடலில் இடம்பெற்ற புயலால் மும்பையில் 100.000 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.
- 1912 - அலாஸ்காவில் நொவரப்டா எரிமலை வெடித்தது.
- 1971 - சோயுஸ் 11 ஏவப்பட்டது.
- 1974 - சுவீடனில் நாடாளுமன்ற முடியாட்சி அமைக்கப்பட்டது.
- 1993 - மங்கோலியாவில் முதலாவது நேரடியாக ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.
- 2004 - இந்தியாவில் தமிழ் மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1799 - அலெக்சாண்டர் புஷ்கின், உருசிய எழுத்தாளர், கவிஞர் (இ. 1837)
- 1901 - சுகர்னோ, இந்தோனேசியாவின் முதல் அரசுத் தலைவர் (இ. 1970)
- 1930 - சுனில் தத், இந்தியத் திரைப்பட நடிகர் (இ. 2005)
- 1948 - சுப்ரமண்ய ராஜு, தமிழ் எழுத்தாளர் (இ. 1987)
- 1986 - பாவனா, தமிழ், மலையாளத் திரைப்பட நடிகை

### இறப்புகள்

- 1947 - மு.சி.பூரணலிங்கம்பிள்ளை, தமிழறிஞர் (பி. 1866)
- 1996 - ஜோர்ஜ் ஸ்நெல், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1903)
- 2007 - வீ.கே.சமரநாயக்க, இலங்கையின் அறிவியியலாளர் (பி. 1939)
- 2008 - ஜோர்ஜ் சந்திரசேகரன், இலங்கை வானொலி ஒலிபரப்பாளர் (பி. 1940)
- 2009 - ராஜமார்த்தாண்டன், கவிஞர், எழுத்தாளர்

### சிறப்பு நாள்

- தமிழீழம் - மாணவர் எழுச்சி நாள்
- சுவீடன் - தேசிய நாள்
- தென் கொரியா - நினைவு நாள்
- குயின்ஸ்லாந்து நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சுன்னாகம் | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 250 | 110 | 180 | 200 | 160 |
| உருளைக்கிழங்கு | 120 | 150 | 80 | 120 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 400 | 600 | 350 | 450 | 500 | 300 |
| தக்காளி | 140 | 200 | 100 | 220 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 80 | 100 | 60 |
| கோவா | 160 | 300 | 150 | 200 | 160 | 140 |
| கரட் | 250 | 400 | 200 | 240 | 300 | 200 |
| பூசணி | 70 | 100 | 50 | 80 | 100 | 60 |
| புடோல் | 100 | 100 | 40 | 120 | 120 | 120 |
| வாழைக்காய் | 60 | 100 | 40 | 70 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 300 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 400 | 150 | 180 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 140 | 160 | 100 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 70 | — | 200 | 100 |
| பயற்றங்காய் | 120 | 100 | 100 | 100 | 120 | 140 |
| லீக்ஸ் | 100 | 150 | 120 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 140 | 150 | 100 | 160 | 160 | 140 |
| கறிமிளகாய் | 250 | 400 | 140 | 200 | 300 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 60 | 100 | 120 | 160 |
| போஞ்சி | 200 | 300 | 180 | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 160 | 150 | 130 | 140 | 200 | 140 |
| கீரை - 1பிடி | 20 | 50 | 20 | 40 | 30 | 25 |
| தேசிக்காய் | 40 | 50 | 40 | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 70 | 65 | 40-60 | 70 |
| இராசவள்ளி | 240 | 400* | — | — | 240 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 150 | — | 240 | — | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | — | 100 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 10 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 150 | — | — | — | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டவர்கள் தங்கள் தவறுகளுக்கு சமாதானம் தேடுவார்கள். நல்லவர்கள் தங்கள் தவறுகளை விட்டுப் பிரிவார்கள் ~ பென் ஜான்சன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சரிக்குச் சரி போடுங்கள்; பிழையை சரியாகத் திருத்துங்கள்

ஒரு காலத்தில் நம்மண்ணில் கணக்கியல் துறையில் அழகேசன் என்றொரு பிரபலமான ஆசிரியர் இருந்தார்.

கணக்கியல் சார்ந்த நிறையப் புத்தகங்களை எழுதிய பெருமையும் அவருக்கு உண்டு.

ஒருமுறை க.பொ.த உயர்தரப் பரீட்சையின் கணக்கியல் (Accounts) விடைத்தாளை திருத்தும் பணி நடைபெற்ற போது, அதன் சிரேஷ்ட விடைத்தாள் திருத்துபவராக அவர் கடமையாற்றினார்.

விடைத்தாள் திருத்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திருத்தப்பட்ட விடைத்தாள்களை அவர் மீள்பார்வைக்குட்படுத்துகிறார்.

ஒரு மாணவன் செய்திருந்த இலாபநட்டக் கணக்குக்கு ஆசிரியர் ஒருவர் முழுமையாக பிழை போட்டிருந்தார்.

அதைப்பார்த்த அழகேசன் அவர்கள் குறித்த விடைத்தாள் திருத்தியவரை அழைத்தார். எதற்காக இதற்குப் பிழை இட்டீர்கள் என்று கேட்டார்.

அதற்கு அந்த ஆசிரியர், சேர்! இந்த மாணவன் பரீட்சை மீதியை, அப்படியே இலாபநட்டக் கணக்கின் வரவுப் பக்கமும் எழுதி செலவுப் பக்கமும் எழுதியுள்ளான் என்றார்.

அதற்கு அழகேசன் அவர்கள், அப்படி எழுதினால் உங்களுக்கு என்ன பிரச்சினை? என்று கேட்டார்.

இந்தக் கேள்வியால் ஆசிரியர் அதிர்ந்து போனார். பரீட்சை மீதியில் வரவுப் பக்கம் வரவேண்டியது வந்திருந்தால் அதற்குச் சரி போடுங்கள்.

செலவுப் பக்கம் வரவேண்டியது செலவுப் பக்கத்தில் இருந்தால் அதற்கும் சரி போடுங்கள்.

மாறிப்பதிந்தால் புள்ளிகள் கழிப்பது என்ற நிபந்தனை எதுவும் இல்லை என்பதால், அந்த மாணவனுக்கு கிடைக்க வேண்டிய புள்ளிகளை வழங்குங்கள் என்றார் அழகேசன்.

இது எதைக் காட்டுகிறது எனில், சரிக்குச் சரி போடுங்கள். பிழைக்குப் பிழை போடுங்கள் என்பதுதான்.

சரிக்குப் பிழையும் பிழைக்குச் சரியும் இடுவது மிகப்பெரும் பாதகத்தை ஏற்படுத்தும். அதேநேரம் பிழையை பிழையாகத் திருத்தம் செய்வதும் மிகப்பெரும் அநீதி.

எனவே பிழையையும் சரியாகத் திருத்த வேண்டும் என்பதால், எதிலும் நிதானமாக இருப்பது மிகவும் அவசியம்.

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு தனது பரிந்துரையை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களிடம் கையளித்துள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்தப் பரிந்துரைகள் பொதுமக்கள் முன்னிலையில் வெளிப்படுத்தப்படும் போது அதில் இருக்கக்கூடிய விடயங்களை பொதுமக்கள் முழுமையாக அறிய முடியும்.

அதேநேரம் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள், அந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைக்குழு நடத்திய விசாரணை அறிக்கைகள், அவற்றின் முடிவுகள், இதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் முன்வைத்த தமது தரப்பு நியாயப்பாடுகள் என அனைத்தும் எமது மக்கள் அறியக் கூடியதாக இருத்தல் கட்டாயமானதாகும்.

ஏனெனில் குற்றச்சாட்டுக்கள் சரியான முறையில் நிரூபிக்கப்படுவதென்பது மிக மிக அவசியமானது.

ஒரு சிலரின் தேவையை அல்லது வேறு நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக எந்த முடிவுகளும் அமையக்கூடாது.

அதேநேரம் குற்றச்சாட்டுக்கள் உண்மையானதும் சரியானதும் எனில் அதற்கான தீர்ப்புக்களும் வழங்கப்பட வேண்டும்.

எதுவும் பொதுவெளிப்பகிரங்கப்படுத்தலாக இருத்தல் வேண்டும் என்பதுதான் நாம் இங்கு முன்வைக்கும் கருத்து.

# யாழ்ப்பாணத்திற்கும் கதிர்காமத்திற்கும் இடையிலான உறவில் இடைவெளி ஏற்பட மடாலய அழிப்பே காரணம்

## கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கதிர்காமத்தில் தமிழ் மக்களது பாரம்பரியங்கள் அவர்களது மடாலயங்கள் அழிக்கப்பட்டமையாலேயே யாழ்ப்பாணத்திற்கும் கதிர்காமத்திற்கும் இடையிலான உறவில் இடைவெளி ஏற்பட்டதாக தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்துள்ளார். அத்துடன் கதிர்காமத்தில் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் யாத்திரிகர்கள் தங்குமடம் ஒன்றை அமைப்பதற்கு தேவையான காணியை கதிர்காம ஆலய நிர்வாகம் வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் கதிர்காமக்கந்தன் ஆலயத்தின் தலைமைக்குரு பஸ்நாயக்க நிலமே டி.பி.குமாரகே யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இவ்விஜயத்தின் போது நல்லூர் ஆலயத்திற்கு சென்று தரிசித்துவிட்டு பின்னர் நல்லை ஆதீன குரு முதல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இக் கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணத்திற்கும் கதிர்காமத்திற்கும் நெருங்கிய தொடர்பு காணப்படது. இத் தொடர்பானது 1977ஆம் ஆண்டிற்கு பின்னர் குறைவடைந்து உறவில் இடைவெளி ஏற்படத் தொடங்கிவிட்டது. இதற்கு பல காரணங்கள் உள்ளன. குறிப்பாக கதிர்காமத்தில் காணப்பட்ட இராமகிருஷ்ணன் மடத்தை அரசாங்கம் எடுத்துக் கொண்ட பின்னர் தமிழ் மக்கள் அங்கே செல்வதை குறைத்துக் கொண்டார்கள். இந்து கலாசார அமைச்சு அங்கே ஓர் மடத்தை அமைத்திருந்தாலும் தென்பகுதி மக்களே முற்பதிவுகளை செய்து கொள்வதால் தமிழ் மக்கள் அங்கே வந்து தங்குவதற்கு ஓர் இடமும் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இவற்றைவிட முன்னர் கதிர்காம ஆலய வாசலில் "ஓம் முருகா" என தமிழில் சுலோகம் காணப்பட்டது. ஆனால் தற்போது அச் சுலோகத்தில் காணப்பட்ட "ஓம்" என்ற மந்திரச் சொல்லை நீக்கிவிட்டார்கள். அதே போன்று கதிர்காமக் கந்தன் மீது பன்னிரெண்டாம் நூற்றாண்டில் பாடப்பட்ட திருப்புகழை அங்கே பாடுவதை தற்போது நிறுத்தி விட்டார்கள். தமிழ் மக்கள் மலையேறுவதற்கு சென்றால் அங்கே இருக்கும் வாகன சாரதிகள் கட்டுப்பாடற்ற முறையில் வாடகைப்பணம் வசூலிக்கின்றார்கள். இவ்வாறான நடவடிக்கைகள் கதிர்காமத்தில் காணப்படுவதால் தமிழ் மக்கள் குறிப்பாக யாழ்ப்பாண மக்கள் அங்கே செல்வதை குறைத்துக்கொண்டுள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் கதிர்காம ஆலய நிர்வாகம் அகில இலங்கை இந்து மாமன்றம் ஓர் யாத்திரிகர் மடத்தை அமைப்பதற்கு காணியொன்றை வழங்க வேண்டும். அத்துடன் கதிர்காமக் கந்தனது அற்புதங்கள், பெருமைகள், ஆய்வுகள் தொடர்பான பல தமிழ் புத்தகங்கள் உள்ளன. அவற்றை அங்கே காட்சிப்படுத்த வேண்டும், அதேபோன்று ஆலயத்தின் எந்தவொரு வாசகங்களையும் அறிவித்தல்களையும் தமிழ்மொழியிலும் காட்சிப்படுத்த வேண்டும். அத்துடன் யாழ்ப்பாணத்தில் இருந்து ரயில் மூலம் பக்தர்கள் கதிர்காமததை அடைவதற்கு வசதியாக ரயில் ஒழுங்கு களையும் கதிர்காம ஆலய நிர்வாகத்தினர் மேற்கொள்ள வேண்டும் என ஆறு.திரு முருகன் கதிர்காம ஆலயக் குரு பஸ்நாயக்க நிலமேக்கு கூறியிருந்தார்.

இது தொடர்பாக கதிர்காம ஆலய குரு பஸ்நாயக்க நிலமே டி.பி.குமாரகே பதிலளிக்கும் போது. யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து மதத் தலைவர்களும் கதிர்காமத்திற்கு வந்து நேரடியாக அங்குள்ள பிரச் சினைகள் பற்றி பேச வேண்டும். அவ்வாறு பேசுவதனூடாக உடனடியாக பல பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியுமாக இருக்கும். அத்துடன் நாம் இப் பொறுப்பை பொறுப்பேற்று தற்போது இரண்டு வருடங்களே ஆகின்றன. இவ் இரண்டு வருடங்களில் தமிழ் யாத்திரிகர்கள், பக்தர்களுக்கு பல வசதிகளை ஏற்படுத்தி கொடுத்துள்ளோம்.

எனக்கு முன்னர் பொறுப்பில் இருந்தவர்களால் தமிழர்களுக்கு கதிர்காமத்தில் குறைபாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் நான் அவற்றை தீர்க்கவே முயல்கின் றேன். எவ்வித இன வேறுபாடுகளுமின்றி அனைத்து பக்தர்களையும் சமமாக மதிக்கவே விரும்புகின்றோம். அத்துடன் அகில இலங்கை இந்துமாமன்றத்திற்கு 125 அறைகள் கொண்ட கட்டடத்தை வழங்குவதற்கு தயாராகவுள்ளோம்.

இவ்வாறான நிலையில் இங்குள்ள அனைத்து மதத் தலைவர்களும் கதிர்காமத்திற்கு நேரடியாக வந்து எம்மோடு கலந்துரையாட வேண்டும். எம்மோடு எப்போதும் உறவில் இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.(இ-4)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கோட்ட ஆசிரிய ஆளணியை இணையத் தளத்தில் திருத்தம் செய்வதற்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை வகை III பாடசாலைகளுக்கும் எதிர் வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வகை II ஏபி, 1சி, வகை II பாடசாலை களுக்கும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இப்பாடசாலைகளின் பொறுப்பு ஆசிரியர்களை வைகாசி மாத சம்பளப் பட்டியல், பாடசாலையின் ஆளணி விபரம், இறுதியாக நிரப்பப்பட்ட ஆசிரியர் விபரப்படிவம் என்பவற்றுடன் வருமாறு கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன் அறிவித்துள்ளார்.(இ-3-136)

## தடைகள் வரினும் முன்செல்வோம்

(கொழும்பு)

இனங்களுக்கிடையில் சகவாழ்வை ஏற்படுத்தும் எமது பயணத்துக்கு எந்த தடைகள வந்தாலும் அதனை உடைத்துக்கொண்டு முன் செல்வோம் என தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தள மீள்அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (செ-11)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில தேக்கவத்தை பிரதேசம் ஆகிய இடத்திலும் மன்னார் பிரதேசத்தில பெரிய நீலாச்சேனை, இத்திக்கண்டல், சொர்ணபுரி, பாப்பாமோட்டை, அடம்பன், பரப்பாங்கண்டல், அடம்பன் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## பிரதிபலிப்பு சிகிச்சையும் பயிற்சியும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை முதியோர் சுகவாழ்வு கழகம், சிறிலங்கா சிறிராம் சந்திரமிஷன் ஒன்றிணைந்து நடத்தும் பிரதிபலிப்பு சிகிச்சையும் பயிற்சியும் 3ஆம்திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடந்து வருகிறது.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபத்தில் நடந்து வரும் இந்தப் பிரதிபலிப்பு சிகிச்சையும் பயிற்சியும் நாளை மறுதினம் 8ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை இடம்பெறும். (இ-3)

**விலங்கு விசர் நோயினால் பாதிக்கப்பட்ட பிராணியில் ஏற்படும் அறிகுறிகள்**

அசாதாரணமாக ஊளையிடும், நீர், உணவை வழங்க முடியாத நிலை, கண்கள் சிவந்து வாயிலிருந்து அதிக உமிழ்நீர் வடியும், வால் கீழ் நோக்கி வளைந்திருக்கும்.

கடித்த நாய் 14 நாட்களுக்குள் இறந்துவிடின் அசிரத்தையாக இருந்துவிடாதீர்

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ். மாநகரசபை.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ பொருளும் பெயரும் போதிய ப்யனைத் தராது. புகழும் கல்வியும் தராது.பயனளிப்பது அன்பே. துன்பங்கள் வைரக்கல் சுவர்போலக் குறுக்கிட்டாலும் அதனைப் பிளந்து கொண்டு முன் செல்வது ஒழுக்கமே.

❖ மிகச்சிறந்த பணியை நாம் செய்வதும் மிகப்பெரிய திறமையைக் காட்டுவதும் எப்போது? நான் என்னும் நினைவை அறவே மறந்து தனக்கென ஒன்றுமின்றி இரு. வருவது வரட்டும் என்று சிறிதும் கவலையற்றிரு. அப்போதுதான் நீ உண்மையாக ஏதாவது பணி செய்ய முடியும்.

❖ காம எண்ணமும் காமச் செயலைப் போன்று தீயதாகும். ஆசையை அடக்குவதே மிகச் சிறந்த பலனை விளைவிக்கும். நல்லனவோ தீயனவோ உனது செயல்களை உமிழ்ந்தபின் மீண்டும் அவற்றை ஒருபோதும் நினைக்காதே. செய்தது செய்தாயிற்று. மூட நம்பிக்கையை தூர எறி. மரணமே எதிர்வந்தாலும் பலவீனத்திற்கு இடங்கொடுக்காதே. கழிந்ததை எண்ணிக் கலங்காதே. சென்றதைக் குறித்து சிந்திக்காதே. உன் நற்செயல்களையும் நினைவில் வைக்காதே. கட்டற்று நில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "யுவராஜ் அதிரடி ஆட்டம்" விராட் ஹோலி பாராட்டு



சம்பியன்ஸ் டிராபி தொடரில் பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் யுவராஜ் சிங்கின் ஆட்டம் சிறப்பாக இருந்தது என்று இந்திய அணியின் தலைவர் விராட் ஹோலி அவரை பாராட்டியுள்ளார்.

இங்கிலாந்தில் தற்போது சம்பியன்ஸ் டிராபி தொடர் நடைபெற்று வருகிறது. இதில் எட்டு அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன. இந்நிலையில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதின.

இப்போட்டியில் இந்திய அணியின் துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு சிறப்பான முறையில் இருந்தது. இதனால் இந்தியஅணி பாகிஸ்தான் அணியை 164 ஓட்டங்களுக்குள் சுருட்டி, 124 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் அணியுடன் பெற்ற வெற்றியை இந்திய ரசிகர்கள் வெகுவாக கொண்டாடி வருகின்றனர். இந்நிலையில் இது குறித்து இந்திய அணியின் தலைவர் விராட் ஹோலி கூறுகையில், யுவராஜ் சிங் யார்க்கர், லோ-புல்டாஸ் மற்றும் ஷாட் பிச் பந்துகளை சாதாரணமாக பவுண்டரிகளாக விளாசினார்.

அவர் வேகமாக ஓட்டங்கள் சேர்த்ததால், நான் நிதானமாக ஆட முடிந்தது. யுவராஜ் சிங் இப்படி விளையாடும் போது இந்திய அணியே சிறந்த பலத்துடன் இருப்பதாக அர்த்தம் என்று பாராட்டியுள்ளார்.

மேலும் பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் யுவராஜ் சிங் அதிரடியாக விளையாடி 32 பந்துகளில் 53 ஓட்டங்கள் குவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# "யாழின் கில்லாடி கிரிக்கெட்" கொம்மந்தறை இளைஞர் வெற்றி



புலோலி இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்துகின்ற அணிக்கு 10 ஓவர்கள் 11 பேர் கொண்ட மாபெரும் விலகல் முறையிலான 2017 ற்கான "யாழின் கிரிக்கெட் கில்லாடி" சுற்றுப்போட்டியில் 50 கழகங்கள் பங்குபற்றியிருந்தன.

முதலாவது அரை இறுதியில் பருத்தியூர் இளந்தளிர் மற்றும் கொம்மந்தறை இளைஞர்கள் - விளையாட்டுக்கழகங்கள் மோதிக் கொண்டன

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கொம்மந்தறை அணித்தலைவர் நிதர்சன் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இளம் தளிர் 10 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்களை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது.

அதிகபட்சமாக சுதர்சன் 19 ஓட்டங்களை பெற்றார். கொம்மந்தறை சார்பாக 2 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களை கொடுத்து 5 இலக்குகளை சாய்த்தார் நிதர்சன். 62 என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய கொம்மந்தறை 7.5 ஓவர் நிறைவில் 6 இலக்குகளை இழந்து நான்கு இலக்குகள வெற்றியைப் பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது கொம்மந்தறை இளைஞர் விளையாட்டு கழகம். (க)

# புலோலி இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

# இறுதிப் போட்டியில் ஸ்ரீமுருகன்



புலோலி இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்துகின்ற அணிக்கு 10 ஓவர்கள் 11 பேர் கொண்ட மாபெரும் விலகல் முறையிலான 2017 இற்கான "யாழின் கிரிக்கெட் கில்லாடி" சுற்றுப்போட்டியில் 50 கழகங்கள் பங்குபற்றியிருந்தன.

அரை இறுதியில் நடப்பு சம்பியனான கொக்குவில் காமாட்சியை எதிர்த்து மல்லாகம் ஸ்ரீமுருகன் அணிகள் மோதிக்கொண்டன. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற காமாட்சி அணித்தலைவர் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய காமாட்சி 10 ஓவர்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 83 ஓட்டங்களை பெற்றது. அதிகபட்சமாக ஜெயரூபன் 20 ஓட்டங்களை பெற்றார்.

84 என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மல்லாகம் ஸ்ரீமுருகன் 9 ஓவர்களில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து 88 ஓட்டங்களை பெற்று 5 இலக்குகளால் வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தது.

அதிக பட்சமாக தனுசன் 35 ஓட்டங்களை (4 சிக்ஸர்கள்) பெற்றார்.

இறுதிப்போட்டியில் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் மல்லாகம் மற்றும் கொம்மந்தறை இளைஞர் விளையாட்டு கழகம் மோதவுள்ளன. (க)

# வடமராட்சி பிரிமியர் லீக் சுற்றுத்தொடரின் அறிமுக நிகழ்வு





வடமராட்சி லீக்கின் அனுமதியுடன் வடமராட்சியின் அனைத்து கழக உதைபந்தாட்ட வீரர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து ஆறு அணிகளாக இணைத்து கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமராட்சி பிரிமியர் லீக் சுற்றுத்தொடரின் அறிமுக நிகழ்வு அண்மையில் கரணவாய் மூத்த விநாயகர் திருமண மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடமராட்சி லீக்கின் தலைவர், வடமராட்சி உதைபந்தாட்ட நடுவர் சங்க தலைவர் உட்பட ஆறு அணிகளின் பயிற்றுநர்கள், அணிகளை விலைக்கு வாங்கிய உரிமையாளர்கள், உதைபந்தாட்ட வீரர்கள் எனப் பல தரப்பினரும் கலந்துகொண்டனர். (க)

# இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது அண்ணா சிலையடி இளைஞர் வி.க



கொற்றாவத்தை றேஞ்சஸ் வி.க நடத்தும் 19 வயதுக்குட்பட்ட வடமராட்சி கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் டயமன்ஸ், யங்கம்பன்ஸ், ஆதிசக்தி ஆகிய அணிகளை வீழ்த்தி அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டு கழகம் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

இறுதி போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டு கழகத்தை அதன் சொந்த மைதானத்தில் எதிர் கொள்ளவுள்ளது. (க)



கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டு கழகத்தினால் நடத்தப்படும் அணிக்கு 5 ஓவர்கள் மற்றும் 6 ஓவர்கள் கொண்ட போட்டிகளில் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது அரசடி எல்பெல்ஸ் விளையாட்டுக்கழகம். அவ் அணியினரை படத்தில்காணலாம். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரிழந்தவரின்...

க்கு இலக்காகி மரணமானார்.

இது தொடர்பில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவானின் உத்தரவிற்கமைய பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியை பிரேத பரிசோதனை செய்யுமாறு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையில் பிடரிக்கும் கழுத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் ஆழமான குத்தின் காரணமாக இரத்தப் பெருக்கு ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஏற்கெனவே கைது செய்யப்பட்ட சந்தேக நபரின் உடலில் காயம் இருப்பதனால் பொலிஸாரின் பாதுகாப்புடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இரண்டாவது சந்தேக நபர் தொடர்பிலும் தகவல் ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது. இந்நிலையில் சடலத்தை புதைக்குமாறு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது. (செ-60)

## இனவாத தூண்டிகள்...

யின் தொழில்நுட்ப பீடத்தை கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் மற்றும் அமைச்சர் எஸ்.பீ.திசாநாயக்க ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

இதன்போது உரையாற்றிய அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, நாட்டில் இனவாதத்தை தூண்டுவதற்கு யாராவது முயற்சி செய்தால் அவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதை அரசாங்கம் உரிய முறையில் நிறைவேற்றும்.

நாட்டில் வாழுகின்ற அனைத்து மக்களையும் பாதுகாக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு இருக்கின்றது.

நாட்டில் வாழுகின்ற அனைவரும் ஏதோ ஒரு வகையில் உறவினர்களே. நாங்கள் இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றால் அனைவரும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும். இல்லாவிட்டால் இந்த நாடு அபிவிருத்தி அடைய முடியாது.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துரித நிவாரணம் வழங்கப்படுகின்றது. ஆனால் ஒரு சிலர் அரசாங்கத்தை குறை கூறிக் கொண்டு இருக்கின்றார்கள். அவர்கள் அதற்கு மட்டுமே தகுதியானவர்கள்.

இந்த நாட்டில் ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து செயற்படுவதன் காரணமாக நாம் பல வெளிநாடுகளுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தியிருக்கின்றோம்.

எமக்கு அருகில் இருக்கின்ற இந்தியாவை நாம் ஒரு பொழுதும் ஒதுக்கிவிட முடியாது. அண்மையில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வருகையின் மூலமாக நாம் பல நன்மைகளை பெற்றுக் கொண்டிருக்கின்றோம்.

எனவே அனைத்து நாடுகளினதும் உதவிகளை பெற்றுக் கொண்டு இந்த நாட்டை ஆசியாவின் சிறந்த ஒரு நாடாக மாற்றி அமைக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (செ-11)

## அலுவலக சட்ட மூலம்...

ளது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் பிரகாரம் கடந்த 2016ஆம் ஆண்டு இந்த சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஜே.வி பியினால் இந்த அலுவலகத்துக்கு ஒப்பந்தம் செய்யும் அதிகாரம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட திருத்தம் கடந்த மார்ச் மாதம் அமைச்சரவையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த திருத்தமும் உள்ளடக்கப்பட்ட சட்ட மூலத்தை சட்ட வரைஞர் தயாரித்து. அதற்கு சட்ட அதிபர் திணைக்களமும் ஒப்புதல் வழங்கியுள்ள நிலையில், நாடாளுமன்றத்தில் அதனை மீண்டும் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 22ஆம் திகதி இந்த சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது. (செ-11)

## அனுர பிணையில்...

திப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க பிணை நிபந்தனைகளை பூர்த்தி செய்து நேற்று நீதிமன்றத்தில் இருந்து வெளியேறியுள்ளார்.

அனுரவுக்கு பிணை வழங்கி கொழும்பு மேல் நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவு பிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், மேல் நீதிமன்றத்தின் இந்த உத்தரவு குறித்து, நேற்று இடம்பெற்ற வழக்கு விசாரணைகளின் போது, கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தப்பட்டதையடுத்து, நேற்று பிணை நிபந்தனைகளை பூர்த்தி செய்து சந்தேக நபர் நீதிமன்றத்தில் இருந்து வெளியேறியுள்ளார்.

மரணமடைந்த ரக்பி வீரர் வசீம் தாஜுடினின் வழக்கில் சாட்சிகளை மறைக்க முற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அனுர சேனாநாயக்க, நீண்டகாலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## எதிர்பார்ப்புக்களுடன்...

வடமாகாண அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்த குழுவின் அறிக்கை வட மாகாண சபையில் உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த குழுவின் அறிக்கை இன்று அல்லது நாளை சபையில் சமர்பிக்கப்படலாம் என வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபையின் அமைச்சர்களுக்கு எதிராக பல்வேறு தரப்பினராலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்காக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மூவரடங்கிய சுயாதீன விசாரணைக் குழு வொன்றை நியமித்திருந்தார்.

ஓய்வுபெற்ற நீதிபதிகளான எஸ்.தியாகேந்திரன். எஸ்.பரமராஜா மற்றும் ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர் எஸ்.பத்திநாதன் ஆகியோர இந்த குழுவில் அங்கம் வகித்தனர்.

இந்த குழுவிடம் வடமாகாண சபையின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் குற்றச்சாட்டுக்களை சமர்ப்பித்திருந்தனர்.

இந்த குழுவின் விசாரணை அறிக்கையை, அடுத்த மாகாண சபை அமர்வில் சமர்பிப்பதாக வட மாகாண சபை முதலமைச்சர் அண்மையில் கூறியிருந்தார்.

இந்த குழுவின் விசாரணை நிறைவு பெற்றுள்ள நிலையில் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனிடம் அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் 4 அமைச்சர்களுக்கும் முதலமைச்சரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வடமாகாண விவசாய அமைச்சர் மற்றும் வட மாகாண கல்வி அமைச்சர் ஆகியோர் உடனடியாக பதவி விலக வேண்டும் என விசாரணை அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

விசாரணை அறிக்கையில் என்ன கூறப்படுகின்றதோ அது நடைமுறைப்படுத்தப்படும் என முதலமைச்சர் சபையில் அறிவித்திருந்த நிலையிலும் இன்றைய தினம் விசாரணை அறிக்கையுடன் மாகாண சபை அமர்வு கூடுகின்றது. இந்த அமர்வில் அறிக்கையை பகிரங்கப்படுத்துமாறு உறுப்பினர்கள் சிலர் கோரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அறிக்கையை முதலமைச்சரே வெளியிட வேண்டும் என்பதால், இன்றைய அமர்விற்கு சில தனிப்பட்ட காரணங்களால் முதலமைச்சர் சமூகம் தர முடியாத நிலை உள்ளதாகவும் அறிய முடிகின்றது. இவ்வாறான இழுபறிகளுக்கு மத்தியிலேயே இன்றைய தினம் சபை கூடுகின்றது.

இதேவேளை முதலமைச்சர் இன்றைய தினம சபைக்கு சமுகம்ளிக்கமாட்டார் என்பது தொடர்பில் எந்த அறிவித்தலும் நேற்று இரவு 8.30 மணிவரை கிடைக்கவில்லை என அவைத் தலைவர் தெரிவித்தார்.

மேலும் எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா உள்ளிட்ட உறுப்பினர்கள் பலரும் மேற்படி விடயம் தொடர்பில் இன்றைய தினம் சபையில் கேள்வியெழுப்பவுள்ளதாகவும் அறிய முடிகின்றது. (செ -4)

## அனர்த்த உயிரிழப்பு...

யின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன கருத்து வெளியிட்டுள்ளார்.

இயற்கை அனர்த்தம் ஒன்றில் உயிரிழந்த ஒருவருக்கு இப்போது வழங்கப்படும் ஒரு லட்சம் ரூபா நட்டஈடு வெறும் கண்துடைப்பேயாகும்.

யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கும் இவ்வாறான அற்பத்தொகையே நட்டஈடாக வழங்கப்பட்டு வந்தது.

எனினும், அவ்வாறு உயிரிழந்த ஒருவருக்கு 20 லட்சம் ரூபாவை நட்டஈடாக வழங்குமாறு இலங்கை நீதிமன்றம் ஒன்று அண்மையில் உத்தரவிட்டிருந்தமை கவனிக்கத்தக்கது.

எனவே, இயற்கை அனர்த்தம் ஒன்றில் உயிரிழந்த ஒருவருக்கு குறைந்த பட்சம் பத்து லட்சம் ரூபாவை நட்டஈடாக வழங்குவதே நியாயமாகும்.

அண்மைக்கால அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வெளிநாடுகள் தாராளமாக நிதியுதவி செய்துள்ளன.

இதில் சீன அரசு மாத்திரம் 40 கோடி ரூபாவை வழங்கியுள்ளது. இந்த அனர்த்தத்தில் சுமார் 300 பேர் உயிரிழக்க நேரிட்டுள்ளது.

அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா பத்து லட்சம் ரூபாவை வழங்கினாலும் சீன அரசு தந்த நிதியில் 30 கோடி ரூபா மாத்திரமே செலவாகும்.

அரசுக்கு 10 கோடி ரூபா மிஞ்சும். அத்தகைய நிலையில் உயிரிழந்தவருக்கு வெறும் ஒரு லட்சம் ரூபாவை வழங்கி பூசிமெழுகிப் பார்க்க அரசு முயற்சி செய்வது அநீதியின் உச்சகட்டம் எனவும் பந்துல குணவர்தன சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

## இயற்கையை ...

தெரிவித்துள்ளார்.

சுற்றுச் சூழல் தினத்தை (ஜீன் - 05) முன்னிட்டு பிரதமர் வெளியிட்டுள்ள செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில்,

சுற்றுச்சூழலைக் கருத்திற் கொள்ளாமலும், இயற்கை தொடர்பான ஆழமான உணர்வின்றி வாழ்வதன் மூலமுமான மோசமான நேரடி விளைவுகளை நாம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். உயிர்ப் பல்வகைமையின் தாயகமாகக் காணப்பட்ட எமது நாடு அந்தப் பல்வகைமையின் செழுமை, பெறுமதி மற்றும் அழகினை இழந்து வருவது கவலைக்குரிய விடயமாகும். எல்லையற்ற ஆசைகள மற்றும் சுயநலம் காரணமாக மேற்கொள்ளப்படும் மனித செயற்பாடுகளினால் இயற்கையின் சமநிலைத்தன்மை அற்றுப் போய் அதன் மொத்த இருப்பும் பிரச்சினைக்குரியதாக மாற்றப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழலுடன் ஒன்றிணைந்து வாழ்ந்த எமது வாழ்க்கை ஒழுங்குகள் மாற்றமடைந்தமை மற்றும் மாறிச் செல்லும் உலகில் முன்னேற்றத்தை தேடிச் செல்லும்போது இயற்கையினை கருத்திற் கொள்ளாமை என்பன இந்த துரதிஷ்டவசமான நிலைமை உருவாவதற்கு காரணமாகும்.

இவ்வாறான துன்பியல் நிலைமைகளைக கட்டுப்படுத்தல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் தொடர்பாக அரசாங்கத்திற்கு விசேட பொறுப்பு காணப்படுவதுடன், அதற்கு அனைத்து மக்களினதும் ஒத்துழைப்பும் அத்தியாவசியமானதாகும்.

மானிட இருப்புக்கும் உலகின் இருப்புக்கும் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதன் முக்கியத்துவம் தொடர்பாக தெளிவான புரிதலுடனும், பொறுப்புடனும் நாம் இன்று செயற்படாவிடின் அது மிகவும் மோசமாகவும், அழிவினை ஏற்படுத்தக் கூடியதாகவும் எமது எதிர்காலத்தை ஆக்கிரமித்து விடும்.

உலக சுற்றுச்சூழல் தினத்தைக் கொண்டாடும் இன்றைய தினத்தில் இயற்கை மீதான அன்பு, கௌரவம் மற்றும் அதன் மீதான கவனம் என்பவற்றை நாளாந்த வாழ்வின் ஓர் பகுதியாக மாற்றிக் கொள்ள அனைத்து இலங்கையருக்கும் அழைப்பு விடுக்கிறேன். சுற்றுச்சூழல் நேயத்தினை ஓர் நாளுடன் மாத்திரம் சுருக்கிக் கொள்ளாது அதனை வாழ்க்கை ஒழுங்காக மாற்றிக் கொள்வது நம் அனைவரினதும் பொறுப்பாகும் என பிரதமர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் தீர்த்தமெடுத்தல்!

(குருமன்காடு)

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு நேற்று தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு இடம்பெற்றது

இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். வரலாற்று சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை சிறப்பாக இடம் பெறவுள்ளது.

இந்த உற்சவத்தின் முன் நிகழ்வான தீர்த்தமெடுக்கும் நிகழ்வு நேற்று தீர்த்தக்கரையிலே பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் மத்தியில் சிறப்புற இடம்பெற்றது. தீர்த்தம் எடுக்கப்பட்டு காட்டு விநாயகர் ஆலயத்துக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு விளக்கேற்றப்படும்.

தொடர்ந்து எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை காட்டு விநாயகர் ஆலயத்திலிருந்து பண்டமெடுக்கப்பட்டு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தை வந்தடையும். பின்னர் அங்கு பொங்கல் உற்சவம் சிறப்புற இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-281)

## கர்ப்பிணி கொலை...

வத்தின் சந்தேகநபர்களின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் ஏ.எல்.எம் றியால் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறையில் கடந்த ஜனவரி மாதம் 24ஆம் திகதி கர்ப்பிணித் தாயொருவர் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார் என்பது தெரிந்ததே. (செ-11)

## கண்ணிவெடி...

வேண்டியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தின் பின்னரான மீள்குடியேற்றத்தினை துரிதப்படுத்தும் வகையில் பல்வேறு இடங்களிலும் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப் பள்ளி, பூநகரி ஆகிய பகுதிகளில் தற்போது வெடி பொருள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 579 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் வெடிப்பொருட்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இதில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கிளாலி, முகமாலை, இத்தாவில் போன்ற பகுதிகளில் 7.6 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்ற வேணடியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(செ-11)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஐ.நா கூட்டத்...

எதிர் பார்க்கப்படுகின்றது.

இக்கூட்டத் தொடர் இன்று 6-ம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 23ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

இதன் போது துணைக்கூட்டங்களை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சிவில் பாதுகாப்பு குழுக்களின் முன்னாள் தலைவர் சரத் வீரசேகரவும், சில பௌத்த அமைப்புகளும் கூட்டங்களுக்கு பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பொறுப்புக் தொடர்பிலான அறிக்கையானது எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம், 17ஆம் திகதிகளில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படவுள்ளன.

அத்துடன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 34ஆவது கூட்டத் தொடரில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் தொடர்பான ஆணையாளரின் அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள கூட்டத் தொடரின் போது சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## அனர்த்த பாதிப்பு...

கலந்துரையாடப்படுமெனவும் குறிப்பிட்டார்.

நேற்று பிற்பகல் மாத்தறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளித்தல் தொடர்பான விசேட கலந்துரையாடலில் பங்கேற்ற போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மாத்தறை மாவட்ட மக்களுக்கு நிவாரணமளிக்கும் திட்டம் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அழிவுற்ற வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கான காணிகளை இனங்கண்டு தேவையான காணிகளை சுவீகரிப்பதற்கான அறிக்கையை விரைவாக வழங்குமாறும், ஒரே திட்டத்துக்கமைய வீடுகளை நிர்மாணிக்குமாறும் ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி, வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் உதவிகளை ஒரு கணக்கில் வரவு வைத்து, வீடமைப்பு வேலைகளுக்கு பயன்படுத்துமாறும் தெரிவித்தார்.

வீடமைப்புக்கு உதவுவதற்கு பல நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அதற்கான திட்டத்தை தயாரிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அனர்த்தத்தினால் பெற்றோரை இழந்த பிள்ளைகள் தொடர்பான அறிக்கையை தன்னிடம் சமர்ப்பிக்குமாறும் அலுவலர்களுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய அனைத்து பிரதேச செயலக பிரிவுகளிலுமுள்ள பிரதேச செயலகங்களுக்கு தலா இரண்டு படகுகளை வழங்குமாறு ஆலோசனை வழங்கியதோடு பாதிக்கப்பட்ட வீடுகளை துப்புரவு செய்வதற்காக பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களிலுள்ள பவுசர்களை பயன்படுத்துமாறும் அலுவலர்களுக்கு கூறினார்.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான விசேட செயற்திட்டம் பிரதமர் அலுவலகத்தினால் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், அத்திட்டம் எதிர்காலத்தில் அமுல்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அமைச்சர்களான வஜிர அபேவர்த்தன, மங்கள சமரவீர, சாகல ரத்நாயக்க, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, முதலமைச்சர் ஷான் விஜேலால் டி சில்வா, பாராளுமன்ற உறுப்பினர்களான புத்திக பத்திரன, டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட மாவட்ட அரசியல் பிரதிநிதிகளும் மாவட்ட செயலாளர் பிரதீப் ரத்நாயக்கா உள்ளிட்ட அரச அலுவலர்கள், முப்படைத் தளபதிகள் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பு அதிகாரிகளும் இக் கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தார்கள். (செ-11)

## அரசியல் இலாப...

தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலை போராட்டத்தில் ஆரம்ப கால களச் செயற்பாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை இலங்கை பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் சயனைட் அருந்தி வீரச்சாவை தழுவிக்கொண்ட முதற் தற்கொடையாளரும்.

யாழ்.இந்து கல்லூரியின் மாணவனுமான தியாகி பொன்.சிவகுமாரனின் 43 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று அவரது சொந்த ஊரான உரும்பிராயில் அமைந்துள்ள உருவச்சிலை அருகே பிற்பகல் ஐந்து மணியளவில் நடைபெற்றது. இதன்போது உரையாற்றும் போதே செ.கஜேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மேற்குலகத்தின் கைப்பொம்மை ஒன்று ஆட்சி பீடம் ஏறிய பின்னர் போர்க் குற்றங்களை மேற்கொண்ட ராஜபக்ஷவை விசாரிக்காமல் கைவிடுவதற்காக உலக நாடுகளும், இந்த அரசும் - தமிழ் தலைமைகளும் கூட்டாக இணைந்து நினைவு கூரல் போன்றவற்றை நடத்துவதற்கு ஓரளவுக்கு இடமளிப்பதன் மூலம் ஏதோ இந்த ஆட்சியில் தமிழ் மக்களுக்கு சுதந்திரம் கிடைத்துள்ளது போன்று காட்டி ஏமாற்றும் நடவடிக்கையில் அனைத்து தரப்பும் ஈடுபட்டுள்ளது.

ஆகவே நாங்கள் ஒன்றை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். இந்த நினைவு கூரல்கள் என்பது எமக்கு முக்கியமானது தான். ஆனால் இவர்கள் தங்களுடைய உயிர்களை எந்த இலட்சியத்தை வரித்து கொண்டு தியாகம் செய்தார்களோ அந்த இலட்சியத்தை காற்றில் பறக்க விட்டு விட்டு ஒரு படத்தை வைத்து மாலை அணிவித்து கூட்டங்கள் நடத்தி அரசியலை வளர்த்து கொள்கின்றார்கள் தமிழ் தலைமைகள்.

விடுதலை வீரர்கள் தமது உயிர்களை தியாகம் செய்த போது தமது இலட்சியங்களை ஈடேற்றி கொள்ளுங்கள் என்பது தான் பிரதானமான அவாவாக இருந்தது. ஆகவே கிடைத்துள்ள இந்த சந்தர்ப்ப த்தில் நாங்கள் சரியாக செயற்பட வேண்டும்.

இந்த நினைவு கூரலுக்கான அங்கீகாரம் என்பது எமக்கு அனைத்துமே கிடைத்து விட்டது என்று பொருள்படாது. சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காகவே இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எமது உரிமைகளை வென்றெடுப்பதே உண்மையான அங்கீகாரமாகும். உலக நாடுகளை ஏமாற்றுவதற்காக இந்த அரசினாலும், தமிழ் தலைமைகளாலும் மேற்கொள்ளப்படுகின்ற கூட்டு சதிதான் இவை என்பதனை நாங்கள் விளங்கி கொள்ள வேண்டும். இந்த இடத்தில் இருந்து கொண்டு எமது உரிமையை வென்றெடுப்பதாக உறுதி கொண்டு பயணிக்க வேண்டும். அதுதான் இலட்சியங்களுக்காக மடிந்த அனைத்து மாவீரர்களுக்கும் நாங்கள் செய்யும் அஞ்சலியாகும்.

பல்லாயிரம் இளைஞர்கள் தாம் வாழ வேண்டிய வயதில் தமது இன்னுயிர்களை தியாகம் செய்துள்ளார்கள். இந்த தேசத்தில் எமது மக்கள் பாதுகாப்பாகவும் சுய கௌரவத்துடனும் வாழக்கூடிய போது எமது தேசத்தின் இருப்பு உறுதிப்படுத்தப்படுகின்ற போது தான் எமது மாவீரர்களின் கனவு ஈடேறும். அதனை நோக்கியதாக நாங்கள் பயணிப்போம் என கஜேந்திரன் தனது உரையில் தெரிவித்தார். (செ-)

## சந்தேக நபர் அடி...

மன்ற உத்தரவுக்கு அமைவாக வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்கள் மூவரில் ஒருவர் சிறையில் இறந்த நிலையில் மீதி இருவரும் நேற்று கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே சக சந்தேக நபர்கள் இவ்வாறு தெரிவித்தனர்

பிரஸ்தாப நபரை சிறைக்காவலர் ஒருவர் தாக்கிய பின்னர் கஞ்சாவை திருடிய குற்றச் சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளும் அவரது கை, கால் என்பவற்றை கட்டி வைத்து தலையில் தும்புத்தடியால் தாக்கினர்கள். அதனாலேயே அவர் இறந்துள்ளார் என குறித்த சந்தேக நபர்கள் தரப்பு சட்டத்தரணி மன்றில் தெரிவித்துள்ளார்

இதனையடுத்து வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதவான் நீதிமன்றின் நீதிபதி சந்தேக நபர்கள் இருவரதும் வாக்குமூலங்களை பொலிஸார் பதிவு செய்ய உத்தரவிட்டதுடன் மீண்டும் நாளை 7-ம் திகதி வழக்கை விசாரணைக்கு எடுக்க உத்தரவிட்டுள்ளார். (செ-312)

## துப்பாக்கி சூடு...

மட்டக்குளிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யூபிலி மாவத்தையில் இந்த சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் முச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த ஒருவர் மீது பிறிதொரு மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்தினால் பலத்த காயமடைந்த குறித்த நபர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 24 வயதான இசுரு எனப்படும் கயான் ஜீவந்த எனவும் அவர் சமித்புர மட்டக்குளிய பிரதேசத்தில் வசித்தவர் எனவும் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமைக்கான காரணம் இதுவரை அறியப்படாத நிலையில் சந்தேகநபர்களை விரைவாக கைது செய்ய பொலிஸ் குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது. (செ-11)


**ஆங்கில வகுப்பு**

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழிலில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0767070069

(9130) M.Suren

**கடை வாடகைக்கு தேவை**

கொழும்பில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு யாழ்.நகரில் அதன் கிளையை திறப்பதற்கு யாழ்.நகரை அண்டிய பகுதியில் 800 சதுர அடிக்கு குறையாத கடை வாடகைக்கு தேவை.

(9140) தொ.பே: 0774404475

**IELTS**

IELTS Test Prep

வெளிநாடுகளில் STUDENT VISA வில் படிப்பதற்கு அவசியமான IELTS எளிமையான முறையில் கற்பிக்கப்படும்



- வேலைசெய்வோரின் நலன்கருதி மாலை நேரங்களிலும் வார இறுதி நாட்களிலும் வகுப்புகள் நடைபெறும்
- பிரத்தியேக வகுப்புக்களும் (PERSONAL CLASSES) உண்டு.

தொடர்புகளுக்கு: 0768226236

49 A, சப்பல் லேன், யாழ்ப்பாணம் (#-673) V2 TRAVELS

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

மிகக்குறைந்த கட்டணத்தில்

UK - 5Kg மேற்பட்ட பொதி 800/=

UK - 11 Kg மேற்பட்ட பொதி 550/=

மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம்நெற் Pvt (Ltd)

T.P:- 077 755 4528

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி பருத்தித்துறை, சங்கானை, கிளிநொச்சி

**BEE FORT International School**

Spoken English with Grammar - 3 மாதம்

முதல் மாதம் கட்டணம் செலுத்தத் தேவை இல்லை. தமிழ் மூலமான விளக்கங்களுடன் அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும்.

Jaffna Branch

# 136, Navalar Road, Jaffna.

(பிறவுண் வீதி, சந்தி; New Science World அருகாமையில்)

(9139) T.P No: 0729566143

**உடனடி வேலைவாய்ப்பு**

Dynamic organization (Pvt) LTD

வடக்கில் ஆரம்பிக்கவிருக்கும் 06 புதிய கிளைகளுக்கு O/L, A/L படித்தவர்கள் தேவைப்படுகின்றனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் விரும்பத்தக்கது.

(C-8735)

■ வயதெல்லை 18 - 30 ■ தங்குமிட வசதி உண்டு. ■ சம்பளம் 15000 - 18000

தொடர்பு : 0775202903, 0772302795, 0215679001

**பங்குசந்தை முதலீட்டு ஆர்வலர்களுக்கான பயிற்சிப்பட்டறை**



யூன் 10, 17, 18 மற்றும் 24 ஆம் திகதிகளில்...

நிபுணத்துவம் மிக்க வளவாளர்களின் கருத்துப் பரிமாற்றங்கள்

- பங்குச்சந்தைப் புதிர்களும் அவற்றுக்கான விளக்கங்களும்.
- நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வும் அவற்றின் பிரயோகங்களும்.
- பங்கு வகைப்படுத்தல்கள் & பொருத்தமான தெரிவுகளும்.
- முதலீட்டு வழிகளும் அவற்றின் முகாமைத்துவமும்.

வார இறுதி நாட்களில் காலை 9.30 முதல் 12.30 வரை பங்குப்பரிவர்த்தனை யாழ்-கிளை கேட்போர் கூடத்தில் நடைபெறும்

(C-8734)

மொழி - தமிழ்

அனுமதிக்கட்டணம் ரூபா. 1000.00 (4-நாட்களுக்கும்)

அழையுங்கள் : 0212221455, 0777822014

& type stock & send sms

CSE COLOMBO STOCK EXCHANGE


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org